உதயன்

32 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 274 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 11, புதன் 27.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


27 AUG 2014

இலங்கை அணி வெற்றி



பக்கம் 19



# அரசியல் தீர்வை பெறுவதற்கு வெளிநாடுகளை நாடாதீர்கள்

## அரசின் மூத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவுரை

கொழும்பு, ஓக.27
அரசியல் தீர்வுத் திட்ட விவகாரத்தில் வெளிநாட்டு மோகத்தை கைவிட்டுவிட்டு உள்நாட்டுப் பொறிமுறை மீது நம்பிக்கை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியாவது பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவராகச் செயற்பட்ட வரும் கூட்டணி அரசின் மூத்த அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை காலங் கடத்தாது முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசும் முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் மற்றும் அந்த நாட்டு உயர்மட்ட பிரமுகர்களுடனான சந்திப்பு ஆகியன தொடர்பில் அரசியல் களத்தில் பல கோணங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அரசும், அரசைச் சார்ந்த கடும்போக்குடைய அமைப்புகளும் கூட்டமைப்பின் டில்லிப் பயணத்துக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்து வருகின்றன.

22 ஆம் பக்கம் பார்க்க

"தீர்வு விடயத்தில் வெளிநாட்டு மோகத்தைக் கைவிடுத்து உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை வைத்து கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்படவேண்டும்.

- திஸ்ஸ விதாரண

### தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

## இந்திய மீனவர் பிரச்சினை; நாளை மறுதினம் பேச்சு ஆரம்பம்



கொழும்பு, ஓக.27
இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் நாளை மறுதினம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அதிகாரிகள் மட்ட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. இருநாடுகளையும் சேர்ந்த 10 பேர் கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுக்களே பேச்சில் ஈடுபடவுள்ளன.

இலங்கைத் தரப்பில் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர்நிமல் ஹெட்டியாராச்சி, கடற்றொழில் அமைச்சின் ஆலோசகர் எஸ்.சுபசிங்க, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கமலத், கடற்படை அதிகாரி மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி ஆகியோர் உட்பட 10 பேரும், இந்தியத் தரப்பில் தலைமைச் செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், அரச ஆலோசகர் ஸ்ரீபால கிருஸ்ணன், அரச தலைமை சட்டத்தரணி சோமயாயி, மீன்வளத்துறைச் செயலாளர் விஜயகுமார், ஆணையாளர் பிலாராஜேஸ் உட்பட 10 பேர் கொண்ட குழுவும் பேச்சில் ஈடுபடவுள்ளன.

கொழும்பில் நடந்த இந்திய - இலங்கை மீனவர்கள் இடையிலான இரண்டாம்

22 ஆம் பக்கம் பார்க்க

## காணி அளவீட்டுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர் மக்கள்

புல்மோட்டையில் நேற்றுப் பெரும் பதற்றம்



திருகோணமலை, ஓக.27
திருகோணமலை புல்மோட்டையில் அரிசிமலைப் பகுதியில் விகாரைக்காக காணி, நில அளவை திணைக்களத்தினால் மேற்கொள்ளவிருந்த நில அளவீடு மக்களின் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டுள்ளது.

வடபகுதியில் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தினரின் தேவைகளுக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை அளவிடும் முயற்சிகள் பல பகுதிகளில் - பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் எதிர்ப்பால் முறியடிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் தற்போது கிழக்குப் பகுதியிலும் தமிழர்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரிசிமலைப்பகுதியில் உள்ள குறித்த 500 ஏக்கர் காணி பூஜாபூமி திட்டத்தின் கீழ் நில அளவை திணைக்களத்தால் அளவை செய்யப்படவிருந்தது. அதற்காக நில அளவைத்

22 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைப் பணியாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

இலங்கை நிலைமைகள் குறித்து ஐ.நாவிடம் மனித உரிமை அமைப்புகள் வேண்டுகோள்

கொழும்பு, ஓக.27
இலங்கையில் மனித உரிமை பணியாளர்க்ளுக்கும், தனிநபர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் மிரட்டல்கள், துன்புறுத்தல்கள் போன்றவற்றைக் கண்டிக்க வேண்டும். ஐ.நா. அமைப்புக்களுடன் தடையற்ற விதத்தில் அனைத்து நபர்களும் தொடர்பு கொள்

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை.

7 ஆம் திகதி பதவியேற்கிறார்



யாழ்ப்பாணம், ஓக. 27
ஜனநாயக போராட்டங்களைத் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கும் கோஷத்துடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக மாவை.சேனாதிராசா எதிர்வரும் 7 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

"கட்சித் தலைமையின் கோரிக்கைக்கு அமைவாக, தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக நான் பதவியேற்க சம்மதித்துள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசரின் மடு பயணம் மாற்றத்தை ஏற்படுத்தும்

இம்மானுவேல் அடிகளார் நம்பிக்கை

கொழும்பு, ஓக.27
மடு தேவாலயத்துக்கான பரிசுத்த பாப்பரசரின் பயணம், போரால் பாதிக்கப்பட்டவர்களின் தற்போதைய நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவியாக இருக்கும் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் இன்சைடர் இணையத்தளத்துக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"எதிர்வரும் ஜனவரி மாதம் 13 முதல் 15 ஆம் திகதிவரை மேற்கொள்ளவுள்ள தனது

22 ஆம் பக்கம் பார்க்க

## நிமிர்ந்தது வடக்கின் பொருளாதாரம் இரண்டு வருட தொடர் சரிவிலிருந்து



யாழ்ப்பாணம், ஓக. 27
கடந்த இரண்டு வருடங்களாக சரிவடைந்திருந்த வடக்கின் பொருளாதாரம் இரண்டு மாத காலமாக மீண்டு எழுந்து வருவதாக துறைசார் நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக நீடித்து நிலைக்கும் எனவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

வடக்கின் பொருளாதார நடவடிக்கை 2012ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து சரிவைச் சந்தித்தது. இந்த ஆண்டின் ஆரம்பம் வரையில் இந்தப் பாதிப்புக்கள் தொடர்ந்தன. இதனால் பல வர்த்தக நடவடிக்கைகள் முடங்கின. கடன் சுமை மற்

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருத்துவவியல் தொழில்வல்லுநர் பணிப்புறக்கணிப்பு தொடர்கின்றது

## சிகிச்சைகளுக்காக சென்றிருந்த நோயாளர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக.27

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் பணியாற்றும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் காலவரையறையற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தால், நோயாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர்கள் பணிப்புறக்கணிப்பை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது.



யாழ். போதனா வைத்தியசாலையில் காத்திருக்கும் நோயாளர்கள்.

மருந்து வழங்குபவர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர்கள், எக்ஸ் கதிர்ப் பிரிவினர் மற்றும் இயன் மருத்துவர் (பௌதிக சிகிச்சைப் பிரிவினர்) உட்பட 10 பிரிவினர் இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

முதலாம் வகுப்பு, உயர் வகுப்பு பதவிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அடிப்படையில் வழங்க வேண்டும், டிப்ளோமா ஆள்சேர்ப்பை நிறுத்தி பட்டதாரிகளை நியமனம் செய்ய வேண்டும், மருந்துக் கலவையாளர் நியமனத்தை நிறுத்தி மருந்தாளர்களை நியமிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவசர சிகிச்சைகளுக்கான பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்கதிர் எடுத்தல் என்பனவே நேற்று வைத்தியசாலைகளில் நடைபெற்றன. ஏனைய நோயாளர்கள் தமக்கான மருந்துகளைப் பெறுவதற்கு நீண்ட நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அதேவேளை, இந்தப் போராட்டம் மறு அறிவித்தல் வரை தொடரும் என்றும் - அதனால் நோயாளர்கள் மருத்துவமனைகளுக்கு வந்து சிரமப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அறிவித்துள்ளனர்.

(ற-4,9,106)

# ஜே.வி.பி. மீது சூடு; பொலிஸார் இருவர் காயம்

கொழும்பு, ஓக.27

மொனராகலை படல்கும்பரயில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தேர்தல் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த ஆதரவாளர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸார் இருவர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படல்கும்பர பிரதேச சபையின் தலைவர், பிரதித் தலைவர் உள்ளிட்ட குழுவினரே தாக்குதலை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர் என்று ஜே.வி.பி. முறைப்பாடு செய்துள்ளது.

பொலிஸார், பாதுகாப்புக் கடமையில் இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. (ற)





இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகே கடந்த 15 திகதி முதல் சமுத்திரம் மற்றும் கப்பல்துறை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக உள்ள இவர் கடந்த காலங்களில் கடற்படைக்கு ஆற்றிய சேவையைக் கருத்தில்கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பதவியை அவருக்கு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றிலை உமிழ்ந்தாலும் கூட இனி அரசு அபராதம் விதிக்கும்

## அநுர குமார திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 27

அனைத்துக்கும் வரி விதிக்கும் அரசு, வீதியில் வெற்றிலை எச்சில் துப்பினால் அதற்கு அபராதம் விதிக்கவுள்ளது என கூறியுள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க.

வெலிமடை, போகஹாகும்புர பகுதியில் இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ற)

# பொதுபல சேனாவுடன் இந்து சம்மேளனமும்

## விரைவில் உதயமாகின்றது புதிய அமைப்பு

கொழும்பு, ஓக.27

சிங்கள- பௌத்த அமைப்பான பொதுபல சேனாவும் அகில இலங்கை இந்து சம்மேளனமும் இணைந்து பௌத்த- இந்து தர்ம பாதுகாப்புச் சபை என்ற ஒன்றைப் புதிதாக உருவாக்கவுள்ளன.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் இந்து மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றமையாலேயே இப்படிப்பட்ட புதியதோர் அமைப்பை பொதுபல சேனாவுடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ளதாக அகில இலங்கை இந்து சம்மேளனம் நேற்று தெரிவித்தது. அத்துடன் பொதுபல சேனாவின் கொள்கைகளைத் தாம் வரவேற்பதாகவும் அந்த அமைப்பு இங்கு குறிப்பிட்டது.

கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று பொதுபல சேனாவின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, இந்து சம்மேளனத்தின் தலைவரான அருண்காந்த் மேற்கண்டவாறு புதிய அமைப்பு குறித்து விளக்கமளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டின் இரண்டாம் தரப்பான இந்து மக்கள் இன்று பெரும் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். சில அரச சார் பற்ற நிறுவனங்கள் வறுமையில் வாடும் இந்து மக் களை மதமாற்றம் செய்ய வலியுறுத்துகின்றன. அதனால், சர்வதேச தரப்பில், தமிழ் பேசும் மக்கள் கிறிஸ்தவர்களாகவே அடையாளம் காட்டப்படுகின்றனர். இந்தச் செயற்பாடானது இந்து தர்மத்துக்கு பெரும் விளைவை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

"இன்று வடமாகாணத்தில் ஒரு புத்தர் சிலையை வைத்தால்கூட நில ஆக்கிரமிப்பு எனத் தமிழ்த் தேசியக் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஆனால், அது அவரவர் மத உரிமையாகும். வடக்கில் வாழும் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் வழிபட அவர்களுக்கென ஒரு தனியான வழிபாட்டிடம் அவசியம். இதனைக் கருத்திற்கொண்டே அங்கு புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன. ஆகவே, இதனை நில ஆக்கிரமிப்பு என ஒருபோதும் கூற முடியாது" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்தோடு, புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படும் பௌத்த- இந்து தர்ம பாதுகாப்பு சபையானது தமது சுயலாபத்துக்காக ஆரம்பிக்கப்படவில்லை என்றும், நாட்டில் வாழும் தமிழ்- இந்து மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்ட அருண் காந்த், பொதுபல சேனாவின் கொள்கைகளைத் தாம் மிகவும் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**பொதுபல சேனாவின் கொள்கைகளை வரவேற்பதாகவும் கூறுகின்றது அகில இலங்கை இந்து சம்மேளனம்**

தமிழ் ஊடகங்கள் சிங்கள அமைப்புகள் குறித்த செய்திகளை மிகவும் மோசமான முறையில் வெளியிடுகின்றன என்று குற்றம் சுமத்திய அவர், இது வரையில் தமிழ் ஊடகங்களில் வெளியான சிங்கள- பௌத்த அமைப்புகள் குறித்த செய்திகள் அடங்கிய புத்தகம் ஒன்றை பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கினார்.

அதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த கலகொட அத்தே ஞானசார தேரர், நாட்டில், தமிழ்- இந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தாம் மகா நாயக்க தேரர்களிடம் பேச்சு நடத்த உள்ளனர் என்று தெரிவித்தார். அதுமட்டுமல்லாது, தாம் இனவாத செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்ப்பதாகவும், சமூக வளங்களை ஒன்றிணைக்கப் பாடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படாவிட்டால் பொதுவேட்பாளர் நிறுத்தப்படுவார்

## மாதுளவாவே சோபித தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.27


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்காவிட்டால் பொதுவேட்பாளர் ஒருவர் மக்கள் ஆதரவுடன் நிறுத்தப்படுவார் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளவாவே சோபித தேரர்.

கண்டியில் பிரதம மகாநாயக்கர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே தனது இயக்கத்தின் முக்கிய இலக்கு. பிரதம மகா நாயக்கர்களும் அதனை ஆதரிக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதியே முன்னர் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார். அவர் அதனை நிறைவேற்றாவிட்டால் அதற்காக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம்.

ஜனநாயகத்தை பாதுகாக்க நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அரச நிறுவகங்களின் அதிகாரம் சரியான கரங்களில் உள்ளதை உறுதிப்படுத்த 17ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 11 புதன்கிழமை (27.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 274

# ஐ.நா. பொதுச் சபையில் மஹிந்த உரையாற்ற அனுமதிக்கக் கூடாது

## டெசோ மாநாட்டில் நேற்றுத் தீர்மானம்

சென்னை, ஓகஸ்ட் 27

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐ.நா.சபை பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்ற அனுமதிக்கக்கூடாது என நேற்றுச் சென்னையில் நடைபெற்ற டெசோ அமைப்பின் அவசர கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

**அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியாவில் விசாரணை நடத்த அனுமதி வழங்குவதுடன் ஐ.நா.விசாரணைக் குழுவுக்கு விஸா வழங்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.**

டெசோ அமைப்பின் அவசரக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அந்தத் தீர்மானங்கள் வருமாறு:-

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் 25ஆம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## தீயில் முற்றாக எரிந்தது வீடு

கிளிநொச்சி,.ஓக.27

புலோப்பளை கிழக்கு கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பமொன்றின் வீடு நேற்றுக் காலை தீயில் முற்றாக எரிந்து நாசமானது.

மரியநாயகம் ஞானமலர் என்ற பெண்ணைக் குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பத்தின் வீடே நேற்றுக் காலை 9.00 மணியளவில் எரிந்து நாசமாகியுள்ளது.

வீட்டில் உள்ள அனைவரும் வெளியில் சென்றிருந்த வேளை வீடு தீயில் முற்றாக எரிந்தமையினால் அங்கிருந்த அனைத்துப் பொருள்களும் நாசமாகின. சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி அரச செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவு குடும்பத்துக்கான கூடாரம் உட்பட உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

தீவிபத்து தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-18)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் போராட்டம்

### செப். 3 இல் டெசோ ஏற்பாடு

சென்னை, ஓக.27

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தாம் நிறைவேற்றிய தீர்மானங்களை வலியுறுத்தி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று டெசோ அமைப்பு அறிவித்துள்ளது.

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தலைமையில் தமிழீழ ஆதரவு அமைப்பின் அவசரக் கூட்டம் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் டெசோ அமைப்பைச் சேர்ந்த க.அன்பழகன், மு.க.ஸ்ராலின், கே.வீரமணி, தொல் திருமாவளவன், சுப. வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும். ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு இந்தியா விஸா வழங்க வேண்டும், மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(22ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு முன்னர் படகுகள் விடுவிப்பு

### தமிழக மீனவருக்கு உறுதிமொழி

சென்னை, ஓக.27

பேச்சுக்கு முன்னர் இலங்கை அரசால் தடுத்துவைக்கப்பட்டுள்ள படகுகள் விடுவிக்கப்படும் என மத்திய இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் உட்பட மீன்வளத்துறை அதிகாரிகள் தமிழக மீனவர்களுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்

(22ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் தொழில் பேட்டை இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.27

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இன்று முற்பகல் 11 மணிக்குவைபவ ரீதியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியின் சந்தையாக தொடர்ந்தும் வடமாகாணம்

### போர் முடிவுற்று 5 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் எந்தப் பயனும் இல்லை என்கிறார் ஜெயசேகரம்

யாழ்ப்பாணம், ஓக.27

வடபகுதி தொடர்ந்தும் தென்பகுதியின் சந்தையாக, பொருள்களை வாங்கி விற்கும் இடமாகவே இருந்து வருகின்றது. போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் முன்னர் இயங்கிய தொழிற்சாலைகளைக் கூட அரசு இங்கு இன்னமும் மீளத் திறக்கவில்லை என்று யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் இலங்கை அரசைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்பு அட்டைகள் வழங்கும் நிகழ்வு, வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு வர்த்தகர்கள் போரினால் பாதிக்கப்பட்டிருந்தாலும், நாட்டின் தேசிய வளர்ச்சியில் அவர்கள் பங்களிப்புச் செய்து

(22ஆம் பக்கம் பார்க்க)

## வருமான வரி செலுத்துவோர் யாழ்.மாவட்டத்தில் 3,000 பேர்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரம் பேர் வரை வருமான வரி செலுத்துபவர்களாக உள்ளனர் என்றும், அவர்களில் 9 பேர் 10 லட்சம் ரூபாவுக்கு மேலும், 12 பேர் 5 லட்சம் ரூபாவுக்கு மேலும் வரி செலுத்துபவர்கள் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்தியப் பிரதி ஆணையாளர் மு.கணேசராசா தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால், வரி செலுத்துநர்களுக்கான தங்கம் மற்றும் வெள்ளி சிறப்பு அட்டைகள் வழங்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் சரி, மலையகத்திலும் சரி, கொழும்பிலும் சரி எங்கு இருக்கின்ற தமிழ்ர்களாயினும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடமிருந்து நிறையவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். இங்குள்ள கலாசாரம், பழக்கவழக்கம், வாழ்வாதார முறைமை அனைத்தையும் கற்றுக் கொள்ளவேண்டும்.

நான் தற்போது மட்டக்களப்பிலும் ஆணையாளராக இருக்கின்றேன். அங்கு சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையினர் 500 பேரை

(22ஆம் பக்கம் பார்க்க)



கைதடி - மானிப்பாய் வீதியில் வேகமாகச் சென்ற கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கோப்பாய் பாலத்துக்கு அருகே வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்தமையால் சேதத்துக்குள்ளாகியது. (த-4)

## 'ஹாண்டில் லொக்' போடப்படாத மோட்டார் சைக்கிள்கள் திருட்டு

### பாகங்களாக்கி விற்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பூட்டுப் போட்டுவிட்டும் ஹாண்டில் லொக் போடப்படாமல் விடப்படும் மோட்டார் சைக்கிள்கள் திருடப்படுகின்றன. எனவே பூட்டு, 'ஹாண்டில் லொக்' என்பன போடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திவிட்டு செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏ-9 வீதியில் மாம்பழம் சந்தி உட்பட பல பகுதிகளிலும், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் முன்னர் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றில் சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களைத் திருடுபவர்கள் அவற்றை மறைவிடங்களில் கொண்டு சென்று அவற்றைப் பாகங்களாக கழற்றிப் பிறருக்கு விற்பனை செய்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
செல்வி வே. பத்மலோஜினி அவர்களின்
அன்புச் சகோதரன்

### வே. ஜெயராஜசிங்கம்

(தொழில்நுட்பவியலாளர் சிங்கர் கொம்பனி-கொழும்பு)

அவர்கள் 22.08.2014 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

(51258) (10.6.1)

## நல்லூரில் இன்று 'குசேலர்' இசை நாடகம்


யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப் பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனு சரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு 'குசேலர்' இசை நாடகம் இடம்பெறும். யாழ். திருமறைக் கலா மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.ஜோன்சன் ராஜ்குமாரினால் புதிதாக உருவாக்கப்பட்ட இந்த இசை நாட கத்தை ஆசிரியர் இ.ஜெயகாந்தன் நெறிப்படுத்துவார்.

(ஓ-110)

## கண்ணீர் அஞ்சலி

### ஸ்ரீமான் பொன்னம்பலம் விஜயராஜன் (விஜயன்)



தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி என்னுமிடத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட எமது பாடசாலையின் ஓய்வு ஆசிரியர் திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் அவர்களின் அன்பு மகனும் எமது பாடசாலையின் பழைய மாணவனும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் லண்டன் கிளையின் முக்கிய பிரமுகரும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பெருமளவு நிதியை வழங்கிய பொன்னம்பலம் விஜயன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம்
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.

(47257) (12.3.6)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிட மாகவும், U.K.ஐ வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தர லிங்கம் நேற்று முன்தினம் (25.08.2014) திங்கட்கிழமை U.K.யில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவபாக்கியத்தின் பாசமிகு மகனும், தவயோகசிந்தாமணி (U.K), பத்மநாதன், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், சொர்ணலிங்கம் (U.K), விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற இராச லிங்கம், சண்முகலிங்கம் (Germany) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.தியாகராஜா (U.K), காலஞ்சென்ற ஞானசக்தி, மீனாம்பிகை (Germany) விஜயா (U.K), காலஞ்சென்ற கிருஷ்னானந்தா, ஞானேஸ்வரதேவி, இந்திரலேகா(Germany) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.08.2014 ஞாயிற்றுக்கிழமை U.Kயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.H.பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
00442085502803/00441273703598
00442084324761/004915210130778
0217900205

(51246) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டுகள் எட்டு



அமரர்
### சுப்பிரமணியம் பசுபதி

தோற்றம் : 29.11.1935
மறைவு : 26.08.2006
திதி: துதியை
27.08.2014

ஆண்டுகள் எட்டு ஆனதுவோ அப்பா!
நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

'பசுபதீயம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## முடியாத் துயர் சுமக்கும்
# முதலாம் ஆண்டு நினைவேந்தல்



அமரர் கனகரத்தினம்
### சிவராசா

உருவாய் மண்ணில்
11 . 06 . 1949

அருவாய் விண்ணில்
07 . 09 . 2013

(முன்னாள் முள்ளிப்பற்று பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர்)

திதி: வளர்பிறை துதியை
(27.08.2014)

கோபுரமாய் ஓங்கி குளிர்நிலவாய் ஒளியீந்து
குலங்காத்த எங்களப்பா! எங்கு சென்றீர்?
நோவு நொடியின்றி நும் அன்பால் எம்மையெல்லாம்
நோகாமற் காத்தவரே நொந்தோம் அப்பா?
தூவு மலர் கொண்டு தூவித் துயர் சுமந்து
துடிக்கின்றோம் அப்பா எம் துயர் காணீரோ?
மேவும் இறைபாதம் மேன்மையுற நீரமர
அர்ச்சித்தோம்! அஞ்சலித்தோம்! நாமம் வாழும்.

கொற்றாண்டார்குளம்,
இயக்கச்சி.

நினைவு சுமந்து வாடும்
குடும்பத்தினர்.

(51213) (4.6.3)

## கரணவாயில் சமூக நல யாகம்

நெல்லியடி, ஓக.27
வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடி சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அன்னையின் அருளாசியுடன் சமூக நல யாகம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.
ஆன்மிக குரு அருள்திரு பங்காரு அடிகளாரின் அருளாசியுடன் யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக எதிர்வரும் ஞாயிறு காலை 9 மணிக்கு யாகம் நடைபெறும். (ஓ)



நோர்வேயில் உள்ள கைதடி வாழ். மக்களின் நிதிப் பங்களிப்புடன் கைதடி பிரதேசத்தில் வாழும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 7 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (வ-9)

## கறி முருங்கை செய்கை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக.27
கறி முருங்கை செய்கையில் ஈடுபட்ட செய்கையாளர்கள் அந்தச் செய்கையில் அதிக நாட்டம் காட்டுவதைத் தவிர்த்துள்ளனர்.
முருங்கைக்காயின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததை அடுத்தே கறி முருங்கை செய்கையை கைவிட்டுள்ளனர்.
தற்போதைய காலநிலைக்கு ஏற்றவாறு முருங்கை மரங்களில் அதிகப் படியான விளைச்சல் ஏற்பட்டதன் காரணத்தால் முருங்கைக் காய்களின் விலை திடீரென சரிவடைந்தன.
சந்தைகளில் முருங்கைக் காய்கள் போதியளவு வந்து சேர்ந்ததால் அவற்றைச் சந்தைப்படுத்தமுடியாது செய்கையாளர்கள் சிரமப்பட்டனர். (வ-7)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.27
கோண்டாவில் மேற்கு 'கந்தர்வளவு' ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் (காளி கோவில்) நூதன பஞ்சதள ராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.10 மணி தொடக்கம் 7.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறும். பிரதிஷ்டா பிரதம குருவாக பிரம்மஸ்ரீ சி.பாலசண்முகக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி பத்து நாள்கள் நடைபெறும். (ஓ)

♦♦♦

எழுதுமட்டுவாழ் பெரியகேணி சிவஞானப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் காலை 9 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும். எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும். பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ நா.குகனேசக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். (ஓ)

## ஆலயம் அருகே வெடிக்காத ஷெல் மீட்டனர் பொலிஸார்

தென்மராட்சி,ஓக.27
சாவகச்சேரி வடக்கு மண்டுவில் சோலை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீதியோரத்தில் வெடிக்காத ஷெல்லொன்று சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்றது.
சாவகச்சேரி வடக்கு சோலை அம்மன் கோயிலுக்கும் அருகில் உள்ள முருகமூர்த்தி கோயிலுக்கும் இடையில் கடந்த வருடம் புதிதாக காப்பெற் வீதி அமைக்கப்பட்டது. இந்த வீதியோரத்தில் வெடிக்காத நிலையில் ஷெல்லொன்று காணப்பட்டதையடுத்து அந்தப் பிரிவு கிராம அலுவலரான பொ.லோகேந்திரனுக்கு பொதுமக்கள் அது பற்றி அறிவித்தனர். அங்கு வந்த கிராம அலுவலர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துவிட்டு ஷெல் காணப்பட்ட இடத்தைச் சுற்றி மறைப்பு வேலி அமைத்தார். அங்கு வந்த பொலிஸார் ஷெல்லை மீட்டுச் சென்றனர்.
இந்த ஷெல்லை இனந்தெரியாதோர் இங்கு வைத்துவிட்டுச் சென்றிருக்கலாமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-9)

## 'சிறைக் கூண்டில்' தீர்த்தோற்சவம்

நல்லைக் கந்தனை தமது உடைமையாக்க எல்லோரும் விரும்புகின்றனர். முருகனின் அருள் ஒரு கணம் கிடைத்தால் அதுவே போதும் என்ற பக்திப் பரவசம் அடியவர்கள் யாவருக்கும் இருக்கின்றமை நியாயமானது. யாழ்ப்பாண சைவப் பாரம்பரியத்தை, கந்தபுராணக் கலாசாரத்தை நீண்டு நிலைக்க வைத்த பெருமை நல்லூர்க் கந்தனுக்கு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து தற்போதைய ஆட்சி வரை உண்டு. 1995 ஆம் ஆண்டின் இடம்பெயர்வுக்குப் பின்னர் மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்தபோது மக்கள் ஒருவரோடு ஒருவர் கூடிக் கதைக்க முடியாத சூழலில்கூட முழு யாழ்ப்பாண சைவ அடியவர்கள் வெள்ளி, செவ்வாய் நாள்களில் நல்லூரில் ஒன்றுகூடி இறைவனை வழிபட்டனர். இது யாழ்ப்பாணச் சமூக ஒருங்கிசைவின் ஓர் அசைக்க முடியாத ஆத்மிகத் தலமாகும். புலம்பெயர் மக்களும் திருவிழாவுக்காக வருவது ஆத்மிக ஈர்ப்பினான பாசமே ஆகும்.
தீர்த்தத் திருவிழாவில் ஒரு சில இளைஞரின் தவறான செயல்களால் ஆலயத் திருக்கேணி இன்று புனிதத்தை இழந்து ஒரு சிறைக்கூடம் போலவே காட்சி அளித்தது. ஐந்து கம்பிகளுக்கு ஒரு காவிக் காற்சட்டை அணிந்த காவல் துறையினர் என்ற அளவில் காவல் அளிக்கப்பட்டது. இந்தக் காட்சி வெலிக்கடை சிறைச்சாலையையே ஞாபகமூட்டியது. முருகன், மக்கள் சிறை வைக்கப்பட்டு உள்ளார்களா என நினைத்தாரோ அல்லது மக்கள் முருகன் சிறை வைக்கப்பட்டுள்ளாரா என நினைத்தார்களோ தெரியவில்லை. அன்றேல் சிறைகளில் வருடக் கணக்கில் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிற எமது இளம் சந்ததியைப் பற்றி ஒரு கணம் யோசி என காட்சிப்படுத்தினாரோ தெரியவில்லை.
ஆலய வெளி வீதியில் வைக்கப்பட்ட படங்களும் சூரனுக்கு வைக்கப்பட்ட கட் அவுட்டுக்கள் போல இருந்தன.
இவை யாவும் தமிழர்களைக் கலாசாரப் பண்பாட்டில் கீழ் நோக்கிச் செல்ல வைக்கும் விதத்தில் செயற்படுத்தப்படும் சூழ்ச்சிகள் ஆகும்.

முருகனடியான்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் - வண்ணையம்பதி - தட்டாதெரு அருள்மிகு கலாஜோதி சிவயோக முனீஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகதின மணவாளக்கோல உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். மாலை 4 மணியளவில் விசேட பூசை நடைபெற்று சுவாமி வெளிவீதிப் பிரதட்சணம் நடைபெறும். (ஓ)

♦♦♦

முல்லை திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் சதுர்த்தி விழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு அன்னதான நிகழ்வு இடம்பெறும். (ஓ)

♦♦♦

மண்டைதீவு திருவெண்காடு திருவருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.35 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. அன்று இரவு 9 மணிக்கு கொடியிறக்கத்துடன் உற்சவம் நிறைவுபெறும். மஹோற்சவக் கிரியைகள் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ஓ)


# பனை அபிவிருத்திச் சபை
# තල් සංවර්ධන මණ්ඩලය
# PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

## INVITATION FOR BIDS

1. **The Chairman of Palmyrah Development Board**, National housing Secretariat, Kandy Road, Jaffna. invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through Limited Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualification requirements are indicated in Schedule 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
5. Interested bidders may obtain further information from the Consultant Engineer, Tel: 077 7758689 and inspect the bidding documents free of charge **at the office of Swiss Labour Assistance-SAH, No 232,Thirunakar Road, Kilinochchi, from 9.00 hrs to 15.00 hrs during normal working days.**
6. A complete set of Bidding Documents in English language may be purchased by bidders on submission of a written application to **P.Seevarathinam,The Chairman, Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna & Palmyrah Development Board, District Office, Mankulam, Mullaitivu. from 27.08. 2014 until on 10.09. 2014 from 09.00 hrs. to 15.00 hrs.** upon payment of a non-refundable fee of Rs. 1,000.00. The method of payment will be in cash to the Palmyrah Development Board.
7. Sealed bids shall be delivered or sent by registered post in duplicate to **The Chairman, Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna.** by **14.30 hrs on 10.09.2014**. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. **Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.**

| Bid ID. | Description of Works | Estimated Cost (Million) | Construction Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| VaReSD O/01/2014 | Construction of Handicraft sale center | 1.8 | 4 Months | C8 (Building) | 18,000.00 | 27-11-2014 |

9. Bids shall be valid for a period of **90 Days** from the date of closing of Bids or any extended period.
10. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
    - In the form included in Section 9 in the Bidding document.
    - In favour of "The Chairman, Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna".
    - Issued by one of the agencies indicated in clause 16.0 of the Schedule.
11. Pre-bid meeting will be held at Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna. at 14.30 hrs. On 11.09.2014.

**The Chairman,
Palmyrah Development Board,
National housing Secretariat,
Kandy Road, Jaffna.
25-08-2014**

(C/16179)(12.3.6)



**2015 Chemistry Personal Classes**
Basic, inorganic, Organic, Physical,
கடந்தகால வினாக்கள் ஆசிரியரால்
B.Sc. (Cey.) M.Sc. (Cey.) Chemistry
கற்பிக்கப்படும்.
(51056) (4.6.3) தொ.பே:077 603 8913

**மணமகள்கள் தேவை**
01.1979 ஆம் ஆண்டு பிறந்த பொறியியலாளர்
02.1979 ஆம் ஆண்டு பிறந்த ஆசிரியர்
03.1982 ஆம் ஆண்டு பிறந்த சமுர்த்தி உத்தியோகத்தர்
தொ.பே: 076 700 6543. (51244) (4.6.3)

**தோட்டக்காணி விற்பனைக்கு**
கோப்பாய், இராசவீதியில் றோட்டுக்கு அருகில் 3¾ நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 076 544 6750
077 908 0257
(சி.15821) (45.3.6)

**வீடு, காணி விற்பனைக்குண்டு**
மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திற்கு செல்லும் வீதியில் 78 பரப்பு தென்னந்தோப்புக் காணி சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 959 9419 (49749) (4.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 - 10 - 1943

மறைவு
07 - 09 - 2013

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும்
இளவாலை மற்றும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட

**திருமதி பத்மராணி தில்லைநாதன்**

திதி: பூர்வபக்க துதியை

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்,
எங்கள் குடும்ப விளக்காய் இருந்த அம்மாவே!
பண்புடன் எங்களை ஆளாக்கி - பாரினிலே
உயர வைத்த எங்கள் குல தெய்வமே அம்மா!
ஆண்டு ஒன்று சென்றாலும் அழுது தீர்க்க முடியவில்லை அம்மா!
ஆயிரம் சொந்தங்கள் அருகினிலே இருந்தாலும்
உங்களைப் போல் யார் வருவார் அம்மா!
எம்மைப் பெற்றெடுத்து பெயர் தொடுத்து பாசத்தால் எம்மைக் குளிப்பாட்டி
நெஞ்சம் நிறை நேசத்தை எமக்களித்து பூவோடு தேனான வாழ்க்கையிலே
இன்னும் எம்மோடு இருப்பீர்கள் என நாம் இன்புற்றிருந்த வேளை
வாழ்ந்தது போதுமென்றா அம்மா! வானகம் சென்றீர்கள்!
கானகமாய் தோன்றுதம்மா நீங்கள் வழந்துவந்த வீடு
நெஞ்சுமுட்டிப் போகுதம்மா நீங்கள் இல்லா வாழ்வு
கேட்டுப் பார்த்தோம் அவன் தருவானென
கூட்டிக் கழித்தவன் கூறுகின்றான் இதுதான் முடிவென்று
ஆண்டவன் போட்ட புள்ளியை மாற்ற அருகதை எமக்குக் கிடையாதே!
உங்கள் பாதமலர் தினம் பணிந்து

என்றும் நீங்காத நினைவுகளுடன்
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

**உடையார் வளவு,**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**
**சுன்னாகம்.**

# 'திவிநெகும' திட்டத்தின் ஆரம்பவிழா மன்னாரில்



ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள்

மன்னார், ஓக.27

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக (திவிநெகும) மாற்றப்பட்டுள்ள நிலையில் அதன் தொடக்க விழா நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

திவிநெகும திட்டத்தின் மன்னார் மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகமும்,மாவட்ட அரச அதிபருமான எம்.வை. எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அமைச்சர் றிஷாத் பதியுதீன்,வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாரூக்,முத்தலிப் பாபா பாரூக், திவிநெகும திட்டத்தின் தலைமை மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆர்.எச்.ஏ.குமாரசிறி,வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமாகக் (திவிநெகும) கடந்த ஜனவரி மாதம் 03 ஆம் திகதி மாற்றப்பட்டது.

இந்த நிலையில் அதன் தொடக்க விழாவும், உத்தியோகத்தர்கள்,சமூக மட்டத் தலைவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வும் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் 258 பேர் மற்றும் பிரதேச செயலாளர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள் சமூக மட்டத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-56)

## அதிக விலையில் அரிசி விற்பனை

கிளிநொச்சி, ஓக 27

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதி கூடிய விலைகளில் அரிசி விற்பனை செய்யப்படுவதால் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளில் அரிசி விற்பனை செய்யப்படுவதில்லை எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் அதி கூடிய விலைகளில் அதாவது ஒரு கிலோ அரிசி 100 ரூபா முதல் 110 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன.



நியாயமான விலையில் அரிசியைப் பெறமுடியாமல் தாம் கஷ்டப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

எனவே வர்த்தகர்கள் அரிசியின் தரத்துக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் அதனை விற்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(த-55-426)

# புலமைச்சுடரால் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் போட்டி முடிவுகள்

**இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக புலமைச்சுடரால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

**இப்போட்டியானது முப்பது வினாக்களைக்கொண்டு ஒவ்வொரு தொகுதியிலும் ஐந்து வினாக்கள் உள்ளடங்கலாக மொத்தமாக நூற்று ஐம்பது வினாக்களில் அதிகூடிய வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதிய மாணவர்கள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.**

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் புலமைச்சுடர் ஆசிரியர் பீடம் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

**முதலாம் பரிசு - ரூபா 20,000/-** | **இரண்டாம் பரிசு - ரூபா 10,000/-** | **மூன்றாம் பரிசு - ரூபா 5,000/-**

**மற்றும் ரூபா – 2000/– பெறுமதியான பத்து ஆறுதல் பரிசில்கள்**

**வெற்றியீட்டிய மாணவச்செல்வங்கள்**

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| M.R.F அஹ்ரா<br>மட்/மீரா பாலிகா தேசிய பாடசாலை | தி.டர்ஷிகா<br>மட்/செங்கலடி மத்திய கல்லூரி | த.ஹட்சின்<br>கொ/விவேகானந்தாக் கல்லூரி. |

## ஆறுதல் பரிசு பெறுவோர்

| | | | | |
|---|---|---|---|---|
| யோ.ஷங்கீத்<br>மட்/ வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம் | M.A.F. அப்ரோஸ்<br>அல். அக்ஷா தேசிய பாடசாலை | அ. லீனஸ்<br>மட்/ புனித மிக்கேல் கல்லூரி | கிறிஷோறா சேவியர்<br>மன்/ புனித சவேரியர் பெண்கள் கல்லூரி | இரத்தினவேல் டினோஜன்<br>யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம் |
| ரா.துலக்சன்குமார்<br>புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி. ஹட்டன் | பு.லக்ஷிகா<br>தி/ ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி. | நி.அபிஷன்<br>கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம். | கோடீஸ்வரன் தவசீலன்<br>யா/ நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலயம் | த.தனுசியன்<br>யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் |

குறிப்பு:- பரிசு பெற்றவர்கள் 071 6850005 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**2015/2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் தரம் 3, 4 மாணவர்களுக்கான புலமைச்சுடர் வழிகாட்டல் கையேடானது செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து வெளிவருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

## இந்தியா - பாக்.விவகாரம்; பேசி சுமுகத் தீர்வு காணுங்கள்

### ஐ.நா. பொதுச்செயலாளர் வலியுறுத்து


பான் கி மூன்

நியூகோர்க், ஓக.27
இந்தியா-பாகிஸ்தான்இடையே நிலவும் பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் சுமுகமான தீர்வு காணுமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் அறிவுறுத்தியுள்ளார்.
இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 25 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த செயலர்கள் தரப்பிலான பேச்சு நிறுத்தப்பட்டது. பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித், காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்களைச் சந்தித்துப் பேசியதாலும், எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறித் தாக்குதல் நடத்தி வருவதாலும் பேச்சை நிறுத்தப்போவதாக இந்தியா அறிவித்தது.
இந்தநிலையில், தடைப்பட்ட பேச்சைத் தொடர வேண்டும், இரு நாடுகளுக்கும் இடையே அமைதியை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும் என்று ஐ.நா. அறிவுறுத்தியுள்ளதாக அதன் செய்தித்தொடர்பாளர் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அனுப்பியுள்ள தகவல் தெரிவிக்கின்றது.
இருப்பினும், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சை மீண்டும் தொடர ஐ.நா. தலைவர் தலையீடு இருக்குமா என்ற கேள்விக்கு அந்த அறிக்கையில் பதில் ஏதும் இல்லை.
இம்மாதம் தொடக்கம் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மொத்தம் 23 முறை அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்கு இந்தியத்தரப்பிலும் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. இதைப் பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜேட்லியும் உறுதி செய்துள்ளார். (வ)

# அமெரிக்காவுக்கு ஆபத்து ஏற்பட்டால் நேரடிப் போர்

### அந்தநாட்டு படைகளின் தலைமைத் தளபதி கூறுகிறார்


மார்ட்டின் டெம்ப்ஸி

வொஷிங்டன், ஓக.27
"ஐ.எஸ். பயங்கரவாதிகளால் அமெரிக்காவுக்கு ஆபத்து வருமானால், அந்த அமைப்புடன் நேரடியாகப் போரிடுவோம்' என்று அமெரிக்க கூட்டுப் படைகளின் தலைமைத் தளபதி மார்ட்டின் டெம்ப்ஸி தெரிவித்துள்ளார்.
இராணுவ விமானம் ஒன்றில் அவர் ஆப்கனிஸ்தானுக்கு ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்றார். அப்போது செய்தியாளர்களிடம் பேசியபோதே இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:
இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் தற்போது ஈராக் மற்றும் சிரியா பகுதிகளுக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர்.
அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்கும் திட்டம் எதுவும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.
ஒருவேளை அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகளுக்கு அவர்களால் ஆபத்து என்று திட்டவட்டமாகத் தெரிய வந்தால், அந்த அமைப்புடன் அமெரிக்க இராணுவம் நேரடியாகப் போரிட வேண்டும் என்று பரிந்துரைப்பேன்.
ஐ.எஸ்.ஸுக்கு எதிரான போரில், அருகிலுள்ள ஜோர்டான், சவூதி அரேபியா, துருக்கி ஆகிய நட்பு நாடுகள் எங்களுக்கு உறுதுணையாக இருக்கும். ஈவு இரக்க மற்ற ஐ.எஸ். அமைப்பால், மேற்கண்ட எல்லா நாடுகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளது"- என்றார். (வ)

## உக்ரைன் நாடாளுமன்றம் கலைப்பு

உக்ரைன், ஓக.27
உக்ரைன் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கலைக்கப்பட்டதுடன் தேர்தல் திகதியை அறிவித்தார் அந்த நாட்டு ஜனாதிபதி பெட்ரோ போரோ ஷென்கோ.
இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் உள்நாட்டு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:
உக்ரைனில் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நீடிக்கிறது. இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்நாட்டுப் போரால் உயிரிழந்துள்ளனர். நாடாளுமன்றத்தின் பிரிவினைவாதிகளுடன், தீவிரவாதிகள் கூட்டு வைத்துள்ளனர். பெரும்பாலான குடிமக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல் தூய்மையான ஒரு நாடாளுமன்றத்தை ஏற்படுத்த தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு வரும் ஒக்ரோபர் 26 ஆம் திகதி தேர்தல் நடக்க உள்ளதாக அறி வித்தார். (வ)

## எபோலா எதிர்ப்பு மருந்து உண்ட மருத்துவர் சாவு

மான்ரோவியா, ஓக.27
லைபீரியாவில் எபோலா வைரஸ் தாக்கப்பட்ட 3 மருத்துவர்களுக்குச் சோதனை அடிப்படையில் இசட்மாப் என்ற மருந்து கொடுக்கப்பட்டது. அந்த மருந்து கொடுக்கப்பட்ட மருத்துவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா உயிர்கொல்லி வைரஸ் பரவி வருகிறது. அதிலும் குறிப்பாக லைபீரியாவில்தான் இந்த வைரஸின் தாக்கம் அதிகம் உள்ளது. இந்த நிலையில் லைபீரிய ஜனாதிபதி எல்லன் ஜான்சன் சர்லீபின் வேண்டுகோளை ஏற்று அமெரிக்கா எபோலா காய்ச்சலுக்கு தான் தயாரித்த 'இசட்மாப்' என்ற மருந்தை அளித்தது. அந்த மருந்து சோதனை அடிப்படையில் லைபீரியாவைச் சேர்ந்த எபோலா வைரஸ் தாக்கிய 3 மருத்துவர்களுக்கு கொடுக்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அவர்களின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிவதாக லைபீரிய அரசு அறிவித்தது. இந்தநிலையில் 'இசட்மாப்' மருந்து கொடுக்கப்பட்ட மருத்துவர்களில் ஒருவரான ஆபிரகாம் போர்பர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.
மேலும் லைபீரியாவில் சேவை செய்த ஸ்பெயினைச் சேர்ந்த பாதிரியாரை எபோலா வைரஸ் தாக்கியது. அவர் சிகிச்சை பயனின்றி உயிர் இழந்தார். (வ)


தென் கொரியாவின் இரண்டாவது பெரிய நகரமான பூசனில் கடும் மழை பெய்துவருகிறது. பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. அதில் பயணித்தவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நான்கு பேரைக் காணவில்லை. பஸ்ஸை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ)

## நைஜீரியாவின் வடகிழக்கை தனிநாடாக அறிவித்தது போகோ ஹாரம் இயக்கம்

### அடியோடு நிராகரித்தது அந்நாட்டு அரசு



க்வோஸா, ஓக.27
நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியை தனிநாடாகப் பிரகடனப்படுத்தியது போகோ ஹாரம் தீவிரவாத இயக்கம். எனினும் அந்தநாட்டு அரசு அதனை நிராகரித்துள்ளது.
நைஜீரியாவில் போகோ ஹாரம் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் அங்குள்ள பல கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி வந்தனர். கடந்த 2 மாதங்களாக வட கிழக்கு பகுதியில் உள்ள நகரங்களையும் கிராமங்களையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர் போகோ ஹாரம் கிளர்ச்சியாளர்கள்.
இந்த நிலையில், க்வோஸா என்ற முக்கிய நகரம் ஒன்றையும் போகோ ஹாரம் இயக்கத்தினர் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து தங்கள் வசம் உள்ள பகுதிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தனி இஸ்லாமிய நாடாக போகோ ஹாரம் இயக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.
இது குறித்த காணொலி பதிவு ஒன்றை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.
அதில் போகோ ஹாரம் கிளர்ச்சி அமைப்பின் தலைவர் அபூபக்கர் ஷேக், 'க்வோஸா நகரை வென்று தந்த அல்லாஹ்வுக்கு நன்றி. க்வோஸா தொடர்பாக நைஜீரியா இனிமேல் கவலையடையத் தேவையில்லை' என்று கூறியுள்ளார். ஆனால் போகோ ஹாரம் இயக்கத்தின் இந்த தனிநாட்டுப் பிரகடனத்தை நைஜீரிய அரசு நிராகரித்துள்ளது. ஏற்கெனவே ஈராக் மற்றும் சிரியாவில் சுன்னி முஸ்லிம்களின் அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து 'இஸ்லாமிய தேசம்' என்ற நாட்டை பிரகடனப்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## ஹமாஸ் தளங்களிலிருந்து காஸா மக்கள் வெளியேறுக

### இஸ்ரேல் பிரதமர் வேண்டுகோள்


பெஞ்சமின் நேதன்யாகு

ஜெருசலேம், ஓக.27
ஹமாஸ் தளங்களில் இருந்து காஸா மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
எகிப்தில் நடைபெற்று வந்த சமரசபேச்சு தோல்வி அடைந்த நிலையில், இஸ்ரேல்-காஸா முனை இடையே மூர்க்கத்தனமாகப் போர் நடைபெற்று வருகிறது. காஸாவில் 13 மாடி மக்கள் குடியிருப்பு ஒன்றை இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் குண்டு வீச்சு நடத்தித் தகர்த்தன. இது ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டளை மையமாக செயற்பட்டு வந்தது. இதில் 17 பேர் படுகாயம் அடைந்தனர்
இந்தநிலையில் இஸ்ரேல் பிரதமர் பாலஸ்தீனிய மக்கள் தீவிரவாதிகளின் இடங்களை விட்டு வெளியேற வேண்டும் விரைவில் அங்கு தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.
பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளும் ஹமாஸ் தீவிரவாதிகளின் தளங்களில் இருந்து வெளியேறுமாறு காஸா மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களின் இடங்கள் ஒவ்வொன்றும் எங்கள் இலக்குகள் ஆகும் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

## விபத்தில் சிக்கிய படகில் இருந்து சடலங்கள் மீட்பு

விபத்தில் சிக்கிய லிபிய படகில் இருந்து 170 ஆபிரிக்க இடம் பெயர்ந்தோர் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
சப் சகாரன் ஆபிரிக்க பகுதியில் இருந்து சட்டவிரோதமாக இடம்பெயர்ந்தோர் பயணித்த லிபிய படகு கடந்தவாரம் கடலில் மூழ்கி விபத்தில் சிக்கியதாக அந்தநாட்டு கடலோர பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை அந்தநாட்டு பாதுகாப்புப் படை அதிகாரி முகமது இப்ராகிம் தெரிவிக்கையில், "நாங்கள் 16 மீற்றர் அளவு கொண்ட படகில் இருந்து சுமார் 100 சடலங்களை மீட்டுள்ளோம். 5 சிறுவர்கள் உட்பட 70 சடலங்கள் கடல் அலையில் அடித்து செல்லப்புட்டுள்ளன. கடலில் படகு சென்று கொண்டிருந்தபோது திடீரெனக் கவிழ்ந்திருக்கலாம் - என்றார். (வ)

## மும்பையில் யூத வழிபாட்டு நிலையம் மீண்டும் திறப்பு

மும்பை, ஓக.27

இந்தியாவின் மும்பை நகரில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் போது மிகவும் பாதிக்கப்பட்ட யூத வழிபாட்டு மையம், ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் நேற்று திறக்கப்பட்டுள்ளது.

மும்பை தாக்குதலின் போது, இந்த வழிபாட்டு மையத்தில் இருந்த ராபை (யூத மத போதகர்) கர்ப்பவதியாக இருந்த அவரின் மனைவி உள்ளிட்ட ஆறு பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட யூத தம்பதியினரின் மகன் இந்த தாக்குதலில் தப்பினார். தற்போது அவர் இஸ்ரேலில் உள்ளார். மும்பை ரயில் நிலையமும், தாஜ்மஹால் பேலஸ் ஹோட்டலும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. மொத்தமாக மும்பைத் தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின்போது மோசமாகப் பாதிப்படைந்த நாரிமன் ஹவுசில்தான், சபாட் என்ற யூத அமைப்பின் வழிபாட்டு மையம் செயற்பட்டு வந்தது. (வ)

## லைபீரியாவில் இருந்து நாடு திரும்பினர் இந்தியர் 112 பேர்

மும்பை, ஓக.27

எபோலா பாதித்த லைபீரியாவில் இருந்து 112 இந்தியர்கள் டில்லி, மும்பை வந்தடைந்தனர். அவர்கள் அனைவரும் பரிசோதனைக்குப் பின்னரே வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லைபீரியாவிலிருந்து மும்பைக்கு வந்த விமானத்தை தனியான இடத்துக்குக்கொண்டு சென்று, பயணிகள் அனைவரும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்தனர் என்று மும்பை சர்வதேச விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. எபோலா பாதிப்புக்கான அறிகுறிகள் இல்லாத பயணிகள் சோதனைக்குப் பின் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். பாதிப்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட பயணிகள் நேரடியாகப் பரிசோதனைப் பகுதியில் இருந்து மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ் மூலமாக அனுப்பப்பட்டனர். குறித்த பயணிகள் லைபீரியா, வட ஆபிரிக்கா, எதியோப்பியா ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா வந்தடைந்தவர்கள் ஆவர்.


இந்தப் பரிசோதனைக்கு முக்கிய காரணமே அவர்கள் மூலமாக எபோலா பாதிப்பு இந்தியாவில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் என்று மேலும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி வழங்க உத்தரவு

### இராணுவத்துக்கு முழுமையான சுதந்திரம் அளித்தது மத்திய அரசு

ஸ்ரீநகர், ஓக.27

பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்கும்படி இந்திய இராணுவத்துக்கு மத்திய அரசு உத்தரவு வழங்கியுள்ளதைத் தொடர்ந்து இந்திய இராணுவம் மேலும் உற்சாகம் அடைந்துள்ளது.



இந்திய வீரர்களின் அடுத்தடுத்த தாக்குதல்களால் பாகிஸ்தான் நிலை குலைந்து போயுள்ளதாக எல்லையில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. காஷ்மீர் எல்லையில், பாகிஸ்தான் இராணுவம், அவ்வப்போது தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது. தீவிரவாதிகளும் எப்படியாவது காஷ்மீருக்குள் ஊருடுவ முயன்று வருகின்றனர். இந்திய-பாகிஸ்தான் உறவு சீரடைவதைப் போல் தெரிந்ததும், இந்த தாக்குதல்கள் அதிகரித்தன. முதலில் தாக்குதல்களைத்தடுக்கும் விதத்தில் செயற்பட்டு வந்த இந்திய இராணுவம் தற்போது கடும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

கடந்தாண்டில் மட்டும், இந்திய இராணுவத்தினர் 12 பேர் பாகிஸ்தான் தாக்குதலில் உயிரிழந்தனர். இந் தாண்டு இதுவரை ஒருவர் மட்டுமே உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி தொடக்கம் தான் இந்திய இராணுவம் கடும் பதில் தாக்குதலை ஆரம்பித்த போதிலும், பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 8 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். அதாவது 10 தினங்களில் இந்த சேதம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கொல்லப்பட்டவர்களில், இராணுவத்தினர், லஷ்கர் தீவிரவாதிகள் மற்றும் அந்த நாட்டு பொதுமக்களும் அடங்குவர். அதே போல 24 இற்கும் மேற்பட்டோர் இந்திய குண்டுகளால் காயமடைந்துள்ளனர்.

இந்திய எல்லையில் பாகிஸ்தான் மீது உக்கிரமான எதிர் தாக்குதலை நடத்த மத்திய அரசு இம்மாத இரண்டாம் வாரத்தில் காண்பித்த பச்சைக் கொடிதான் இந்திய இராணுவத்தின் இந்த எழுச்சிக்கு காரணம் என்று கூறப்படுகிறது. உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், எல்லைப் பாதுகாப்புப் படை டிஜி, பதக் ஆகியோர் சமீபத்தில் நடத்திய ஆலோசனையின் போது பாகிஸ்தானுக்குத் தகுந்த பாடம் புகட்ட முடிவு செய்யப்பட்டது. (வ)

## சஞ்சீவனி மூலிகை இமயமலையில்

லே, ஓக.27

கதிர்வீச்சு ஆயுதங்களில் இருந்து காப்பாற்றும் அதிசய சஞ்சீவனி மூலிகையை இமயமலையில் இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இராமாயணத்தில் போர்க்களத்தில் ராமரின் தம்பி லட்சுமணன் மூர்ச்சையடைந்தபோது அவரது உயிரைக் காக்க அனுமார் 'சஞ்சீவனி' மூலிகை ஒன்றைக் கொண்டு வந்தாராம். அது போன்றது இந்த மூலிகை என்று ஆய்வாளர்கள் அதிசயித்துள்ளனர். உயிர்வாழ்வதற்கே கடினமான பகுதிகள் கொண்ட இமயமலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த அதிசய மூலிகை கதிர்வீச்சுப் பாதிப்பில் இருந்து மக்களைக் காப்பாற்றும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## 4 மாநிலங்களுக்கு ஆளுநர்கள் நியமனம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ராஜஸ்தான், கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா ஆகிய 4 மாநிலங்களுக்கான புதிய ஆளுநர்களை நியமித்து அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பில், ராஜஸ்தான் மாநிலத்துக்கு பா.ஜ.க. மூத்த தலைவர் கல்யாண்சிங் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். மகாராஷ்டிராவுக்கு வித்யாசாகர் ராவும், கோவாவுக்கு மிருதுளாசின்காவும், கர்நாடகாவுக்கு வஜூபாய் வாலாவும் புதிய ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (வ)




அருள்மிகு சிறுப்பிட்டி வல்லையப்புலம்
ஸ்ரீ கருணாகடாக்ஷி (மனோன்மணி)
அம்பாள் தேவஸ்தானம்

சம்புரோக்ஷண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்-2014

| கிரியைகள் ஆரம்பம் | எண்ணெய்க்காப்பு | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 29.08.2014 வெள்ளிக்கிழமை | 30.08.2014 சனிக்கிழமை | 31.08.2014 ஞாயிற்றுக்கிழமை |

கருங்கதலி பெருங்குலைகள் களிற்றுகைம் முகம் காட்டும் மருங்குவளர் கதிர் செந்நெல் வயல் புரவி முகம் காட்டும் யாழ்ப்பாணத்தின் சிற்றூராம் சிறுப்பிட்டியின் வல்லையப்புலம் பதியின் நாற்றிசைகளின் நடுவிலே அடியார்களின் அல்லல் அகற்றி அருள்பாலிக்கும் லிங்கேஸ்வர பூஜிதவாகினியான கருணாகடாக்ஷி அம்பாளுக்கு சம்புரோக்ஷண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை சஷ்டிதிதியும், சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடியுள்ள காலை 9.30 மணிமுதல் 10.25 வரையுள்ள கன்னிலக்கின சுப முகூர்த்த வேளையில் நடைபெற பேரருள் கிட்டியுள்ளது.

சிறுப்பிட்டி வல்லையப்புலம் குடிகொண்ட அம்மன் அருளினை அறிந்தாரோ என்னவோ அந்த அவதார புருஷன் ஏகபத்தினி விரதன் இராமபிரானே ஸ்ரீ கருணாகடாக்ஷி அம்மனை வணங்கி, மன்னுயிர் போக்கும் அம்பினை மண்ணிடை எய்து ஊற்றெடுத்து தாகம் தணித்தாரென கர்ண பரம்பரைக் கதைகளாக காலம் காலமாக சொல்லப்பட்டு வந்துள்ளது. இராமபிரானின் அம்பு பட்டதன் பயன் அக் கிணற்றின் நீர் ஊற்றானது என்றும் வற்றியது இல்லை. அதன் ஆழத்தினையும் அறியமுடியாது உள்ளது. இதுவே இவ் ஆலயத்தின் புராதன முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தொன்று தொட்டுக் கூறப்பட்டு வருகின்றது.

எம் தாய்க்கு துஷ்ரர்களால் 23.05.2014 இடம்பெற்ற அனர்த்தம் காரணமாக புதுப்பொலிவுற நூதன விக்கிரக ஆலயப்பிரவேசமும் ஆவணி நன்நாளாம் இந்நாளில் இந்தியாவின் புண்ணிய நதியாம் நர்மதா நதிக்கரையில் முற்றும் துறந்து சித்தமடக்கிய சித்தர்களின் தவத்தின் பயனாக காசி விஸ்வநாதப் பெருமானின் பிரதி விம்பமான லிங்கேஸ்வரர் சந்திரசேகர மூர்த்தமாக காட்சியளிப்பதற்காக நூதன விக்கிரக பிரதிஷ்டையுடன் நவக்கிரக நாயகர்களுக்கும் நூதன ஆலயம் அமைத்து நூதன விக்கிரக பிரதிஷ்டையும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவினை சிறப்பிப்பதற்காக தேவஸ்தான பரம்பரை ஆஸ்தானகுரு வேதாகம வித்தகர் குருமூர்த்திக்குருக்களின் புதல்வன் பிரம்ம ஸ்ரீ காமாட்சி சுந்தரேஷ்வர குருக்களும் வேல்ஸ் (U.K) ஸ்ரீ கற்பக விநாயக தேவஸ்தான ஆஸ்தான குரு முத்தகர் வித்தகன் சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ லம்போதர குருசுவாமிக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருக்களாக வீற்றிருக்கவும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய பரம்பரை குருத்துவத்தினைக் கொண்ட சிரோன்மணி-சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்கள் சர்வசாதக ஆசிரியராக இருந்து மந்திரங்கள் ஒலிக்க மங்கல வாத்தியங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ் வேளையிலும் அதற்கு முன்னரும் நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் அம்பிகை அடியார்கள் பங்குபற்றி அம்பிகையினதும் காசி விஸ்வநாதப் பெருமானினதும் பேருளினைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தேவஸ்தான தர்மகர்த்தாக்களும், பரிபாலனசபையினரும்.

(39649)(4.3.6)

# நிபுணர் குழுவை நியமித்தமை முட்டாள்தனமான செயற்பாடு

## ஜனாதிபதியைச் சாடுகின்றார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஓக.27

வெளிநாட்டு நிபுணர் குழு தொடர்பிலான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தீர்மானம் முட்டாள்தனமானது என்று சாடியுள்ளார் தொழில்நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சர் சம்பிக்க ரணவக்க.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அங்கம் வகித்து வரும் கூட்டணி கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், ஜனாதிபதியின் இந்த முட்டாள்தனமான தீர்மானத்துக்கு என்றாவது வருந்த நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐந்து பேர் அடங்கிய வெளிநாட்டு நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் மாற்று யோசனையொன்று அல்லது நிறைவேற்று அதிகார முறைமையில் மாற்றங்கள் பற்றி பரிந்துரை செய்யப்பட வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் சில விடயங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது.

குறிப்பாக ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாத வகையில் காணப்படும் சரத்து ரத்துச் செய்யப்பட வேண்டும். 18ஆம் திருத்தச் சட்டத்தின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று மாதத்துக்கு ஒரு தடவை நாடாளுமன்றுக்கு வருகின்ற போதிலும், அது நாடாளுமன்றுக்கு பொறுப்பு கூறுதலாக அமையாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## மார்புக்குள் ஏறிய மரக்கிளை வெற்றிகரமாக அகற்றப்பட்டது

### மருத்துவர்களின் 3 மணிநேர போராட்டத்தின் பின்னர்



கொழும்பு, ஓக.27

ஒருவருடைய இடதுபக்க மார்புக்குள் ஏறிய இம்புள் மரத்தின் சிறிய கிளை (பஞ்சு மரம்) ஒன்றை ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையைச் சேர்ந்த விசேட சத்திரசிகிச்சைக் குழுவினர் சத்திரசிகிச்சை மூலமாக அகற்றியுள்ளனர். ஹம்பாந்தோட்டை, லுனாம பகுதியைச் சேர்ந்த ஏ.பி.சஞ்ஜீவ (வயது 40) என்பவர் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, வீதியோரத்திலிருந்த இம்புள் மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது. அதிலிருந்து உடைந்த கூரிய மரக்கிளை ஒன்று இவரது மார்பைத் துளைத்து உட்சென்றுவிட்டது. ஆபத்தான நிலையிலிருந்த அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட் டார். 3 மணித்தியாலங்கள் நடந்த சத்திரசிகிச்சையின் பின்னர் குறித்த கிளை வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)



## உபுல் ஜயசூரியாவுக்கு பாதுகாப்பு தேவையில்லை

கொழும்பு, ஓக.27

தனிப்பட்ட பாதுகாப்புக்கு பொலிஸ் அதிகாரிகளை நியமிக்கும் அளவுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று தெரிவித்துள்ளார் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பு அமைச்சின் செயலாளர்.

உபுல் ஜயசூரியவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபுல் ஜயசூரியவின் அலுவலகம் மற்றும் வீட்டுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்புத் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சின் செயலாளரின் அறிக்கையைச் சமர்ப்பித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க நீதிமன்றத்துக்கு அறிவித்தார். தேவை ஏற்படின் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ற)



ராகமை போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் அப்துல் ஹமீட் ஏ.கே.அல்-முல்லாவால் 'கோல்டன் சுவ உதான' அமைப்புக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகை வைத்திய உபகரணங்களே முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபஷக்வின் தலைமையில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்போது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் முதற்பெண்மணி குசலம் விசாரித்தார். (ற)

## 'சில்ப' கண்காட்சி நாளை

யாழ்ப்பாணம், ஓக.27

23 ஆவது சர்வதேச 'சில்ப' கண்காட்சி நாளை வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது. அதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஆண்டுதோறும் நடைபெற்று வரும் இந்தக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தும் நோக்குடன் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு கண்காட்சியில் தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் அதிகார சபை, பனை அபிவிருத்திச் சபை என்பன இணைந்து உற்பத்தியாளர்களிடம் இருந்து கிடைத்த, தரமான- நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தவுள்ளன. வடக்கு மாகணத்தில் இருந்து உற்பத்தியாளர்களால் வடிவமைக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் விசேடமாக பனை சார் கைப்பணிப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட முதலீட்டாளர்கள் சந்தைப்படுத்தலுக்கு தேவையான பரிமாற்றங்களையும் செய்யவுள்ளனர். (ற-14)

## ஒரு வயதுக் குழந்தையை கொன்ற தந்தைக்கு மறியல்

கொழும்பு, ஓக.27

ஒரு வயதும் ஒன்பது மாதங்களுமான தனது பெண் குழந்தையைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான தந்தை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



கைது செய்யப்பட்ட 29 வயதான குறித்த தந்தையை, மனநல வைத்தியரிடம் அனுப்பி வைத்திய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு களுத்துறைமேலதிகநீதிவான்அயேஷா ஆப்தீன் உத்தரவிட்டார். (ற)

## மனித உரிமை ஆணைக்குழு முன்பாக படைச்சிப்பாய் உயிரை மாய்க்க முயற்சி

### உயரதிகாரிகள் மீது ஏற்பட்ட அதிருப்தியால்

கொழும்பு, ஓக.27

கொழும்பில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் முன்பாக படைச்சிப்பாய் ஒருவர் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளார். இராணுவ உயர் அதிகாரிகள் தொடர்பான முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை விசாரணைக்கு வந்திருந்த குறித்த சிப்பாய், விசாரணையில் அதிருப்தியடைந்துள்ளார். அதையடுத்துத் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக ஆணைக்குழு அதிகாரிகளிடம் கூறிவிட்டு விசாரணையில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளார். மனித உரிமை ஆணைக் குழு முன்பாகவே எலிகளைக் கொல்லும் இரசாயன மருந்தை உட்கொண்டு அவர் உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

உடனடியாக பொலிஸார் வரவழைக்கப்பட்டு, குறித்த படைச்சிப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் அவரது உடல்நிலை தொடர்ந்தும் மோசமாகவே உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## போலி அபிவிருத்தியின் பின்னணியில் நாட்டைச் சுரண்டுகின்றனர் ஆட்சியாளர்

### சீறுகின்றார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா



கொழும்பு, ஓக.27

போலி அபிவிருத்தியின் பின்னணியில் ஆட்சியாளர்கள் நாட்டைச் சுரண்டி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நாட்டின் ஊழல் மோசடிகளை விரட்டியடிக்க வேண்டும். மக்களை ஏமாற்றி வரும் ஆட்சியாளர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளது. சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு நாளும் பதிவாகின்றது. ஏனைய தேர்தல்களைப் போன்றே ஊவா தேர்தலுக்கு முன்னதாகவும் முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த ஊழல் மோசடி மிக்க ஆட்சியாளர்களை விரட்டியடித்து ஜனநாயகத்தை நிலை நாட்ட மக்களின் ஒத்துழைப்பு அவசியம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# காதலனுடன் பறந்தார் அனுஷ்கா



ஒரு வருடம் இடைவிடாமல் படப்பிடிப்பில் பங்கேற்ற அனுஷ்கா, யாருக்கும் தெரிவிக்காமல் தனது ரகசியக் காதலனுடன் சுற்றுலா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ரஜினியுடன் லிங்கா, அஜீத்துடன் தல - 55 ஆகிய படங்களில் நடித்து வரும் அனுஷ்கா ஏற்கனவே தமிழ், தெலுங்கில் ராஜமவுலி இயக்கும் பாஹுபாலி, குணசேகர் இயக்கும் ராணி ருத்ரம்மாதேவி ஆகிய படங்களில் நடித்து வருகின்றார்.

கடந்த ஒரு வருடமாக இடைவிடாமல் படப்பிடிப்பில் பங்கேற்றதுடன் வாள் சண்டை, குதிரை ஏற்ற பயிற்சிகளும் பெற்றார்.

இது அவருக்கு படப்பிடிப்பில் மேலும் அழுத்தத்தை அதிகரித்தது. தமிழ், தெலுங்கு படங்களில் நடித்ததால் சென்னைக்கும் ஹைதராபாத்துக்கும் மாறி மாறி பறந்துகொண்டிருந்தார்.

தற்போது தனது பணிகளைப் பெரும்பகுதி முடித்துவிட்டார். எனவே வெளிநாடு சென்று ஓய்வு எடுக்க முடிவு செய்தார். இதையடுத்து குடும்பத்தினரிடம் மட்டும் தான் எங்கு செல்கிறேன் என்பதைத் தெரிவித்தார். மற்றவர்களிடம் சுற்றுலா செல்வதாக மட்டும் கூறிவிட்டு பறந்தார். அவரது ரகசியக் காதலனும் அவருடன் சென்றுள்ளார். 10 நாள்கள் ஓய்வுக்கு பிறகு அவர் திரும்பி வந்து மீண்டும் படப்பிடிப்பில் பங்கேற்த எண்ணி உள்ளார்.

## இன்றைய பேஸ்புக் தத்துவம்

போடுக கடலை,
போட்ட பின்
பில்லு கட்டுக
அதற்கு தக

# மீண்டும் சின்னத்திரைக்கு திரும்பினார் நீலிமா ராணி!



தேவர் மகன், பாண்டவர் பூமி, விரும்புகிறேன் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் நீலிமா ராணி. மெட்டி ஒலி மூலம் சின்னத்திரைக்கு வந்தார். கோலங்கள், தென்றல், செல்லமே ஆகிய தொடர்களில் நடித்தார். இடையில் இதயத் திருடன், மொழி, திமிரு, சந்தோஷ் சுப்பிரமணியம், நான் மகான் அல்ல படங்களில் கதாநாயகிகளின் தோழியாக நடித்தார். அதன் பின்னர் திருமணம் செய்து கொண்டு சின்னத்திரை, பெரிய திரைக்கு 'குட்பை' சொல்லிவிட்டு ஒதுங்கினார்.

திடீரென்று உடம்பை மெல்லியதாக்கிக் கொண்டு கதாநாயகியாக நடிக்கப்போகிறேன் என்றார். இருப்பினும் அவருக்கு கதாநாயகி வாய்ப்பு கிடைக்கவில்லை. ஓநாயும் ஆட்டுக்குட்டியும், பண்ணையாரும் பத்மினியும் படங்களில் சிறிய வாய்ப்புக்கள்தான் கிடைத்தன. இப்போது அமளி துமளி, இருவர் உள்ளம், வாலிபராஜா படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் மீண்டும் சின்னத்திரைக்கு திரும்பி விட்டார் நீலிமா ராணி. இதுபற்றி நீலிமாராணி கூறியிருப்பதாவது:- ராதிகா அழைத்ததால் சின்னத்திரைக்கு மீண்டும் வந்திருக்கிறேன். காரணம் நான் சின்னத்திரையில் பெரிய இடத்தைப் பிடித்ததற்கு அவர் கொடுத்த வாய்ப்புகள்தான் காரணம்.

நான் இதுவரை தொடர்களில் வில்லியாகத்தான் நடித்திருக்கிறேன். முதன் முறையாக நேரான கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். ஒன்றை தொலைத்து விட்டு அதைத் தேடி அலையும் பெண் கதாபாத்திரம். என்ன தொலைத்தேன். தொலைத்ததை கண்டுபிடித்தேனா என்பதை அடுத்து வரும் காட்சிகளில் தெரிய வரும். சினிமாவிலும் தொடர்ந்து நடிப்பேன், என்கிறார் நீலிமா.

# பாதை மாறிய பயணம் - ஸ்ரேயா



பட வாய்ப்புக்கள் கைகூடாததால் 'மொடலிங்' துறைக்குள் குதித்துள்ளார் ஸ்ரேயா. ரஜினி, விஜய் என்று முன்னணி கதாநாயகர்களுடன் நடித்து வந்தார் ஸ்ரேயா. திடீரென்று அவருக்கான பட வாய்ப்புகள் குறையத் தொடங்கின.

லட்சுமிமேனன், சமந்தா, ஸ்ருதிஹாசன் போன்ற இளம் நடிகைகளின் அதிரடி வரவே இதற்கு காரணமாகியது. தற்போது தமிழ் படம் எதுவும் ஸ்ரேயா கைவசம் இல்லை. ஏற்கனவே கவர்ச்சியாக நடித்து வந்த ஸ்ரேயா, சந்திரா என்ற படத்தில் 'டொப்லெஸ்' ஆக நடித்தார். பின்னர் நாகர்ஜுனாவின் மனம் படத்தில் 50 வயதுப் பெண்ணாக நடித்தார். எதுவும் பயன் அளிக்கவில்லை.

தற்போது ஹிந்தியில் ஒரு படமும், தெலுங்கில் ஒரு படமுமே நடித்து வருகிறார். திரிஷா, நயன்தாரா போன்ற தனது வயது ஒத்த நடிகைகள் இன்னும் களத்தில் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப்போல் தனக்கும் மீண்டும் பெரிய வரவேற்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார் ஸ்ரேயா.

இதற்கிடையில் தனது அழகுத் தோற்றத்தை வெளிப்படுத்த மொடலிங் தொழில் மீது கவனம் திருப்பி இருக்கிறார். மும்பையில் நடந்த மொடல் அழகிகள் அணிவகுப்பில் கலந்துகொண்டுள்ளார் ஸ்ரேயா.




என்ஜினியரிங் காலேஜிலே படிச்சு என்ஜினியர் ஆகலாம். ஆனா ப்ரெசிடென்சி காலேஜில் படிச்சி ப்ரெசிடென்ட் ஆக முடியாது.

ஏர்டெல் மொபைல் வைச்சிருந்தாலும் ஏர்செல் மொபைல் வைச்சிருந்தாலும், தும்மல் வந்தால் ஹட்ச்ன்னுதான் வரும்.

ஊருக்கே கேக்கிற மாதிரி சத்தமா கொறட்டை விட்டாலும்... உன் கொறட்டையை நீ கேக்க முடியாது.

கோல்ட் வைச்சு கோல்ட் செயின் பண்ணலாம். ஆனால் சைக்கிள் வைச்சு சைக்கிள் செயின் பண்ண முடியாது.

என்னதான் 500 கி.மீ. வேகத்துல புயல் காத்து அடிச்சாலும், சைக்கிளுக்கு பம்ப் வைச்சு தான் காத்து அடிக்கணும்.






# நிலாக்லா வாசியுங்க....

ஐடியா அழகுசாமி ஒரு நாள் 'ஏ.ரி.எம்மில்' பணம் எடுக்கப்போனார். பல முறை பணம் எடுக்கப் போராடினார். ஆனால் பணம்' வரவில்லை.

இதனால் நொந்து போன ஐடியா அழகுசாமி வங்கிக்கு தொலைபேசி எடுத்தார். தனது கணக்கில் பணம் இருக்கின்றதா என்று சரிபார்த்துச் சொல்லுமாறு கேட்டார். அதற்கு அவரது வங்கிக் கணக்கில் பணம் சரியாக இருப்பதாகப் பதில் வந்தது.

தாராளமாக பணம் இருப்பதாகவும், கணக்கு முடக்கப்படவில்லை என்றும் வங்கி அதிகாரி தெரிவித்தார்.

ஐடியா அழகுசாமி மீண்டும் 'ஏ.ரி.எம்மில்' பணம் எடுக்க முயற்சித்தார். ஆனால் அவரால் பணம் எடுக்க முடியவில்லை. கடுப்பான அவர் காவலாளியிடம் 'ஏ.ரி.எம்மில்' பணமில்லையா என்று கேட்டார். காவலாளி பணம் இருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் எடுத்துக் கொண்டு போறாங்களே, என்று சொன்னார்.

மீண்டும் மீண்டும் முயற்சித்த ஐடியா அழகுசாமியிடம் கரவலாளி ஒருவேளை உங்க 'ஏ.ரி.எம். கார்ட்' சேதம் ஆகியிருக்கும். அதனால்தான் பணம் வரவில்லையோ என்று தெரிவித்தார்.

உடனே நம்ம ஐடியா அழகுசாமி "என்ன பேச்சுப்பா பேசுற ? நான் என்ன முட்டாளா ? கார்ட் சேதமாகம இருக்கத்தான் அதை பத்திரமாக 'லெமினோர்ரிங்' பண்ணி வைச்சிருக்கிறன்" என்று பதிலளித்தார்.

அப்ப ஏ.ரிஎம்மில இருந்து காசு எடுத்தமாதிரித்தான்....

# கர்ப்பிணிகளுக்கு நன்மை தரும் இளநீர்



"இளநீர் குடிப்பதால், கர்ப காலத்துக்கே உரித்தான, மலச் சிக்கல், வயிறு உப்பிசம், நெஞ்சு எரிச்சல் போன்றன குறிப்பிட்ட அளவில் சரியாகுவதற்கு வாய்ப்புள்ளது."

கர்ப்ப காலத்தில் இயற்கையான மருத்துவ குணம் நிறைந்த இளநீரைப் பருகுவது தாய்க்கும், கருவில் உள்ள குழந்தைக்கும் ஏற்றது என்றும் மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இளநீரில் எலக்ரோலைட் அதாவது மின்பகுபொருள் அதிகமாக உள்ளது.

இதனால் கர்ப்ப காலத்தில் சிறுநீர் தொற்றுநோய் ஏற்படுவது தவிர்க்கப்படும். தாது உப்புக்கள், உயிர்ச்சத்தும், சர்க்கரை, உப்பு மற்றும் புரதச் சத்து என்பனவும் உள்ளன.

மேலும் இதில் குளோரைட், பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் என்பனவும் உள்ளது.

இளநீரில் உள்ள பொட்டாசியம் இரத்தக் கொதிப்பையும், இதயத்தின் செயல்களையும் சீராகச் செய்ய உதவுகிறது.

இளநீர் குடிப்பதால், கர்ப்ப காலத்துக்கே உரித்தான, மலச்சிக்கல், வயிறு உப்பிசம், நெஞ்சு எரிச்சல் போன்றன குறிப்பிட்ட அளவு சரியாகுவதற்கு வாய்ப்புள்ளது.

எனவே கர்ப்ப காலத்தில் பெண்கள் கடையில் விற்கும் சோடாக்களை வாங்கி குடிப்பதையும், கோலா வகைகளைக் குடிப்பதையும் தவிக்கவும்.

எனவே இயற்கை அளித்த இளநீர் பருகுவதே சிறந்தது என்றும் இது இயற்கையிலே சுத்திகரிக்கபட்டுள்ளதால் தூய்மை நோய் தாக்குதல் பற்றி கவலைப்படமால் அருந்தலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இளநீரின் உள்ள இந்த இயற்கை மருத்துவ குணங்களினாலேயே கர்ப்பவதிகளுக்கு மிகவும் பரிந்துரைக்கபடுகிறது.

எனவே கர்ப்பிணிகளே இளநீர் குடியுங்கள் என்றும் அதனால் நோயில் த குழந்தைகள் பிறக்கும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தேங்காயின் மருத்துவ குணங்கள்



"தேங்காய் எண்ணெய் எளிதில் ஜீரணமாகும். தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் தீப் புண்கள் விரைவில் குணமாகும். கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்த ரொனிக்."

தேங்காயில் பல்வேறு மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. புரதச் சத்து, மாவுச் சத்து, கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு உட்பட தாதுப் பொருள்கள்; விற்றமின்'சி', நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துக்களும் தேங்காயில் உள்ளன.

தேங்காய் எண்ணெய் எளிதில் ஜீரணமாகும். தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் தீப்புண்கள் விரைவில் குணமாகும். கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்த ரொனிக்.

தேமல், படை, சிரங்கு போன்ற நோய்களுக்குத் தயாரிக்கப்படும் மருந்துகளில் பெருமளவு தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுகிறது.


தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் போது கிடைக்கும் புண்ணாக்கோடு கருஞ்சீரகத்தையும் சேர்த்து தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தேங்காய் சிரட்டையில் (வெளிப்புற ஓடு) இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண்ணெய் தோல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது.

தேங்காய் பால் நஞ்சு முறிவாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய்யைக் கொண்டு தயாரிக்கப்படும் தைலங்கள் பல்வேறு நோய்களுக்கு அரு மருந்து.

குழந்தைகளுக்குத் தேவையான எல்லாச் சத்துகளும் தேங்காய்ப் பாலில் உள்ளன. தேங்காய்ப் பாலில் கசகசா, பால், தேன் கலந்து கொடுத்தால் வறட்டு இருமல் மட்டுப்படும்.

பெரு வயிறுக் காரர்களுக்கு இளநீர் கொடுத்தால் சரியாகும். தேங்காய்ப் பாலை விளக் கெண்ணெ யில் கலந்து கொடுத்தால் வயிற்றில் உள்ள புழுக்களை அப்புறப்படுத்தும்.

தேங்காய்ப் பாலில் காரத்தன்மை உள்ளதால், அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்றுப் புண்களுக்கு தேங்காய்ப் பால் மிகவும் சிறந்தது. உடலுக்குத் தேவையான அமீனோ அமிலங்கள் உள்ளன.



# வெள்ளரிக்காய்

"வெள்ளரிப் பிஞ்சு பித்தத்தைத் தணித்து, குடல்களுக்குக் குளிர்ச்சியையூட்டுகிறது. சிறுநீரகக் கோளாறுகளைச் சரிசெய்கிறது."

வெள்ளரியில் பிஞ்சாகவும், காயாகவும் இரண்டு வகையுண்டு. வெள்ளரியும் நல்ல நீரிளக்கி.

செரிமானத்துக்கு உதவுவது வெள்ளரிப் பிஞ்சு பித்தத்தைத் தணித்து, குடல்களுக்குக் குளிர்ச்சியையூட்டுகிறது. சிறுநீரகக் கோளாறுகளைச் சரிசெய்கிறது. எரிச்சலைக் கட்டுப் படுத்துகிறது. தலைசுற்றலைத் தடுக்கிறது. சமீபத்திய ஆய்வுகளின்படி, வெள்ளரி மூட்டு வலி, வீக்க நோய்களைக் குணமாக்குகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, வெள்ளரி ஒரு முக்கியமான காய்கறி வகையிலானது.

வெள்ளரியில் கலோரிகள் குறைவானதால் உடல் பருமனைக் குறைக்க சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு நன்றாக ஒத்துழைக்கும். வெள்ளரிச்சாறுடன், விதைகளையும் சேர்த்து உட்கொண்டால் மிக அதிக பலன்கள் விளையும். கீல் வாதத்தை போக்க உதவுகிறது.

வெள்ளரி, சிறுநீர்க் கோளாறுகளுக்கும் உதவக்கூடியது. நீரிழிவு நோயாளிகளும், உடல் பருமனைக் குறைக்க விரும்புகிறவர்களும் வெள்ளரிப் பிஞ்சுகளை அதிகமாக உட்கொள்வது சாலச் சிறந்தது.



# முருங்கைக் கீரையின் பயன்கள்

முருங்கைக் கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும். வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மலச்சிக்கல் நீங்கும்.

முருங்கைக்காய் உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. இதை உண்டால் சிறுநீரகம் பலப்படும்.

முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும்.

இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். பல் கெட்டிப்படும். முடி நீண்டு வளரும். நரை முடி குறையும். தோல் வியாதிகள் நீங்கும். கடுமையான இரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப் புண் ஆகிய வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக் கீரை கை கண்ட மருந்து.

முருங்கைக் காய் மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

வாரத்தில் ஒரு முறையோ இரண்டு முறையோ முருங்கைக்காயை உணவாக உபயோகித்தால், இரத்தமும், சிறு நீரும் சுத்தம் அடைகின்றன. வாய்ப்புண் வராத படி பாதுகாப்பு உண்டாகிறது. முருங்கைக்காய் சூப் காய்ச் சல், மூட்டு வலியையும் போக்க வல்லது.

கர்ப்பப்பையின் குறைகளை போக்கிக் கருத்தரிப்பதை ஊக்குவிக்கும். பிரசவத்தைத் துரிதப்படுத்தும். முருங்கை இலையைக் கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும். ஆஸ்துமா, மார்புச் சளி போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கைக் கீரை சூப் நல்லது.

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அனைத்து செயற்பாடுகளும் முடக்கம்

## செயலாளரை நியமிப்பதில் இழுபறி நிலை

பளை, ஓக.27

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அனைத்து செயற்பாடுகளும் நேற்று முன்தினத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த வாரம் வரை இயங்கி வந்த கழிவகற்றல், குடி தண்ணீர் விநியோகம் ஆகியவையும் எரிபொருள் இன்மையால் நிறுத்தப்பட்டுள்ளன.

பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கான மின்சார விநியோகம், தொலைபேசி இணைப்பு ஆகியவை நிறுத்தப்பட்டுள்ளன.

> “ஓகஸ்ட் மாத வேதனத்தை எதிர்பார்த்து அங்கு பணி புரியும் 60 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தினமும் கடமைக்கு வந்து சேவையில் ஈடுபடாமல் திருப்பிச் செல்கின்றனர்.

ஓகஸ்ட் மாத வேதனத்தை எதிர்பார்த்து அங்கு பணி புரியும் 60 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தினமும் கடமைக்கு வந்து சேவையில் ஈடுபடாமல் திரும்பிச் செல்கின்றனர்.

அவர்களுக்கான வேதனமும் இதுவரை வழங்கப்படவில்லை.

இத்தனை பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணம் சபைக்குச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படாமையே என்று தெரிவிக்கப்படுகிறது.

செயலாளரை நியமிப்பதில் தொடர்ந்து இழுபறிநிலை நிலவி வருகின்றது.

எரிபொருள் நிலையத்துக்கான எரிபொருள் கட்டணம் செலுத்தப்படாததால் எரிபொருள் பெற இயலாது இதுவரை காலமும் இடம்பெற்று வந்த குடிதண்ணீர் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் குடி தண்ணீரைப் பெற நீண்டதூரம் அலைகின்றனர். (த-9)

## சுருக்கிட்ட நிலையில் சாரதியின் சடலம் மீட்பு



மன்னார், ஓக 27

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் சாரதியாகப் பணிபுரிந்த குடும்பஸ்தர் ஒருவர் பற்றைக் காட்டின் மரமொன்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது முழங்கால் நிலத்தில் முட்டியவாறே காணப்பட்டுள்ளதால் அவர் கொலை செய்யப்பட்டாரா என்று சந்தேகம் தெரிவிக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் செல்வநகர் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மசீலன் ஹரிகரன் (வயது -30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் ஒரு குழந்தையின் தந்தையாவார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## வவுனியா பாடசாலைகளுக்கு வந்தன பால் பைக்கற்றுகள்

வவுனியா, ஓக.27

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டத்துக்காகப் பால் பைக்கெற்றுகள் வவுனியா பாடசாலைகளுக்கு வந்த சேர்ந்தன.

வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு பால் பைக்கற்றுகள் நேற்று செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்தன.

கல்விஅமைச்சின் பசுப்பால் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் இதுவரை பால் வழங்காத பாடசாலைகளுக்கான பால் பைக்கற்றுகளே நேற்று வந்து சேர்ந்தன.

வவுனியாவில் மாடுகளுக்குக் கால்வாய் நோய் ஏற்பட்டமை மற்றும் பாற்சபைகளில் பாலைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தட்டுப்பாடு, பாடசாலைகளில் கடந்த காலங்களில் பால் விநியோகித்தமைக்கான பணத்தைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிக்கல்கள் காரணமாகப் பல பாடசாலைகள் பால் வழங்க பின்னடித்தன. இதனையடுத்து பால் பைக்கற்றுகள் இலவசமாக வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போது வந்துள்ள பால் பைக்கற்றுகள் பாடசாலை மூன்றாம் தவணை ஆரம்பித்தவுடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-402)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி நிலையங்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும் நேற்று வவுனியா உள்வட்ட வீதியில் உள்ள பலநோக்குப் பயிற்சி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.மோகனநாதன் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடங்களை திறந்து வைத்தனர். (த-421)

## புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு வவுனியாவில் கருத்தரங்கு



அமைச்சர் கரலியத்த உரையாற்றுகிறார்

வவுனியா, ஓக.27

சந்தோசமானதும் சுகாதாரமானதுமான குடும்பத்தை உருவாக்குவோம் என்னும் தொனிப்பொருளில் புனர்வாழ்வு பெற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் பெற்றோர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெற்றது.

இந்த விசேட கருத்தரங்கில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக் களத்தின் ஆணையாளர் யமுனா பெரேராவும் இதில் கலந்து சிறப்பித்தார். (த-421)

## பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய மஹோற்சவம்

வவுனியா. ஓக.27

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலய மகோற்சவ பெருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நாளை காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளதுடன் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை கும்பாபிஷேக தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதுடன் சனிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

ஆகம கிரியா பாவலர் சிவஸ்ரீ இரவீந்திர உமாசுதக்குருக்கள் பிரதம குருவாக பூசை வழிபாடுகளை நடத்தவுள்ளதுடன் பிரம்மஸ்ரீ த. பிரசாந் சர்மா உட்பட பல சிவாச்சாரியார்கள் இணைந்து பூசை வழிபாடுகளை நடத்தவுள்ளனர்.

10 நாள்கள் இடம்பெறவுள்ள இந்த மஹோற்சவ திருவிழாவில் தினமும் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (த-421)

## விபத்தில் உயிரிழந்த இரு இளைஞர்கள் நினைவாக நெடுங்கேணியில் தரிப்பிடம்



மன்னார், ஓக.27

நெடுங்கேணி கட்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பயணிகள் பஸ் தரிப்பிடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் திறந்து வைத்தார்.

அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றின் போது நெடுங்கேணி கட்குளம் கிராமத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் குறித்த இளைஞர்களின் நினைவாக அவர்களின் குடும்ப உறவுகளினால் அமைக்கப்பட்ட குறித்த பயணிகள் தரிப்பிடமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான எஸ். செந்தூரன், பூபாலசிங்கம், மகாலிங்கம் மற்றும் நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கலந்து கொண்டனர். (த-56)

## வவுனியா மீன் சந்தையின் கழிவுகளால் மக்கள் பாதிப்பு

வவுனியா, ஓக.27

வவுனியா மீன் சந்தை பகுதியில் கழிவுகள் அகற்றப்படாமையால் அங்கு துர்நாற் றம் வீசுவதுடன் பொதுமக்கள் சுகாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரில் சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள மீன் சந்தையில் காலையிலும் மாலையிலும் பெருமளவான மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மீன்கள் பொது மக்களின் வசதிகருதி வெட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

மீன்கள் வெட்டப்பட்ட பின்னர் எஞ்சும் கழிவுகள் சம்பந்தப்பட்ட உரிய தரப்பினரால் அகற்றப்படாமையால் அயலில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைச் சுற்றுவட்ட வீதியால் பயணிக்கும் மக்கள் சுகாதார ரீதியில் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய வகையில் அந்தக் கழிவுகளை உடனடியாக அகற்றி உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு வவுனியாவில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கட்சியின் மாநாட்டுக்கான ஏற்பாட்டுக்குழு மேற்கொண்டுள்ளது. செப்ரெம்பர் 5ஆம் திகதி கட்சியின் உயர்மட்ட அங்கத்தவர்கள் கலந்துரையாடல் நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறும். 6 ஆம் திகதி கட்சியின் பேராளர் மாநாடு நடைபெறும்.தேசிய மாநாடும் பொதுக் கூட்டமும் 7ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு நகரசபை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-421)

### வீட்டில் பூட்டி வைக்கப்பட்டிருந்த மோ. சைக்கிள் திருட்டு

வலி. வடக்கு, ஓக. 27
நல்லூர் ஆலயத்துக்குச் செல்லும் போது வீட்டில் பூட்டிப் பாதுகாப்பாக நிறுத்தி வைத்து விட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இடம்பெற்றுள்ளது.
நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் வேளையில் ஆலயத்துக்குச் செல்லும்போது வீட்டினுள் விட்டு பூட்டி விட்டுச் சென்ற சபாரி ரக மோட்டார் சைக்கிள் திருடிச் செல்லப்பட்டமை குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-86)

# கலைத்துறையில் ஆர்வம் உள்ளோரை வரவேற்க இந்தியக் கலைஞர்கள் தயார்

## இசைத்துறை மேதை ரி.வி. ராம் பிரசாத் தெரிவிப்பு



வலி. வடக்கு, ஓக. 27
கலைத்துறையில ஆர்வம் உள்ளவர்களை இந்தியாவில் வரவேற்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் பல கலைஞர்கள் தயாராக உள்ளனர். இந்தியாவில் கலைத்துறையில் கல்வி கற்பதற்கு யாரையும் நாட வேண்டிய தேவையில்லை. அவர்கள் இந்தியா வந்து தமது கல்வியை கற்க முடியும் என இசைத்துறை மேதை ரி.வி. ராம் பிரசாத் தெரிவித்துள்ளார்.
யாழ். இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை கலை, கலாசார அலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தெய்வீக சுகானுபவ வாய்ப்பாட்டு ஆற்றுகைப் பயிற்சிப் பட்டறை நேற்று முன் தினம் திங்கட்கிழமை பகல் யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ராம் பிரசாத் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கையில் இருந்து வரும் இசைக் கலைஞர்கள் நல்ல தகுதியும் ஆற்றலும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதனை நான் பல தடவைகளில் கண்டுள்ளேன். இங்கு வந்தபோது கூட இந்த மண்டபத்தில் இசையின் பால் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட பலர் இந்த பயிலரங்கில் கலந்துகொண்டுள்ளமை பெரு மகிழ்ச்சியான விடயமாகும்.
எம்மைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்து மக்களின் இசைத்துறையின் ஆற்றலையும் அவர்கள் அதன் மீது காட்டும் ஆர்வத்தையும் இடம் பெயர்ந்து வாழும் வெளிநாடுகளில் கூடக் கண்டுள்ளோம்.
கனடா நாட்டின் ஒன்ரோறியோவில் சுமார் 13க்கும் மேற்பட்ட மிருதங்க அரங்கேற்றங்களை நடத்தி முடித்துள்ளோம். இந்த வகையில் இந்த மண்ணில் உள்ள இளைய தலைமுறையினர் இசைத்துறையின் பால் மிகவும் திறமை மிக்கவர்களாக மிளிர்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை-என்றார். (த-86)

### நீதிமன்றத்தின் பின் வீதியில் மது குடித்தமைக்கு அபராதம்



யாழ்ப்பாணம், ஓக. 27
நீதிமன்றுக்குப் பின்னாலுள்ள வீதியில் வைத்து மது அருந்தியவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன் தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றின் பின் புறமாகவுள்ள வீதியில் வைத்தே 3 பேர் மது அருந்தியுள்ளனர்.
குருநகரைச் சேர்ந்த அவர்களுக்கு எதிராகப் பொது இடத்தில் வைத்து மது அருந்தினார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டது.
அவர்கள் நீதிமன்றில் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## பொருள்கள் திருடியவருக்கு ஒத்திவைத்த கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஓக. 27
வீடு புகுந்து பொருள்களைத் திருடியவருக்கு அபராதம் விதித்ததோடு ஒரு வருடத்துக்கு ஒத்திவைத்த கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது நீதிமன்று.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது.
புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் கடந்த மே மாதம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கதிரை உள்ளிட்ட சுமார் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியிருந்தனர்.
சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர்களில் ஒருவர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன. அதனையடுத்து குற்றத்தை ஒப்புக் கொண்டவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
தவிர ஒரு வருடத்துக்கு ஒத்திவைத்த கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்று. மற்றையவர் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-4)

## இரு கிராம இளைஞர்களிடையேயான முரண்பாடு வாள்வெட்டில் முடிந்தது

### இருவர் காயமடைந்து வைத்தியசாலையில்

வலி.வடக்கு, ஓக. 27
கடந்த சில நாள்களாக இரண்டு கிராம இளைஞர்களுக்கு இடையேநிலவிவந்த பகைமை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலையில் வாள்வெட்டில் முடிந்தது. இதில் காயமடைந்த இருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் தையல் கடை ஒன்றின் முன்னால் நின்று மத்தாளோடைப் பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்கள் மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறான முறையில் நடந்துள்ளனர்.
இதனையடுத்து தையல் கடையின் உரிமையாளர், கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுடன் தகாத முறையில் நடந்துகொள்ள வேண்டாம் என குறித்த இளைஞர்களிடம் கூறியுள்ளார்.
இதனைச் செவிமடுக்காத இளைஞர்கள் குறிப்பிட்ட தையல் கடை உரிமையாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து பேணி வந்துள்ளனர். இந்த நிலையில் ஞாயிறு மதியம் தையல் கடை உரிமையாளருக்கு உணவு கொண்டுவந்த இளைஞர் ஒருவரைத் தாக்கியுள்ளனர்.
இதனைத் தொடர்ந்து மாலையில் குறிப்பிட்ட இடத்துக்கு வருகைதந்த இளைஞர் குழுவொன்று அட்டகாசம் செய்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் வாளால் வெட்டியும் உள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் மத்தாளோடை கிராமத்தைச் சேர்ந்த இராசலிங்கம் தணுஸ்கரன் (வயது-20), பூபாலசிங்கம் உமாரமணன்(வயது-26) ஆகிய இருவரும் வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.
குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (த-86-36)

## போசாக்குக்கான பன்முக செயற்றிட்டத்தின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஓக. 27
வடக்கிலுள்ள மத்திய மற்றும் மாகாண அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் பங்குபற்றுதலுடன் போசாக்குக்கான பன்முக செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மஹிந்த சிந்தனை தொலைநோக்குக்கமைவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் போசாக்குச் சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட போசாக்குச் செயலகத்தின் அனுசரணையுடன் போசாக்கு நிறைந்த தேசத்தை உருவாக்குவதற்கான பன்முக செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத் தரங்கு, வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் மற்றும் அமைச்சர் கள், பிரதம செயலாளர், மாகாண செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், அரச அதிபர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களினது பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது.
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் பி.ப 1.30 மணிக்கு இது இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், தேசிய போசாக்கு செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் லலித் சந்திரதாஸவும் கலந்து கொள்ளவுள்ளார். (த-5)

## யாழ்.வர்த்தகக் கண்காட்சிக்கு நிறுவனங்கள் ஒன்றிணைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
2015 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சிக்கு நிறுவனங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் தென் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
2015 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 23ஆம், 24ஆம்,25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண்காட்சியில் 250 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் உள்ளூர் உற்பத்திக்கான 30 காட்சிக் கூடங்களும் அமைக்கப்படவுள்ளன.
ஏனைய காட்சிக் கூடங்களில் பெரும்பாலான வற்றை தென்னிலங்கை நிறுவனங்களுக்கு அதிகம் வழங்கவுள்ள நிலையில் காட்சிக் கூடங்களை அமைப்பதற்கான விண்ணப்பம் கோரல்கள் தென் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
காட்சிக் கூடங்களை யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த அமைப்பதற்கான நிறுவனங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கையை யாழ்ப்பாண வர்த்தக மன்றம் மேற்கொண்டுள்ளது.
வர்த்தக மன்றத்தால் நுண்கடன் திட்டத்தில் கடன்பெற்று உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களுக்கும் இந்தக் கண்காட்சியில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக வர்த்தக மன்றம் தெரிவித்துள்ளது. (த-14)

## சுன்னாகத்தில் இரவோடு இரவாக அகற்றப்பட்டது இராணுவ முகாம்

சுன்னாகம் றொட்டியாலடி இந்து மயானத்துக்கு அருகில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் நேற்று இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது.
தனியார் வீடுகள், காணிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களை அகற்றி தனியார்களின் உடைமைகள் மீளக் கையளிக்கப்பட்டு வந்த நிலையில் ஊரெழுப் பகுதியில் தனியார் வீடுகளில் இருந்த இராணுவத்தினர் றொட்டியாலடி இந்து மயானத்துக்கு அருகில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்துக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிலைகொண்டிருந்தனர்.
ஏற்கனவே குறிப்பிட்ட காணி சுன்னாகம் பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸாருக்கான விடுதிகள் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிலமாக இருந்த நிலையில் இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டிருந்தனர். தற்போது அந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது. இதனையடுத்துப் பொலிஸார் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பொலிஸ் நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-86)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கஞ்சாவை ஒழிப்போம்

யாழ்ப்பாணத்தில் கஞ்சா விற்பனை செய்யப்படுவது தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று விடுத்துள்ள உத்தரவு, குடாநாட்டு மக்களின் வயிற்றில் - குறிப்பாக பதின்மவயது ஆண் பிள்ளைகளை வைத்துள்ள பெற்றோரின் வயிற்றில் - பால் வார்த்துள்ளது.

வடக்கு முழுவதிலும் பெருகிவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் காட்டும் இயலாமை, கஞ்சா விடயத்தில் அவர்களால் எவ்வளவு தூரம் வெற்றிகரமான விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்ற நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனினும் இந்த விடயம் கூர்ந்து கவனிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படவேண்டியது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆயுத மோதல் ஒன்று நடந்து முடிந்த பின்னணியில் மீண்டும் அத்தகைய சிந்தனைப் போக்கு ஏற்படாமல் மழுங்கடிக்கும் நடவடிக்கைகளை, தான் போர் நடத்திய சில நாடுகளில் அமெரிக்கா திட்டமிட்டு மேற்கொண்டிருக்கிறது. பண்பாட்டு அழிப்புகள், கலைகளை நலிவடையச் செய்தல், இளைஞர்களின் நாட்டத்தை வேறு திசை நோக்கித் திருப்புதல், போதை மற்றும் களியாட்டங்களின் மீதான மோகத்தை அதிகரித்தல் என்பன அவற்றில் அடக்கம்.

கடந்த சில வருடங்களாக இவை அனைத்தையும் வடக்கு - கிழக்கு தமிழ்ப் பகுதிகளிலும் காண முடிகிறது. இவற்றின் பின்னணி, அதனைத் திட்டமிட்டு மேற்கொள்பவர்கள் யார் என்பது பற்றி இங்கு விலாவாரியாக விளக்கத் தேவையில்லை. அது அனைவருக்கும் வெட்ட வெளிச்சமானதே. மெல்ல மெல்ல ஆழமாக இந்த ஊடுருவல், சிதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் முக்கிய இலக்காகக்கப்படுவோர் பதின்மவயதுச் சிறுவர்களே. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் கற்கும் சிறுவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் இந்த போதை வலையமைப்புக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது அதிர்ச்சிகரமான உண்மை. ஏற்கனவே ஹெரோயின் போதைப் பொருள் பயன்படுத்திய ஒரு தொகுதி சிறுவர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். அதன் பின்னர் ஹெரோயின் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆனால், அதன் பின்னணியில் இருந்தவர்களோ அந்த வலையமைப்போ விசாரணைக்கு உட்படுத்தப்படவும் இல்லை; எவரும் கைது செய்யப்படவும் இல்லை.

இதையடுத்து போதையேற்றும் செயல்கள் மேலும் ஆழமாக, இரகசியமாக இயக்கத் தொடங்கிவிட்டன. இப்போது பாடசாலை மாணவர்கள் கஞ்சா பயன்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. கண்டறியப்பட்ட சில மாணவர்களை அதிலிருந்து மீட்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள மருத்துவர்களிடம் சிகிச்சைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள் பெற்றோர்கள். இருந்தும் இதன் மீதான அக்கறை, விழிப்புணர்வு அதிகளவில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே கஞ்சாவுடன் சில சிப்பாய்கள் வன்னியில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று கேரளாவில் இருந்து யாழ். குடாநாடு ஊடாகக் கடத்தப்பட்ட கஞ்சாவும் சில சந்தேக நபர்களும் பிடிபட்டிருக்கிறார்கள். இறுதியாக தெற்கிலிருந்து வந்தவர்களிடமிருந்து கஞ்சா பக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை அனைத்தின் பின்னணியிலும் கஞ்சா குறித்த முழுமையான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டியது அவசியம். அதில் ஊர் காவற்றுறை நீதிமன்றம் எடுத்திருக்கும் நடவடிக்கை மிக முக்கியமானது; அவசியமானது; வரவேற்புக்குரியது. அதேநேரத்தில் பொலிஸாரும் இந்த விடயத்தில் முழுமையான அக்கறை செலுத்தி விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அவர்களை அந்தத் திசையில் தொடர்ந்து உந்தித் தள்ள வேண்டிய சுமை நீதிமன்றங்களின் தலைகளிலேயே விழுந்திருக்கிறது என்பதுதான் இங்குள்ள சோகம். ஆனாலும் எடுத்த காரியத்தை செவ்வனே முடிக்க அக்கறையுள்ள அனைத்துத் தரப்புகளும் முன்வந்து பணியாற்றவேண்டியது அவசியம்.

# அரசுத் தரப்புக்கு கிடைக்காத வரவேற்பு கூட்டமைப்புக்கு

* இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையில் மாற்றமில்லை.
* சுப்பிரமணியன் சுவாமி வெறும் வெற்று வேட்டு- புரிந்துவிட்டது.
* அமெரிக்காவில் இலங்கைக்காக ப்ரப்புரை செய்யும் நிறுவனங்கள் ஆய்வுக்குள்ளாகும்.

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

இலங்கையால் பெரும் அளவிலான பொதுப் பணத்தைப் பயன்படுத்தி வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொதுத் தொடர்புகள் மற்றும் பரப்புரை நிறுவனங்கள் தொடர்பாக அமெரிக்க நீதித்துறை திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவிருப்பது தெரிய வந்துள்ளது. இந்தத் தகவல்கள் மீளவும் ஆராயப்படும் என்று அமெரிக்க நீதித்துறை திணைக்களத்தில் உள்ள வெளிநாட்டு முகவர்கள் பதிவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். பதிவு செய்துள்ளவர்களால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை நாம் ஆய்வு செய்வோம் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் கீழ் செயற்படும் அந்தப் பிரிவின் அலுவலர் திமோதி புக் என்பவர் கூறியுள்ளார். நான்கு பொதுத் தொடர்புகள் மற்றும் பரப்புரை முகவர் நிலையங்களால் செய்யப்பட்டுள்ள பிரகடனத்தை அடுத்து இந்தச் செயற்பாடு இடம்பெறுகின்றது. இவை தமது தரப்பு ஒப்பந்தகாரர் இலங்கை வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் பி வாஸ் குணவர்தன என்று தெரிவித்துள்ளனர்.

சஜின் குணவர்தன தமது இலங்கை முகவரி என்று தெரிவித்துள்ள கொழும்பு 08, டட்லிசேனநாயக்க மாவத்தையில் அரச அலுவலகம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. அமெரிக்க வெளிநாட்டு முகவர் பதிவுச் சட்டத்தின் கீழ் எவர் ஒருவரும் விதிகளை மீறியுள்ளார் என்று காணப்பட்டால் 10 ஆயிரம் டொலர் அபராதத்துக்கும் 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனைக்கும் உள்ளாக நேரும். நியூயோர்க்கிலுள்ள விஜிலன்ட் வேள்ட் வைட் கொமினியுகேஷன் என்ற பரப்புரை நிறுவனமும், வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இந்த நிறுவனம் ஆறு மாத காலத்துக்கு மொத்தம் 30 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் சேவைக்கு அமர்த்தப்பட்டதற்கான காரணம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மூலோபாய தொடர்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்வது மற்றும் அமெரிக்க அரச அதிகாரிகளுக்கு இலங்கையின் மூலோபாய முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக காங்கிரஸ் மற்றும் அமெரிக்க அரச அதிகாரிகளின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது. இலங்கை மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய காங்கிரஸ் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை பதிவாளர்கள் கண்காணிப்பு ச்செய்தல். என்பனவாகும்.

அமெரிக்காவில் அங்குள்ள அரசின் கொள்கைகளை இலங்கைக்குச் சார்பாக மாற்றி அமைக்கவென அமெரிக்கப் பரப்புரை நிறுவனங்களுக்கு செலவழிக்கப்பட்டுள்ள பணத்தை இலங்கையில் வசதிகள் குறைந்த பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் வகையில் தொழில்களை உருவாக்கும் திட்டங்களை உருவாக்கவும் பயன்படுத்தியிருக்க முடியும். வொஷிங்டனிலுள்ள நமது தூதரகத்துக்கு கூடிய தகுதியான அதிகாரிகளை நியமிப்பதன் மூலமும் அமெரிக்காவுடனான அணுகுமுறைக்கு இன்னும் புத்திசாலித்தனமான செயற்றிட்டங்களை பயன்படுத்துவதன் மூலமும் இந்த வீண் விரயத்தை தவிர்த்திருக்கலாம்

அமெரிக்காவில் இலங்கை சார்பில் சில பரப்புரை நடவடிக்கைகளில் இறங்கவும், அமெரிக்க அரசுடன் நேசபாங்கான அணுகுமுறையை மேற்கொள்ளவும், இலங்கை மத்திய வங்கி எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக சண்டே ரைம்ஸ் கட்டுரையில் பின்வரும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே அமர்த்தப்பட்டிருந்த முகவர் நிறுவனம் விலக்கப்பட்டு வேறு ஒரு நிறுவனம் எவ்வாறு அமர்த்தப்பட்டது? வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட்டு கேள்விகள் கோரப்பட்டனவா? ஓய்வு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நிறுவனத்தை நியமிக்கும் தீர்மானம் ஒரு நபரால்தான் எடுக்கப்பட்டதா? அல்லது பலராலா? மக்கள் சபையில் 435 உறுப்பினர்கள் உள்ளனர். செனட்டில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த நிலையில் மத்திய வங்கி எதிர்பார்ப்பது போல் ஒரேயொரு ஓய்வு பெற்ற உறுப்பினரால் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் திருத்தம் செய்வது எவ்வாறு சாத்தியமாகும்? அதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதா? வெளியுறவு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் தொடர்பு அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டதா? அரசில் இதே வித விடயங்களைக் கையாளும்ஏனைய அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து இவ்வித உபாயம் வகுக்கப்பட்டதா இவை யாவற்றிலும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் இலங்கைக்கு சமாந்தரமான ஒரு நிலையை உருவாக்குவதற்கான முயற்சியில் பொதுமக்களின் பணம் வீண் விரயம் செய்யப் பட்டிருப்பதையே காட்டுகிறது.

மத்திய வங்கியானது அரசுக்குச் சமாந்தரமாக செயற்பட முடியாது. "அமைச்சரவை உறுப்பினர்களையும் மீறி முக்கிய நோக்கங்களை அடைவதற்கான செயற்பாட்டைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ள முடியாது. முன்னர் இருந்த நிதிச் சபைகள் இவ்வாறு நடந்து கொண்டதில்லை. ஜனாதிபதியும் கூட அவரே நிதியமைச்சராக இருக்கும் நிலையில் மில்லியன் கணக்கில் அல்ல, ஒரு சில ஆயிரம் ரூபா என்றாலும்கூட தமது திட்டங்களுக்கு அமைச்சரவையின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

முக்கிய நோக்கங்களை வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தால் ஏன் கையாள முடியாமல் இருக்கிறது அல்லது தகவல் மேடையொன்றை நிறுவும் நிலையில் இல்லை என்பதற்கு மத்திய வங்கி விளக்கமளிக்கவில்லை.

* * *

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக செல்லவிருந்த சமயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது தூதுவர் ஒருவர் மூலம் தமது அதிருப்தியை அவர்களுக்கு அறிவித்திருந்ததாகத் தெரிய வந்தது. தன்னையும் தனது அரசையும் நெருக்குதலுக்குள்ளாக்கும் நோக்கம் கொண்டது அவர்களின் புதுடில்லிப் பயணம் என்று ஜனாதிபதி அறிவித்ததாகத் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசை மாற்றுவதற்கு விரும்புகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலுக்கு ஜனாதிபதி தனது தூதுவர் மூலம் காரணம் கூறியிருக்கிறார். வடக்கு மாகாண சபை வடக்கு ஆளுநரை பதவியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றியதால்தான் அவரது பதவிக் காலத்தை தாம் நீடிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். ஆளுநரின் பதவிக் காலத்தை நீடிப்பதில்லை என்ற வாக்குறுதி கடந்த ஒக்ரோபரில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியின் முன் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டபோது வழங்கப்பட்டிருந்தது. சம்பந்தனும் அவரது குழுவினரும் எங்குதான் சென்றாலும் இறுதியில் தம்மிடமே வந்தாக வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அவர்களுக்குத் தெரிவித்திருந்தார். இல்லையென்றால் பிரச்சினைக்கு தீர்வு பற்றி அவர்களால் பேசமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் குற்றச்சாட்டின்படி தாங்கள் அரசுக்கோ அவருக்கோ எதிராகச் செயற்படவில்லையென்றும் அதற்காக அவர் கூறுவது போல் புதுடில்லிக்கு செல்லவில்லை யென்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கூறியுள்ளார்.

என்னதான் சொன்னாலும் செய்யப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியல் கட்சியொன்றின் தலைவராக நான் இருக்கின்றேன். நாங்கள் அரசியல் தீர்வொன்றையே நாடிநிற்கின்றோம். இந்திய அரசின் அழைப்பின் பேரில் எங்கள் நிலைப்பாட்டை விளக்குவதற்காக நாங்கள் செல்கிறோம் என்று சம்பந்தன் தெரிவித்திருந்தார். வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக் காலத்தை நீடிப்பதில்லை என ஜனாதிபதி வாக்குறுதி அளிப்பதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே வடக்கு மாகாண சபை அவரை நீக்கும்படியான தீர்மானத்தை எடுத்திருந்தது என்று சம்பந்தன் கூறினார். அவை ஜனவரி 2 ஆம் திகதி அலரி மாளிகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும், எம்.ஏ.சுமந்திரனும் அவரைச் சந்தித்த போதும் ஜனாதிபதி அந்த வாக் குறுதியை வழங்கியிருந்தார் என்று கூறிய சம்பந்தன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பாக இந்திய லோக சபை உறுப்பினர் வெளியிட்டிருந்த கருத்துக்களையும் கடுமையாகக் [illegible]தார். சுப்பிர மணியன் சுவாமி இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் அரசியல் கொள்கை வகுப்புப் பிரிவில் முக்கியஸ்தராக சுவா மியை இலங்கை அரசின் சில பிரிவினர் கருதினாலும், அவர் வெளியிட்டிருந்த கருத்துக்கள் அவ்வாறு அவரை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. சுப்பிர மணியன் சுவாமிக்கு மிகமுக்கிய பிரமுகருக்குரிய வரவேற்பு இங்கு அளிக்கப் பட்டது. அவர் கிளிநொச்சிக்கும் மற்றும் நந்திக்கடல் பகுதிக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். முக்கிய இராணுவத் தளபதிகளையும் சந்தித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தியப் பயணம் தொடர்பாக இலங்கை அரச தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள கோபத்துக்கு இன்னொரு காரணமும் உண்டு. இந்தியப் பிரதமரின் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்ள ஜனாதிபதி சென்றிருந்தபோது அவருடனான [illegible]களுக்கு அப்பால் இலங்கைப் பிரமுகர்களுடன் முறையான கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை. இந் தியப் பிரதமர் இலங்கை பிரமுகர்களுட னேயே தமது முதல் அதிகாரபூர்வ கலந்துரையாடல்களை வைத்துக் கொள்வார் என்று எதிர்பார்த்ததாக வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமது நம்பிக்கைக்குரியவர்களிடம் கூறியிருந்தார். ஆனால் அவ்விதமான சந்தர்ப்பம் ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டிருப்பதானது பதவியிலிருந்து இறக்கப்பட்டுள்ள இந்திய காங்கிரஸ் போலவே பாரதீய ஜனதாவும் 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு அப்பாலும் சென்று தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்தியாவில் அரசுகள் மாறினாலும் வெளியுறவுக் கொள்கைகள் அடிப்படையில் எந்தவித மாற்றமும் செய்யப்படுவதில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இப்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எதிர்க்கட்சித் தலைவராக கடந்த ஆண்டு இலங்கை வந்திருந்த போதும் இதே கருத்தை இங்கு வெளியிட்டிருந்தார். இது இலங்கை வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்த வரை முற்றிலும் மாறுபட்ட நிலைமையாகும். இங்கு அந்தக் கொள்கை காலத்துக்குக் காலம் மாற்றமுறுவது மட்டுமல்ல தன்னிச்சையாகச் செயற்படும் சிலரால் வெளிநாட்டு நலன்களையொட்டி பகுதி நிலை ஒப்பந்தங்களுக்கும் உள்ளாகின்றது.

# அணுகுமுறையில் மாற்றம்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் அணுகுமுறை எப்படி இருக்கப் போகிறதோ என்கிற அச்சத்தைப் போக்கி இருக்கிறது இலங்கைத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடனான பிரதமர் மோடியின் சந்திப்பு. மூன்று நாள் பயணமாக டில்லி வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமசந்திரன், மாவை. சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், செல்வராஜா, சுமந்திரன் ஆகியோருடனான பிரதமரின் சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நீண்டதாக இருந்தது என்பதிலிருந்தே இது மரியாதை நிமித்தமான சந்திப்போ, சம்பிரதாயமான சந்திப்போ அல்ல என்பது தெரிகிறது.

தனது பதவி ஏற்பு விழாவுக்கு வந்திருந்த இலங்கை அதிபர் ராஜபக்ஷவுடன் இதுபோலக் கலந்தாலோசிக்க முற்படாத பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களிடம் முதலில் பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முற்பட்டிருக்கிறார் என்பதே பெரிய ஆறுதல். அதிலும் தனது சந்திப்பின்போது முதன்மைச் செயலர் நிருபேந்திர மிஸ்ரா, இந்திய வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் தோவால் ஆகியோரையும் உடனிருக்கச் செய்தது முற்றிலும் புதிய அணுகுமுறை. இதன் மூலம் இலங்கை அரசுத் தரப்பு விளக்கங்களுக்கு மட்டுமே செவிசாய்த்துவந்த அதிகாரவர்க்கம், இலங்கைத் தமிழர்தம் பிரச்சினையின் ஆழத்தையும், அவர்கள் தரப்பு உண்மைகளையும் புரிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க பிரதமர் முயன்றிருக்கிறார் என்பது தெரிகிறது.

இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியதுடன் நின்றுவிடாமல், இலங்கையின் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனுக்கு டில்லி வர அவர்கள் மூலம் அழைப்பு விடுத்திருப்பது, யாருமே எதிர்பாராத புதிய அணுகுமுறை. இந்த அழைப்பின் மூலம், இந்தியா தமிழர்கள் நலனில் தனி அக்கறை செலுத்துகிறது என்பதையும், வடகிழக்கு மாகாண அரசுடன் இந்தியா நேரிடையாகத் தொடர்பு வைத்துக் கொள்ளும் என்பதையும் அதிபர் ராஜபக்ஷவுக்கும், இலங்கை அரசுக்கும் பிரதமர் தெளிவுபடுத்தியிருக்கிறார். நரேந்திர மோடி அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்த முற்படுகிறது என்பது தெரிந்ததால்தானோ என்னவோ, அதிபர் ராஜபக்ஷ தனது அமைச்சரவையில் இரண்டு தமிழர்களுக்கு அவசர அவசரமாக இடமளித்திருக்கிறார்.





இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மறுவாழ்வுப் பணிகள் என்கிற பெயரில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு, தமிழர்களின் தனித்தன்மை அழிக்கப்படுகிறது. பொதுமக்கள் குடியிருப்புகளில் பெரும்பாலானவை இராணுவமயமாக்கப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் இன, மொழி, கலாசார அடையாளங்களை இலங்கை அரசு தொடர்ந்து சிதைத்தும், அழித்தும் வருகிறது. பெயருக்கு விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதல்வராக இருந்தாலும்கூட, அதிக அதிகாரங்களுடன் உள்ள ஆளுநரும் மாற்றப்படவில்லை, இராணுவமும் அகற்றப்படவில்லை. காலப்போக்கில் தமிழர்களுக்கென அரசியல் தீர்வு தேவையில்லை என்கிற நிலைமையை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதை, பிரதமரும் இந்திய அரசும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும்.

அதிபர் ஆட்சி முறையில் வல்லான் வகுப்பதே சட்டமாக இருக்கிறது என்பதுதான், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம். இலங்கையில் குடியரசுத் தலைவர் ஆட்சி முறைக்குப் பதிலாக இந்தியாவில் இருப்பது போல நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு வழிகோலுவதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும். அப்போதுதான், எல்லாப் பகுதியினருக்கும் ஆட்சியில் பங்கு கிடைக்கும். நியாயமான, சமச்சீர் வளர்ச்சியும் உறுதிப்படும்.

அதேநேரத்தில், தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், அதிபர் ராஜபக்ஷவுடன் பேசக்கூடாது, இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் போன்ற நடைமுறைக்கு ஒவ்வாத கோரிக்கைகளை முன்வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். அதிபர் ராஜபக்ஷவிடம் பேசாமலும், இலங்கை அரசின் ஒப்புதல் இல்லாமலும், ஈழத்தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது என்பதைக்கூட சிந்தித்துப் பார்க்க முடியாதவர்களாக நமது தமிழக அரசியல் தலைவர்கள் இருப்பது வேதனையாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது முள்ளில் விழுந்திருக்கும் சேலை. சாதுர்யமாகவும், எச்சரிக்கையாகவும் கையாள வேண்டிய பிரச்சினை இது. பிரதமர் நரேந்திர மோடியின் அணுகுமுறை நம்பிக்கை தருவதாக இருக்கிறது. அதை ஆதரிக்க முற்பட வேண்டுமே தவிர, பிரச்சினையை மேலும் அதிகரித்து விடக் கூடாது.

*நன்றி-தினமணி*

# பயன்தரும் வகையில் அமைக்கப்பட்ட நல்லூர் விவசாய காட்சிக் கூடம்



நல்லூர் ஆலயச் சூழலில் திருவிழாக் காலத்தை முன்னிட்டு ஆங்காங்கே கண்காட்சிக்கூடங்களும், விற்பனைக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

திருவிழாக் காலங்களில் தென்னிலங்கை சார் உற்பத்திப் பொருள்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதால் பக்தர்கள் உள்ளூர் உற்பத்திகளை அதிகம் நாடுவதில்லை.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் மக்களைக் கவரக்கூடிய விதத்தில் தமது சந்தைப்படுத்தலை மேற்கொள்ளாமையும் இதற்கொரு காரணமாகும்.

பொருள்களின் தரம் என்பதற்கு அப்பால் கவர்ச்சியில் மயங்கிப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களே அதிகம்.

இந்த நிலையில் இந்த வருடம் வித்தியாசமான முறையில் விவசாயத் திணைக்களத்தால் ஒரு காட்சிக்கூடம் அமைக்கப்பட்டிருந்தது.

'சூழலியல் விவசாயத்தை நோக்கி' எனும் தொனிப் பொருளில் விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் அமைக்கப்பட்ட இந்தக் காட்சிக்கூடம் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் பக்தர்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதனை வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் திறந்து வைத்திருந்தார்.

நல்லூர் ஆலயத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள மங்கயர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து சாவகச்சேரியில் அமைந்துள்ள பழமுதிர்ச்சோலை மற்றும் யாழ்கோ நிறுவனம் என்பன தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தன.

இந்தக் கண்காட்சிக்கூடத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் உட்பட விவசாய உற்பத்திப் பொருள்கள், விவசாய உபகரணங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் விவசாய உத்தியோகத்தர்களும் ஆலோசனைக் கருத்துக்களை வழங்கினர்.

தனியாக விற்பனையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் விவசாயத்தில் உற்பத்திச் செலவையும் இரசாயனங்களின் பாவனையையும் குறைக்கக் கூடிய பண்ணை இயந்திரங்களான நெல் நாற்று நடும் கருவி. பயிர்களின் வரிசைகளுக்கிடையில் பண்படுத்தலை மேற்கொள்ள உதவும் கருவி போன்ற நவீனத்துவமாக விவசாயக்கருவிகளும், நீர் வளப் பாவனையைக் குறைக்கக் கூடிய தூவல் நீர்ப்பாசனம், நுண் தூவல் நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் அவற்றை இயக்குவதற்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை வெளிப்படுத்தும் வகையிலும் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

போசணைப் பெறுமானம் கூடியதும் பல நோய்களுக்கு நிவாரணியாக அமையக்கூடி யதுமான இலை, மரக்கறி, பயிர்கள், பழங்களின் மாதிரிகள் என்பனவும் இலை மரக்கறி களை எவ்வாறு பயன்படுத்தலாம், அவற்றின் போசணைப் பெறுமானம், அவை எவ்வகை யான நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடியன என்பவை தொடர்பான விளக்கங்களும் பதாகைகள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

வறட்சியைத் தாங்கி வளரக்கூடியதும் மானாவாரியாகச் செய்கை பண்ணக்கூடியதுமான பாரம்பரிய நெல் வர்க்கங்கள், ஏனைய நெல் வர்க்கங்கள் சிறு தானியங்கள் , யாழ். மாவட்டத்தில் தற்போது செய்கை பண்ணப்படுகின்ற காளான்கள் , காளானை உற்பத்தி செய்யும் முறைமை, காளானின் முக்கியத் துவம் என் பன தொடர்பாகவும் காட்சிப்படுத்தல்கள் அமைந்திருந்தன.

மண் வளத்தை மேம்படுத்த உதவும் கூட்டுப் பசளை, மண்புழு உரம், மண்புழு திரவப் பசளை என்பனவற்றை உற்பத்தி செய் யும் முறைகள், மண்ணின் வளத்தையும் நீர் பிடித்து வைத்திருக்கும் ஆற்றலையும் பெருமளவில் மேம்படுத்தக்கூடிய உயிர்க்கரியை உற்பத்தி செய்யும் முறை, பாதி கருக்கிய உமி உற்பத்தி செய்யும் முறை என்பனவும் காட்சிப் படுத்தப்பட் டிருந்தன.

பீடை நாசினிகளைப் பாதுகாப்பான முறையில் கையாளுதல் தொடர்பான தகவல்கள். மனித உடலினுள் பீடை நாசினிகள் உட்செல்லக் கூடிய பகுதிகள். இலங்கையில் தடை செய்யப் பட்ட பீடைநாசினிகளின் பட்டியல் போன்றனவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பீடைநாசினிகளின் பாவனையைக் குறைப்பதன் பொருட்டு ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முறையில் மேற்கொள்ள வேண்டிய முகாமைத்துவ முறைகள், தாவரப் பீடை நாசினிகளாக பயன்படுத்தக்கூடிய தாவரங்கள். தாவரவியல் பீடை நாசினிகள் போன்றனவும், சில பீடைகளை ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறை மூலம் முகாமைத்துவம் செய்வது பற்றியும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட காட்சிக் கூடத்தில் வழுக்கையாறு திட்டம், இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் பூநகரி நீர்ப்பாசனத் திட்டம் போன்ற திட்டங்களின் மாதிரியுருக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் கடல் நீரானது உட்புகுதலைத் தடுப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள அணையின் மாதிரி உருவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

உயர்தர தென்னை நாற்றுக்கள், ஒட்டுப்பலா, ஒட்டு மா, மாதுளை, கொய்யா, தேசி, கொடித் தோடை, ஆனைக்கொய்யா, அரை நெல்லி, முழு நெல்லி, முருங்கை, கிளிசிரியா, வெற்றிலை போன்ற பயன்தரும் பல்லாண்டு தாவரங்களின் கன்றுகளும் வல்லாரை. கரிசலாங்கண்ணி, புதினா போன்ற செடிகளும் கத்தரி, மிளகாய், தக்காளி ஆகிய மரக்கறி நாற்றுக்களும் அத்துடன் வெண்டி, தக்காளி, பயிற்றை, புடோல், பாகல் போன்ற பயிர்களின் விதைகளும் விற்பனை செய்யப்பட்டன.

இந்த வருடத் திருவிழாவில் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்ட இந்தக் காட்சிக் கூடத்தை ஆலயத்துக்கு வருகைதந்த சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்வையிட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் பார்வையிட்டுச் சென்றதாக விவசாயத் திணைக் களத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் விவசாயக் கருத்துரைகளும், மாணவர்களுக்கான போட்டிகளும் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றமையால் பாடசாலை மாணவர்களும் ஆர்வம் காட்டியிருந்தனர்.

திருவிழாக்காலத்தில் நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சியால் அதிகளவான விவசாயிகள் நன்மை அடைந்துள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். நிதானமாகப் பேசுவதன் மூலம் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம்.



**இடபம்**: குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து அதன் மூலம் அவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வழக்குகளைத் தள்ளிப் போடுவதும் சமாதான முறையில் பேசித் தீர்த்துக்கொள்வதும் நல்லது.



**மிதுனம்**: எந்த ஒரு விடயத்தையும் கவனத்துடன் கையாள்வது நல்லது. எல்லாக் காரியங்களிலும் அனுகூலம் கிடைக்கும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை ஏற்படும். எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலாகச் செய்து வெற்றி பெறுவீர்கள்.



**கடகம்**: தொழில் வியாபாரம் விறுவிறுப்படையும். கடந்த காலங்களில் இருந்த மந்தநிலை மாறும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் சொற்படி நடந்து கொள்வது நல்லது.



**சிங்கம்**: குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். கூடவே மனதில் ஒரு வித கவலையும் இருந்து வரும். வாழ்க்கைத் துணையுடன் எதையும் பேசி தீர ஆலோசித்து செய்வது நன்மை தரும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.



**கன்னி**: எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலாகச் செய்து முடிப்பீர்கள். தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும். எதிலும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. எதிர்பாராத சில சம்பவங்கள் நடக்கலாம்.



**துலாம்**: தொழில், வியாபாரம் எதிர்பார்த்ததை விட சற்று நிதானமாகவே நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்ற நிலை காண்பார்கள். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் கலகலப்பு காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் எதிர்காலம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வழக்குகளில் நிதானமான போக்குக் காணப்படும்.



**தனுசு**: எடுத்த காரியங்கள் யாவும் கைகூடும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். எதிர்ப்புகள் விலகும். பயணம் மூலம் லாபம் கிடைக்கக் கூடும். புதிய நபர்கள் நட்புக் கிடைக்கும். எடுத்த காரியத்தை சோர்வடையாமல் செய்து முடிப்பீர்கள்.



**மகரம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பேச்சின் இனிமை, புத்திசாலித்தனம் இவற்றால் முன்னேற்றம் பெறுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பேச்சால் மேலதிகாரிகளைக் கவர்ந்து விடுவார்கள். அதனால் நன்மையும் கிடைக்கும்.



**கும்பம்**: பொருள்களைக் கவனமாக வைத்துக் கொள்வது நல்லது. குடும்பத்தில் இருந்த இறுக்கம் நீங்கி மனம் மகிழ்ச்சியடையத்தக்க சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் மூலம் தேவையான உதவியும் கிடைக்கும். வழக்குகளைத் தள்ளிப்போடுவது நல்லது.



**மீனம்**: எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் நன்மை உண்டாக்கும். ஆனால் குடும்ப விடயங்களைக் கூறாமல் தவிர்ப்பது நல்லது. மற்றவர்கள் கூறுவதைக் கேட்பதுடன் அது சரியா தவறா என்று யோசித்துப் பார்ப்பது நல்லது.

## நாளை

**ஆவணி-12 வியாழக்கிழமை | 28.08.2014**

திதி: திருதியை பி.இ.12.50 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப.11.32 வரை

சுபநேரம்: 07.35-09.05 வரை
இராகுகாலம்: 01.35-03.05 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உருவத்தில் மாறினாலும் தீமை குணத்தில் மாறுவதில்லை

சடப்பொருளின் பந்தத்திலிருந்து எம்மை விடுவிப்பவை நல்ல செயல்கள்; எம்மைப் பந்தப்படுத்துபவை தீய செயல்கள், ஒவ்வொன்றும் வட்டமாகச் செல்வதால் பிரபஞ்சம் எல்லையற்றதாகத் தோன்றுகின்றது. இது புறப்பட்ட இடத்துக்கே திரும்புகிறது. ஆகவே ஓய்வோ அமைதியோ இங்கு இருக்காது. நாம் வெளியேறித்தான் ஆக வேண்டும். நாம் அடைய வேண்டுவது முக்தி ஒன்று மட்டுமே...

தீமை, உருவத்தில் மாறிய போதிலும், குணத்தில் மாறுவது இல்லை. பண்டைக் காலத்தில் வலிமை ஆட்சி நடத்தியது, இன்றோ தந்திரம் ஆட்சி நடத்துகிறது. இந்தியாவின் துயரம் அமெரிக்காவின் துயரத்தைப் போல் அவ்வளவு மோசமானதல்ல. அமெரிக்க ஏழைகளின் கேடான நிலை முற்றிலும் மாறான நிலையில் செயற்படுகிறது.

நன்மை, தீமை இரண்டும் பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளன. இவற்றுள் ஒன்றைத் தவிர்த்து ஒன்றைப் பெறமுடியாது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சக்தி முழுவதும் ஓர் ஏரி போல் அமைந்துள்ளது. ஏரியில் ஓர் அலை எழும்போது, அதற்கு ஏற்றபடி ஒரு பள்ளமும் ஏற்படவே செய்கிறது. மொத்தம் சமமாகவே இருக்கிறது. ஒருவனுக்கு இன்பமளித்தல் மற்றொருவனைத் துன்புறுத்தலே ஆகும். புறத்துள்ள இன்பம் சடமயமானது; அது ஓர் அளவுக்கு உட்பட்டு இருப்பது; துளியளவாக இருந்தாலும் அது பிறரிடமிருந்து எடுக்கப்பட்டதே. சட உலகுக்கு அப்பால் இருக்கும் பேரின்பமே, பிறருக்கு இழப்பு ஏற்படாமல் பெறக்கூடியது. சட உலக இன்பம், சட உலகத் துன்பத்தின் மாற்று வடிவமே தவிர வேறில்லை.

# ஓட்ட வீரர்களுக்கு உதவும் அதிநவீன சாதனம்



போட்டிகளில் கலந்து கொள்ளும் ஓட்ட வீரர்கள் அதற்குத் தம்மைத் தயார்ப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உதவி புரியக்கூடிய அதி நவீன சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

runScribe எனப்படும் இந்தச் சாதனம் முப்பரிமாண பார்வையை வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் உதவியுடன் சரியான முறையில் ஒவ்வொரு வீரரும் தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள முடிவதுடன், தவறான முறைகளைக் கையாள்வதனால் ஏற்படும் காயங்களைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

காலணிகளில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய இக் கருவியில் 9 வகை சென்சர்கள் காணப்படுகின்றன.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | | 8 | 2 | 1 | | 5 |
| | 8 | | | | | 9 | | |
| 5 | | | | 9 | 3 | | | 2 |
| 6 | | | | 2 | | | | |
| 8 | 9 | | | 4 | | | 5 | 6 |
| | | | | 6 | | | | 7 |
| 7 | | | 6 | 3 | | | | 1 |
| | | 6 | | | | | 3 | |
| 1 | | 2 | 5 | 7 | | | 4 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 1 | 6 | 7 | 3 | 4 | 8 | 2 |
| 2 | 3 | 4 | 9 | 8 | 5 | 1 | 6 | 7 |
| 6 | 8 | 7 | 1 | 2 | 4 | 5 | 9 | 3 |
| 3 | 4 | 6 | 7 | 9 | 8 | 2 | 5 | 1 |
| 7 | 9 | 5 | 3 | 1 | 2 | 6 | 4 | 8 |
| 8 | 1 | 2 | 5 | 4 | 6 | 7 | 3 | 9 |
| 1 | 6 | 9 | 8 | 5 | 7 | 3 | 2 | 4 |
| 4 | 7 | 3 | 2 | 6 | 9 | 8 | 1 | 5 |
| 5 | 2 | 8 | 4 | 3 | 1 | 9 | 7 | 6 |

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 27
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நடுவர் சங்கத்தின் வருடாந்தப் பொது கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. இதில் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.
தலைவராக பா.முகுந்தன், செயலாளராக செ.சுபேந்திரன், பொருளாளராக வ.மனோராஜ், உப தலைவராக மு.நவநேசன், உப செயலாளராக ம.சதீஷ்கரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக க.கருணாநந்தன், மெய்யழகன், ரி.ரஜீகரன், ர.ஸ்ரீலக்ஷ்மன், பூ.கஜேந்திரன், க.ஜெயப்பிரதாபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (5-23-108)



கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான மாகாணமட்ட சதுரங்க ஆட்டத்தில் சம்பியனை வென்ற ஏறாவூர் ஐயங்கேணி தமிழ் வித்தியாலய அணி. (ரி-108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 27
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (5-23)

# இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது கருணாகரன் அணி

நெல்லியடி, ஓக. 27
பிரியங்கனின் 'ஹற்றிக்' அதிரடிக் கோல்களினால் வல்வெட்டித்துறை கருணாகரன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
இமையாணன் இளைஞர்களால் நடத்தப்பட்டு வரும் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் அரை இறுதியாட்டம் நேற்று கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வல்வெட்டி கருணாகரன் அணியை எதிர்த்து இமையாணன் எஸ்.எஸ். அணி மோதியது.
ஆட்டம் தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் கருணாகரன் அணியைச் சேர்ந்த சங்கீர்த்தனன் ஒரு கோலை எதிர்பாராதவிதமாக கோலாக்க இமையாணன் எஸ்.எஸ். அணி தம்மை சுதாகரித்துக் கொண்டது.
தமது ஆட்டத்தை வேகப்படுத்திய இமையாணன் எஸ்.எஸ். அணியின் வீரர் அஜிக்குமாரினால் கோல் போட ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது.



கருணாகரன் அணி வீரர்கள் தாம் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பந்துப் பாரிமாற்றங்களை மேற்கொண்டனர். கருணாகரன் அணி வீரர் பிரியங்கன் 8ஆவது, 10 ஆவது, 13 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து ஹற்றிக் கோல்களைப் போட்டு அசத்தினார்.
அதே நேரத்தில் சற்றும் சளைக்காமல் முன்னேறிய இமையாணன் எஸ்.எஸ். அணியினர் தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை கோலாக்கத் தவறினர். இருந்தபோது 18 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் கீர்த்தனன் ஒரு கோலைப் போட இடைவேளையின்போது 4:2 என்ற கோல் கணக்கில் வல்வெட்டித்துறை கருணாகரன் அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் முனைப்புடன் மோதிய போதும் 5 ஆவது, 7 ஆவது நிமிடங்களில் இமையாணன் எஸ்.எஸ். அணியினர் கோல் அடிக்கும் சந்தர்ப்பத்தை தவறவிட்டனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய கருணாகரன் அணி முன்னேறுவதை குறைத்து தடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதனால் கருணாகரன் அணியின் பின்கள வீரர்களை தாண்டி பந்து கொண்டு செல்வதில் இமையாணன் எஸ்.எஸ். அணியினர் சிரமப்பட்டனர். இறுதியில் 4:2 என்ற கோல் கணக்கில் வல்வெட்டித்துறை கருணாகரன் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ரி-422)

# கங்காரு அணியை சாய்த்தது காமாட்சி


யாழ்ப்பாணம், ஓக. 27
கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமியை 53 ஓட்டங்களால் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் வீழ்த்தியது.
கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமிக்கும் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான 35 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட நட்பு ரீதியிலான கிரிக்கெட் ஆட்டம் கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணியினர் 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அந்த அணி சார்பில் துடுப்பாட்டத்தில் சுயன் 56 ஓட்டங்களையும், வாமணன் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமி சார்பில் யனுசன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மதுசன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
172 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமி விளையாட்டுக்கழக அணியினர் 13.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.
இதில் தயாளன் 32 ஓட்டங்களையும், அஸ்லி 26 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பில் கார்த்தி 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வாமணன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (5-23)

# நட்புறவு உதைபந்தாட்ட தொடரின் முடிவுகள்

வலி.வடக்கு,ஓக.27
வடக்கு - தெற்கு நட்புறவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அதிபர் கே.மணிசேகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவரும் ஹமிதியா வித்தியாலயத்தின் அதிபரும், டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான கப்ரின் நஜிமுதீன், கல்லூரி உப அதிபர் க.பத்மநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள்.
மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் மகாஜனவை வீழ்த்தி வெற்றி பெற்றது.
அடுத்து நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ரி-86)



ஆட்டத்தில் பங்குபற்றிய அணியினர்.



# டோனியின் கருத்துக்கு பி.சி.சி.ஐ. கண்டனம்; இந்திய கிரிக்கெட் அணிக்குள் குழப்பமா?



ரவிசாஸ்திரி இயக்குநர் தான் ஆனால், பிளெட்சர் தான் எங்கள் பயிற்சியாளர். அவர் தான் அடுத்த உலகக்கிண்ணத் தொடர் வரை இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருப்பார் என்று டோனி கூறியமையும், அவ்வாறு டோனி தெரிவித்தமைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடுச் சபையின் தரப்பில் கண்டனங்களை வெளியிடப்பட்டுள்ளமையும் இந்திய கிரிக்கெட்டில் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை மோசமாக இழந்ததையடுத்து இந்திய அணியின் ஒருநாள் அணிக்கு இயக்குநராக ரவிசாஸ்திரியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்திருந்தது. ஒருநாள் அணியின் இயக்குநராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டதை அடுத்து, இந்திய அணியின் பயிற்சியாளர் பிளட்சர், எந்த முடிவை எடுப்பதென்றாலும் அதை ரவிசாஸ்திரியிடம் கேட்டே முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பிளட்சருக்குத் துணை என்று கூறி இரண்டு உதவிப் பயிற்சியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்திய அணித் தலைவர் டோனி கூறுகையில்; 2015 உலகக்கிண்ணத் தொடர் வரை பிளட்சர் தொடர்ந்து பணியாற்றுவார். இந்திய அணியின் பயிற்சியாளராக அவர்தான் தொடரவுள்ளார். ரவி சாஸ்திரி இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் பிளட்சர்தான் எங்களுக்குப் பயிற்சியாளர். அவரது அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளமை குறித்துப் பிரச்சினை எதுவும் இல்லை. மற்றவர்கள் வெளியில் என்ன பேசுகிறார்கள் என்பது குறித்தும் நான் கவலைப்படவில்லை. அணியை வெளியிலிருந்து நிர்வகிக்கும் பொறுப்பை ரவி சாஸ்திரி பார்ப்பார். பிறகு அவர் என்ன உணருகிறார் என்பதை எங்களுக்குத் தெரிவிப்பார். அவர் வந்திருப்பது தற்போது நல்ல விடயம் தான். அவர் பெருமைக்குரிய வீரர், போராடுவதில் மிகவும் நம்பிக்கை கொண்டவர், சரியான கோணத்தில் செயற்படுவார் என்று கூறினார். தற்போது செய்துள்ள இந்தப் புதிய மாற்றங்கள் மூலம் ஒரு நாள் தொடரில் சிறப்பாக செயற்பட்டு, டெஸ்ட் தொடரின் தோல்வியை மறக்க முயற்சிப்போம் என்று கூறியுள்ளார்.

இது குறித்து பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் படேல் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு கூறும்போது, நான் டோனியிடம் இதுபற்றிப் பேசவில்லை, பி.சி.சி.ஐ அவரது கருத்துக்கு பதிலளிக்காது. டோனி பிளெட்சர் பற்றிக் கூறியது அவரது சொந்தக் கருத்தே என்று கூறிய அவர், கிரிக்கெட் வாரியத்தின் முடிவுகளை அவரது கருத்துக் கட்டுப்படுத்தாது என்று தெளிவுபடுத்தினார்.

இதேவேளை- இது குறித்து பி.சி.சி.ஐ யின் முக்கிய அதிகாரி ஒருவர் பெயரைக் குறிப்பிடாமல் செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கூறுகையில்; டோனி தன் எல்லையை மீறியுள்ளார். அவரது கருத்து பெரும் ஏமாற்றம் அளிக்கிறது. இந்திய அணித் தலைவர் கூறியது பற்றி கிரிக்கெட் சபையின் அடுத்த செயற் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். அணியின் பயிற்சியாளர் யார் என்பதை டோனி தீர்மானிக்கக் கூடாது. இந்திய அணித் தலைவராக டோனி கொஞ்சம் எல்லை மீறி விட்டார். ஊடகங்கள் எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கும். ஆனால் ஒரு மூத்த கிரிக்கெட் வீரராகவும் தனது எல்லைகளை அவர் வரையறுத்துக் கொள்வது அவசியம். அணியில் விளையாடும் 11 வீரர்கள் யார் என்பதை எப்படி பி.சி.சி.ஐ. தீர்மானிக்காதோ அதே போல் அணியின் பயிற்சியாளர் எதுவரை நீடிப்பார் என்பதை டோனி தீர்மானிக்க முடியாது என்று கடுமையாகச் சாடியுள்ளார். (ரி)

# அமெரிக்க ஓபன் ரென்னிஸ் இரண்டாவது சுற்றுக்கு இலகுவாக முன்னேறிய ரத்வான்ஸ்கா

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்ஸ்கா மிக இலகுவாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளர். அத்துடன் ஜப்பானின் குருமிநாராவும் முன்னேறினார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்ஸ்கா, கனடாவின் ஷரோன் பிஷ்மேனை சந்தித்தார். அபாரமாக ஆடிய ரத்வான்ஸ்கா 6-1, 6-0 என்ற நேர் செற் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் செக்குடியரசின் லூசி சபரோவா 6-4, 7-5 என்ற நேர் செற் கணக்கில் ஹங்கேரியின் டிமியா பபோசை தோற்கடித்தார். மற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் ருமேனியாவின் சிமோனா ஹபெப், ஜப்பானின் குருமி நாரா, சீனாவின் சாய்சய் ஜெங், சுவிற்ஸர்லாந்தின் பெலிண்டா பென்சிக், சுலோவாகியாவின் ஜனா செபெலோவா ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஆர்ஜென்ரினாவின் லியோனார்டோ மேயர் 6-2, 3-0 என முன்னிலை வகித்த போது, ஸ்பெயினின் ஆல்பர்டோ மான்டனஸ் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மேயர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றுமொரு போட்டியில், இத்தாலியின் ஆன்டிரியாஸ் செப்பி 6-3, 6-1, 6-4 என்ற நேர் செற் கணக்கில் உக்ரைனின் செர்ஜி ஸ்டாகோவ்ஸ்கியை தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (ரி)

# டோனி இருக்கும் வரை அணியில் இடமில்லை - பார்த்திவ் பட்டேல்



டோனி இருக்கும் வரை இரண்டாவது இலக்குக் காப்பாளராக அணியில் இடம்பிடிப்பது கடினமே என்று கூறியுள்ளார் இந்திய அணி வீரரும், இலக்குக் காப்பாளருமான பார்த்திவ் பட்டேல். இருந்தாலும் அணியில் இடம்பிடிப்பதற்கு தொடர்ந்தும் முயற்சி செய்வேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது :-

அணியில் இல்லாதிருந்து விட்டு மீண்டும் அணியில் நுழையும் போது புதிய உத்வேகம் எனக்குள் ஏற்படுகிறது. ஆனால் தற்போதைக்கு வெறுப் பாகவே உள்ளேன். தொடர்ந்து சிறப்பாக ஆடுவதன் மூலம் அணியில் இடம்பெற முயற்சி செய்து கொண்டிருப்பேன். இளம் வயதில் இந்திய அணிக்குள் நுழைந்தது அனுகூலமற்றது என்று எண்ணத் தோன்றவில்லை. அணியில் தேர்வாகி முதல் 3 அல்லது 4 தொடர்களில் சிறப்பாகவே செயற்பட்டேன். அதன் பிறகு ஓரிரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் மோசமாக அமைந்தன. நான் சர்வதேச கிரிக்கெட்டுக்குத் தயாராக இல்லையெனில் முதல் தொடரிலேயே எனது திறமை அம்பலமாகியிருக்கும். மாறாக எனக்கு இளம் வயதில் வாய்ப்பு கிடைத்திருந்தது. இந்திய அணியில் எனது இடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க முடியாமல் போனதற்கு டோனியே காரணம். ஏனெனில் அவர் இலக்கு காப்பாளராக செயற்படும்வரை இரண்டாவது இலக்கு காப்பாளராக அணியில் தெரிவாவது கடினம். அந்தப் பணியை அவர் மிகமிகச் சிறப்பாக செய்து வருவதால் இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கும் டோனிக்கும் இடையில் போட்டி இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர் உலகின் தலைசிறந்த அணித் தலைவர்களில் ஒருவர். நாங்கள் சந்திக்கும்போது ஓரிரு விடயங்களைப் பகிர்ந்து கொள்வோம். அவர் அதிகம் பேசமாட்டார். அவருக்குக் கீழ் நான் விளையாடும் போதெல்லாம் என்னைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொள்ள அனுமதித்துள்ளார், அவர் இவ்வாறு கூறினார். (ரி)



# நாடு திரும்பினார் யுனிஸ்கான்

தனது சகோதரியின் மரணத்தை அடுத்து, இலங்கையில் இருந்து உடனடியாக பாகிஸ்தான் திரும்பினார் யுனிஸ்கான். இதனால் இலங்கை அணிக்கெதிரான 2ஆவது மற்றும் 3ஆவது ஒருநாள் ஆட்டங்களில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 2015 உலக கோப்பை தொடரைக் கருத்திற் கொண்டு, நீண்ட இடைவெளிக்குப் பின், பாகிஸ்தான் ஒருநாள் அணியில் இடம் பெற்றார் மூத்த வீரரான யுனிஸ்கான் இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் பங்கேற்று இருந்தார். இந்நிலையில் இவரது சகோதரியின் மகன் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சையில் மரணம் அடைந்தார்.

இதனால், இலங்கையில் இருந்து யுனிஸ்கான், உடனடியாகப் பாகிஸ்தானுக்குத் திரும்பினார். ஏற்கனவே, பந்து வீச்சுச் சந்தேகம் காரணமாக முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் அணியில் இல்லை. நேற்று நடைபெற்ற ஆட்டத்திலும் அடுத்து நடைபெறவிருக்கும் ஆட்டத்திலுமாக இரு ஆட்டங்களில் யூனிஸ் கானும் அணியில் இடம்பெறாதது பாகிஸ்தான் அணிக்கு மிகப்பெரிய இழப்பு ஆகும். (ரி)

## ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
### தெல்லிப்பழை
வருடாந்த மகோற்சவம் - 2014
முதலாம் திருவிழா கொடியேற்றம்



தேசம் போற்றும் தெல்லை நகர்த்தேவி
பாவவினை அகற்றி பரிவு காட்டும் பத்தினி
நாடி வந்தவர் நலம் காக்கும் நாயினி
கொடியேறி கோல விழாக்காணும் கொற்றவையே
பாடிப் பரவி பக்தர்கள் பணிவர் பன்னிரு நாளும்...
-அடியவர்-

(C/16189)(10)

அனுசரணை:

**துர்க்கா போட்டோ & வீடியோ**
துர்க்காபுரம்- தெல்லிப்பழை.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**
தெல்லிப்பழை.


## இலங்கை அணி வெற்றி



பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அம்பாந் தோட்டை மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மத்தியூஸ், மஹேல ஜெயவர்த்தன, பெரேரா முறையே 93, 67, 65 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 233 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக மொகமட் ஹபீஸ் 62ஓட்டங்களையும், அகமட் செஹாட் 56 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணி சார்பாக அதிகபட்சமாக பெரேரா 3 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக பெரேரா தெரிவானார்.

(ரி)


## அதிஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய முன்றலில், முறிகண்டீஸ்வரர் ஆலய கட்டட நிதிக்காக 25.08.2014 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்

**முதலாம் பரிசு** 6530 (கா.கிருஸ்ணராஜா- A9மேற்கு திருமுறிகண்டி)
**இரண்டாம் பரிசு** 6359 (நா.கலாநிதி, வசந்தநகர், திருமுறிகண்டி.)
**மூன்றாம் பரிசு** 2278 (சு.யஸ்ஷன், உரும்பிராய் மேற்கு)

**5 ஆறுதல் பரிசுகள்**
4322, 0853, 7001, 0008, 5681

(47859)(10)

**திருமுறிகண்டி. திருமுறிகண்டீஸ்வரர் ஆலய பரிபாலன சபை.**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.10.1930 மறைவு 06.09.2013

**திருமதி இரத்தின சிகாமணி வேலும் மயிலும்**

திதி: வளர்பிறை துதியை (27.08.2014)

ஆண்டொன்று சென்றாலும் அம்மா! உங்கள்
நினைவுகள் எம் மனதில் நிழலாக நீற்கின்றன
உங்கள் நினைவுகளை தந்துவிட்டு உறவுகளை
புலம்ப விட்டு எம்மைத் தவிக்க விட்டு சென்றீர்கள்!
ஆயிரம் சொந்தங்கள் அருகினிலே இருந்தாலும்
அம்மா!...
உங்களைப் போல் அவனியிலே யார்? வருவார்!
ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்...

(C/16188)(10.6.3)

நவசலம், இராசவீதி, நவக்கிரி, புத்தூர். **குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



12.08.2014 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

**விசுவலிங்கம் இரங்கநாதன்**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (27.08.2014) புதன்கிழமை கீரிமலையிலும், வீட்டுக்கிருத்தியம் நாளை (28.08.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தாகலட்டி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி. **குடும்பத்தினர்.**

(51270)(10)

## கண்ணீர் அஞ்சலி

**விஜயரட்ணம் சுதாகரன் (சுதா)**



(யாழ். மாநகரசபை ஊழியர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(51272)(10) **K.R. அசோகன், R.S. சேவியர், S. துர்க்கா.**






# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA.

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid Fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Orthopaedic Clinic & Renovation of Toilet in Ward No:06 | 500.00 | 23,000.00 | 91 | 1.12 | C8 |
| Renovation of Neurosurgical Ward, Aluminium Partition in the Operation Theatre and Aluminium Partition of Rooms in 1st & 2nd Floor-JICA Building | 500.00 | 25,000.00 | 91 | 1.24 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 28.08.2014 until at 4.00 pm on 10.09.2014 during office hours. The payment shall be made to the Shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 11.09.2014, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
27.08.2014.

(C/16188)(10.6)


## மரண அறிவித்தல்கள்

### சேகரன் தியாகராசா



காரைநகர் நீலங்காட்டைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சேகரன் தியாகராசா நேற்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான சேகரன் - சீதை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜிவாஜினி, கிருபானந்தன், கோபிநாத், பத்மலோஜினி, உதயலோஜினி, சுபாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சஞ்சீபன், ரஞ்சிதமலர், மனோராஜ் ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிஸ், ஜிதுஷன், அனந்திகா, கேவ்னு ஷான், வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிவரவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், நயினாதீவு.

தகவல்: **குடும்பத்தினர்.**

### திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை



பெரியாவுடை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொட்டைக்காட்டு லேன், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சங்கரப் பிள்ளை நேற்றுமுன்தினம் (25.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டைக்காட்டு வீதி,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில

தகவல்: **குடும்பத்தினர்.**

(51268)

# தொற்றாநோய் பரிசோதனை முகாமும் கருத்தரங்கும்

தென்மராட்சி, ஓக.27
மட்டுவில் வடக்கு குடும்பநல சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இலவச தொற்றாநோய் பரிசோதனை முகாமும், கருத்தரங்கும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.
பரிசோதனை முகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பிரிவில் வசிக்கும் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-9)


## காணவில்லை



கந்தசாமி நாகரட்ணம் (பாட்டா அண்ணை)
புளியம்பொக்கணை சந்தியையும் தற்போது நவாலி வடக்கையும் வசிப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த சில காலமாக நோய் வாய்ப்பட்டிருந்தவர். 23.08.2014 முதல் இவரைக் காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
(51256) (1.6.3) தொடர்பு: 077 337 9322 கிரான் (பேரன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியரான
ந.ராமதாஸ்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி அன்னலக்ஸ்மி நடராசா
அவர்களின் மரணச்செய்தி கேட்டு துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.
(51260) (12.3.6)

## வேலைவாய்ப்பு

யாழ். மற்றும் கிளிநொச்சிக் கிளைகள்
காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது 53ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.
* நீங்கள் அரசாங்க நிதித் துறையில் பணிப்புரிய ஆர்வமுள்ளவரா?
* உங்கள் சமூகத்தில் சிறந்த நிதி ஆலோசகராக செயற்பட விரும்புகிறீர்களா?
* பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதினைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!

தகைமை
G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.
நீங்கள் எம்முடன் இணைந்தால்.
* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்.
* வெளிநாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகனக் கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்.
இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 10.09.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
முகாமையாளர்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (51254) (10.6.3)
ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தந்தையும் தாயும் போன்று


## இலங்கை தமிழரசுக் கட்சியின் திருமலைக் கிளை புனரமைப்பு

திருகோணமலை, ஓக.27
இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை தேர்தல் தொகுதிக்கான கிளை புனரமைப்பு நிகழ்வு திங்கட்கிழமை காலை திருகோணமலை நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் திருகோணமலை கட்சியின் மாவட்ட கிளைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.துரைரெட்ணசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி, திருகோணமலை நகரசபை தலைவர் க.செல்வராஜா ஆகியோரும் திருகோணமலை தொகுதி கிளையின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஓ-10)


### சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சை-2014

பரீட்சை வினாத்தாள் தொடர்பான - சிறப்பு வழிகாட்டல்
(பொது அறிவு மற்றும் நுண்ணறிவு)
26.08.2014 9.AM (51145) (4.6.3)
நியூ பிறைற் கல்வி நிலையம்
95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் இருந்து ஒரு மைல் தூரத்தில் வீடு ஒன்று வாடகைக்குண்டு.
(கி15850) (12.3.6) தொடர்பு: 077 915 2223

### வீடு வாடகைக்குண்டு

புங்கன்குளம் வீதியில் புகையிரத நிலையத் திற்குச் சமீபமாக நான்கு (4) அறைகளும், இரண்டு (2) குளியலறைகளும், ஒரு (1) களஞ்சிய அறையும், கார்த்தரிப்பிட வசதியுமுடைய வீடு வாடகைக்கு உண்டு.
(51253) (12.3.6) தொடர்பு: 077 716 4937

### வாடகைக்கு

யாழ்.நகரில் வர்த்தக மையப்பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில், பஸ் நிலையத்திற்கு முன்பாக இரண்டு கடைகளும், யாழ்.ஸ்ரான்லி வீதியில் 6 கடைத் தொகுதியும், யாழ் K.K.S வீதியில் HSBC, DFCE வங்கிக்கு முன்பாக ஐந்துமாடி புதிய கட்டடங்களும், யாழ்.பருத்தித்துறை வீதியில் 4 மாடியில் புதிய கட்டடமும் உடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: (51259) (12.3.6)
கனகசபை தர்மகுலசிங்கம்
077 723 2535/021 222 2535

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது பிரதான விநியோகஸ்தரான இரசாயனவியல் ஆசிரியர்
சு.சுரேஸ்குமார் B.Sc (Hons) MBA (Lon)
அவர்களின் இராசயனவியல் நூல்கள் பல்வேறு அலகுகளில் நாடளாவிய ரீதியில் ஒரு லட்சம் பிரதிகளைத் தாண்டி விற்பனையாகின்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
லங்கா புத்தகசாலை-கொழும்பு
ஸ்ரீ லங்கா புத்தகசாலை-யாழ்ப்பாணம்.
(C/16182)(10.6.3)

## ஹோட்டல் அக்ஷதைக்கு நன்றி

என்னால் தற்செயலாக தவறவிடப்பட்ட ஒரு லட்சம் ரூபா பணத்தினை கண்காணிப்பு வீடியோ கமெரா மூலம் மீளவும் பெற்றுத் தந்த ஹோட்டல் உரிமையாளர், முகாமையாளர், சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
(51243) (4.6.3) நன்றிகளுடன் - B.அரவிந்தன் இணுவில்.

## வேலையாள்கள் தேவை

SAI HOLIDAY INN, JAFFNA
இந்த நிறுவனத்துக்கு கீழ்க்காணும் வேலையாள்கள் தேவை.
Computer Operater /Designer, House Keeping (Male / Female), Garden man, Cooks, Auto driver,
தகைமையுடையவர்கள் உங்கள் விண்ணப்பங்களுடனும், 2 Photo களுடனும் 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 30.08.2014 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு வருகை தரவும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பேதுருப்பிள்ளை அன்ரனிப்பிள்ளை
பிறப்பு 24.12.1919
இறப்பு 02.09.2013

நினைவகலா நினைவுடனே நிமலனடிசேர்ந்து இன்று
ஓராண்டு கலைந்ததுவோ, நிழலாக எம்மனதில்
என்றுமே வாழ்கின்றீர் ஐயா!
நின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் அருள் ஆச்சிரமத்திலும் ஆத்மசாந்தித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
கடற்கரை வீதி, எழிலூர், கொழும்புத்துறை.
பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலக்ஸ்மி நடராசா



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் காவோலயம்புலம், கொற்றாவத்தை அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலக்ஸ்மி நடராசா 26.08.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற இராமன் நடராசா (ராசு) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், சித்திரவேலாயுதம், ஆனந்தராசா, ஆனந்தச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ் வரன் (NRA எலக்ரிக்கல்ஸ் வேக்ஸ், மீசாலை) ராமதாஸ் (ஆசிரியர், கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ரதீஸ்வரன் (கட்டார்), ராமலக்ஸ்மி, ரவீந்திரன் (இலங்கைப் போக்குவரத்துச் சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜமுனா, மைதிலி (ஆசிரியர், யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), சைலஜா, யோக ராஜா(லிகிதர், பனை தென்னை வளகூட்டுறவுச் சங்கம் தென்மராட்சி), ஜனனி ஆகியோரின் அன்பு மாமியும், கெங்காதேவி, சாந்தி, வாசுகி, பவளம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2014) புதன்கிழமை ந.ப. 12.00 மணியளவில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
'நடராஜபதி',
காவோலயம்புலம், கொற்றாவத்தை,
அல்வாய் மேற்கு, அல்வாய். (49750)(6.4.3)
தகவல்: குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இராஜேஸ்வரி மகாலிங்கம்
பிறப்பு 24.12.1945
இறப்பு 13.09.2007
திதி: துதியை

அன்பு வழியில் எமை அரவணைத்து ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்ப மிக நல்லறமாம் இல்லறத்தை ஈடேற்றிய எம்மிதய தெய்வமே!
ஆண்டுகள் ஏழு ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
நவாலி தெற்கு, மகாலிங்கம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னக்கண்டு சின்னக்கண்டன் (இராசம்மா)



நாவலடி உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி சின்னக்கண்டு சின்னக் கண்டன் நேற்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாரி - பொன்னி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டியர் - சிவப்பி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னக்கண்டனின் அன்பு மனைவியும் இராசமணி (கனடா). நேசமணி (கொழும்பு). நவமணி (இளைப்பாறிய அதிபர். யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). ஜெயமணி (கனடா). ரஞ்சிதமணி (ஆசிரியை. கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம்). ரமணி (லண்டன்). கீதமணி (ஆசிரியை. யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி). லதாமணி (ஆசிரியை,யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேந்திரன் (கனடா). கிருஷ்ணன் (முன்னாள் கட்டடத் திணைக்களப் பணிப்பாளர். வடக்கு கிழக்கு மாகாணம்). சந்திரசேகரம் (இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர். வட மராட்சி வலயம்), செல்வரத்தினம் (கனடா). சாந்தகுணம் (லண்டன்). கிரிதரன் (அதிபர். யா/கர வெட்டி ஸ்ரீ நாரதர் வித்தியாலயம்). அருந்தவச்செல்வம் (ஆசிரியர். மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் ரவி. ராஜினி. சாந்தினி. கல்யாணி. கம்ஷானந்தி. பாவனி. கிரிசாந். சுசிந்தன். கௌஷிகா. சகானா. சேயோன். அமிர்தவர்ஷன். இராகவர்ஷன். அபிராம். அபிலயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ராகவி. துவாரகா. கவின். தருண் ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(27.08.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவமணி வாசம்'
நாவலடி, உடுப்பிட்டி.
தொ.பே.: 0778947603 (சி-16190)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் கந்தையா

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கலட்டி லேன் கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கந்தையா நேற்று (26.08.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-மகேஸ்வரியின் (நேசம்) அன்புக் கணவரும், யோகமலர் (ஜேர்மனி) குமார், செல்வராணி, விஜயன், தயா, காலஞ்சென்ற கிருஷ்ணா மற்றும் வதனி, கண்ணன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(51274) (10)

தகவல்: **மருமகன் (கணபதி மோட்டர்ஸ்)**
**077 579 2726**

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி பொன்னையா (இளைப்பாறிய அதிபர்)



சங்கானை மேற்கு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், தனிநாயகம் வீதி, கூமாங்குளத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட மனோன்மணி பொன்னையா (இளைப்பாறிய அதிபர்) 24.08.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கட்டுவன் தெல்லிப் பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தம்பி முத்து பொன்னையாவின் (வைத்தியசாலை ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கட்டுவன் தம்பி முத்து-சின்னம்மா தம்பதியரின் மருமகளும், கருணாகரன் (லண்டன்), கருணாவதி (கனடா), கருணைமதி (கனடா), கருணைக்குகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி, கந்தசாமி, ரவீந்திரன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற நாகராஜா மற்றும் சிவயோகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் ஞானரஞ்சிதம், மனோறஞ்சிதம், காலஞ்சென்ற இராசறஞ்சிதன் மற்றும் சிவசத்திய றஞ்சிதம், ஜெகநாதன், சூரிய குமாரன், ஜெயசூரியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக்கிரியைக்காக கூமாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**T.P:077 348 6458, 077 616 5078, 077 915 2264, 001 41 630 57789.**

**இல. 03,**
**தனிநாயகம் வீதி,**
**கூமாங்குளம், வவுனியா.** (48977) (10)

## கடை விற்பனைக்கு

யாழ். நகர் மத்தியில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சகல வியாபாரங்களுக்கும் பொருத்தமான கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு: **0777 608 930** (51263) (18)

## பணியாளர் தேவை

- ★கணினி பக்க வடிவமைப்பாளர் (photoshop, Coraldrow)
- ★வீடியோ மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்
- ★உதவியாளர்கள்

உடன் தேவை.

**மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**077 224 7428** (F/16185) (1.63)

**திறப்பு விழா அழைப்பு**

# அன்ரனி

**ஜ்வெல்ஸ் டிசைனேர்ஸ்**



என்னும் ஸ்தாபனம்

**இன்று (27.08.2014) புதன்கிழமை**
**மு.ப. 7.00 மணி முதல் 9 மணிவரை உள்ள சுபவேளையில்**

**இல.137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் முகவரியில் மங்கலகரமாக திறந்து வைக்கப்படுகிறது.

இந்நிகழ்வுக்கு அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் குடும்ப சகிதம் வருகைதந்து நிறுவனம் சிறப்புற ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்*

**திரு.திருமதி. அன்ரனி குடும்பத்தினர்.**

(C/16186)(10.6.3)

இல. 137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பான் ஏஷியா வங்கி

**மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை**

பான் ஏஷியா வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் அடகு மற்றும் ஈடு வைக்கப்பட்டவையும் 15.07.2014 ஆம் திகதி அல்லது அதற்கு முன் மீட்கப்பட வேண்டியவையும் ஆனால் 22.08.2014 திகதி வரை மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்து தங்க ஆபரணங்களும் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு மு.ப. 9 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

| கிளைகள் | ஏல விற்பனை நடைபெறும் இடங்கள் |
|---|---|
| அக்கரைபற்று. மட்டக்களப்பு. கிளிநொச்சி. சுன்னாகம், யாழ்ப்பாணம், கதுருவெல, கல்முனை. காத்தாங்குடி. நெல்லியடி. திருகோணமலை. வவுனியா. | யாழ்ப்பாணக் கிளை<br>இல. 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.<br>30.08.2014 திகதி தொடக்கம் தினமும்.<br>(அனைத்து ஆபரணங்களும் முடிவடையும் வரை) |

ஏல விற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

உதவி பொது முகாமையாளர் (சிறிய நடுத்தர கடன் மற்றும் அடகு)
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பீ.எல்.சி.
450, காலி வீதி, கொழும்பு - 03.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சாம்பசிவம்

**(ஓய்வுபெற்ற அதிபர் யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்)**



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சாம்பசிவம் நேற்று (26.08.2014)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-அன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற குமாரசாமி-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், இராதாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், இரஞ்சினியின் (ஆசிரியை, யா/ஊரெழு கணேச வித்தியாலயம்) அன்புத் தந்தையும், கணேசதேவாவின் (ஆசிரியர்,யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) பாசமிகு மாமனாரும், அரண்யாவின் பேரனும், காலஞ்சென்ற பத்மாதேவி மற்றும் தேவராணி, சௌந்தரராணி, இந்திராதேவி ஆகியோரின் சகோதரரும்,காலஞ்சென்ற கேசவன் (ஓய்வுபெற்ற அதிபர்)மற்றும் மாதவன் (ஓய்வுபெற்ற ப.நோ.கூ.ச. கிளை மேற்பார்வையாளர்),ஜானகிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(27.08.2014) புதன்கிழமை ந.ப. 12.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
021 491 6966
077 820 2326

**இல.14, கோப்பாய் வீதி,**
**உரும்பிராய்.** (51264)(5.6)

## தொடர்ச்சிகள்

### ஈழத் தமிழருக்கு

இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி சென்னையில் போராட்டம் ஒன்றை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### அச்சுவேலியில்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் கைத்தொழில் அதிகார சபையின் ஏற்பாட்டில் அச்சுவேலியில் மீளப்புனரமைப்புச் செய்யப்பட்ட இந்தக் கைத்தொழில் பேட்டையில் 22 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் இந்தியத் தூதுவர் வை.கே சின்ஹா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அரச கட்சித் தலைவர்கள், அரச அதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (த-14)

### தென் பகுதியின்

கொண்டிருக்கின்றார்கள். பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டு, முற்றாக வளம் அழிக்கப்பட்ட நிலையில்தான் எமது வர்த்தகர்கள் இருக்கின்றனர்.

போருக்கு முன்னர் இங்கு மத்திய அரசின் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்தும் இங்கு எந்தவொரு தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படவில்லை.

தென்னிலங்கையிலிருந்து பொருள்களைக் கொண்டு வந்து இங்கு விற்பனை செய்யும் ஒரு சந்தையாகவே வடக்கு மாகாணம் இருக்கின்றது.

மத்திய அரசின் நிதி நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளாக இங்கு அதிகமாக முளைத்தன. அவர்கள் எந்தவொரு திட்டமும் இன்றிக் கடன்களை வழங்கினர். இங்குள்ள எமது வர்த்தகர்களும் எதுவித திட்டமும் இன்றிக் கடன் கிடைக்கின்றது என்பதற்காக அவற்றைப் பெற்றனர். இதன் காரணமாக வடக்கின் பொருளாதாரம் கடந்த இரண்டு வருடங்களாக படுகுழியில் தள்ளப்பட்டது.

16 வர்த்தகர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

மத்திய அரசின் நிதி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வடக்கின் கடன் இலக்கு அதிகரித்துக் கொண்டு சென்றது. அவர்களின் ஒரே இலக்கு கடன் இலக்கு அதிகரிப்பதுதான். அதற்காக அவர்கள் எமது வர்த்தகர்களை மூளைச்சலவை செய்து அதிகப்படியான கடன்களைத் திணித்தனர். எமது வர்த்தகர்களும் திட்டமிடாமல் இதில் சிக்கிக் கொண்டனர்.

ஆனால் தற்போது புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பினால் நாம் மீண்டெழுந்து வருகின்றோம். நல்லூர்த் திருவிழா உற்சவத்துக்கும், தற்போதைய விடுமுறையைக் கழிப்பதற்கும் பெருமளவு புலம்பெயர் தமிழர்கள் இங்கு வருகின்றனர். அவர்கள் முன்னைய காலங்களைப் போன்று இந்தியாவிலோ, சிங்கப்பூரிலோ, டுபாயிலோ பொருள்களை வாங்கி வருவதில்லை.

இங்கு வந்து எமது வர்த்தகர்களிடமே பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் துணி வியாபாரம், நகை வியாபாரம், ஹோட்டல் வர்த்தகம் என்பன மீளெழுந்துள்ளன. இவை தொடர்ச்சியாக மீளெழ வேண்டுமாக இருந்தால், புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்தும் எமது மண்ணிலேயே பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும் - என்று குறிப்பிட்டார். (த-5)

### பேச்சுக்கு

படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் படகுகளும் கைப்பற்றப்பட்டன.

எனினும் இரு நாட்டு நல்லுறவைப் பேணும்பொருட்டுக் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிப்புச் செய்யப்பட்ட நிலையில் 62 படகுகள் இலங்கை அரசால் அரச உடைமையாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதுவரை படகுகள் விடுவிக்கப்படாத நிலையில், மீனவர் பேச்சு நாளைமறுதினம் நடைபெறவுள்ளதால் பேச்சுக்கு முன்னதாகப் படகுகள் விடுவிக்கப்படும் என மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் உட்பட மீன்வளத்துறை அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

எனினும் இலங்கைக் கடற்றொழில் அமைச்சு படகுகளை விடுவிக்க ஒரு போதும் சம்மதிக்கமாட்டோம் எனத் தெரிவித்துள்ளது. அத்துடன் படகுகள் விடுவிக்கப்பட்டால் மீண்டும் அத்துமீறல் தொடரும் என்பதால் இதற்கு அமைச்சு சம்மதம் தெரிவிக்கக்கூடாது என வடக்கு மீனவர்கள் உட்பட பலரும் பல்வேறு கூட்டங்களில் முடிவு எடுத்துள்ளனர். (த-14)

### வருமான வரி

அழைத்து அண்மையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தோம். இதற்கு நிதி அமைச்சின் செயலாளரும் வருகை தந்திருந்தார். அந்த 500 பேரின் பிரச்சினைகள் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் நேரடியாகவே அறியக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இதேபோன்ற தொரு சந்திப்பை இங்கும் ஏற்படுத்தித் தருவேன்.

நீங்கள் இரவு பகல் பாராமல், விடுமுறை பாராமல் உழைக்கும் பணத்தை நாங்கள் சட்டரீதியாக அரசுக்குப் பெற்றுக் கொடுக்கின்றோம். யாரும் வரி செலுத்துவதிலிருந்து விடுபட முடியாது. சட்டரீதியான கடப்பாடு உங்களுக்கு இருக்கின்றது.

வருட வருமானம் 10 லட்சத்துக்கு மேல் பெறுபவர்கள் அனைவரும் தாமாகவே வரி செலுத்த வேண்டும். இதனூடாக சட்டரீதியான சிக்கல்களை எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியும். அத்துடன் வரி செலுத்த வேண்டிய நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரான உரிய காலத்தில் வரி செலுத்தப்படவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரம் பேர் வரையில் வருமான வரி செலுத்துகின்றனர். இலங்கையிலேயே, வருமான வரி தொடர்பான திரட்டுப் படிவத்தை உரிய காலத்தில் சமர்ப்பிப்பவர்கள் இங்கேயே கூடுதலாக உள்ளனர். கடந்த 2012 ஆம் ஆண்டு இங்கு 7 பேர் தங்கம், வெள்ளி சிறப்பு அட்டைகளைப் பெற்றனர். கடந்த 2013 ஆம் ஆண்டு 15 ஆக அது அதிகரித்தது. தற்போது அது 21 ஆக அதிகரித்துள்ளது. வருடாந்த வரியாக 5 லட்சத்துக்கு மேல் செலுத்துபவர்களுக்கு வெள்ளி சிறப்பு அட்டையும், 10 லட்சத்துக்கு மேல் வரி செலுத்துபவர்களுக்கு தங்க அட்டையும் வழங்கப்படுகின்றன. இதனூடாக இவர்கள் பல்வேறு சிறப்புச் சலுகைகளை அனுபவிக்க முடியும் - என்றார். (த-5)

### ஹாண்டில்

யப்படுகின்றன. திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை வெளியே தெரியாதவாறு மறைத்து வைத்தே அவற்றைப் பாகங்களாக்குவதனால் அவற்றைக் கண்டறிவது கடினமானது.

பாகங்களாக்கப்பட்ட பின்னர் அவை பிற மாவட்டங்களுக்குக் கடத்தப்படுகிறதா என்பது தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. எனவே மோட்டார் சைக்கிள்களை அவற்றின் உரிமையாளர்கள் உரிய முறைப்படி பூட்டிவிட்டு, பின்னர் 'ஹாண்டில் லொக்' போட்டுவிட்டுச் செல்லுமாறு பொலிஸார் கூறியுள்ளனர். (த-4)

### ஐ.நா.பொதுச்

திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உரையாற்ற ஐ.நா. சபை அனுமதிக்கக்கூடாது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் குறித்து இந்தியாவில் விசாரணை நடத்தவேண்டும். அதற்காக ஐ.நா. சபை நியமித்துள்ள விசாரணைக் குழுவுக்கு இந்தியா வர மத்திய அரசு விசா வழங்கவேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, மத்திய, மாநில அரசுகள் இணைந்து தமிழக மீனவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்படி நான்கு தீர்மானங்களே நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. (த)

### பாப்பரசரின்

இலங்கைப் பயணத்தின் போது பரிசுத்த பாப்பரசர் மடு தேவாலயத்துக்குச் செல்வார். அதன் மூலம் பெருமளவு தமிழ் மக்கள்வாழும் மடுப்பகுதியில் காலடி வைக்கும் முதலாவது பரிசுத்த பாப்பரசராகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற சிங்களவர் தமிழர்களுக்கிடையிலான 26 வருடகால உள்நாட்டுபோரில் மிகவும் உணர்வு பூர்வமான விடயத்துக்குள் நுழைவதற்கு அவர் தீர்மானித்துள்ளார். பரிசுத்த பாப்பரசரின் பயணம் சில போக்குவரத்துப் பிரச்சினைகளை உள்ளடக்கியது. எனினும், நல்லிணக்கத்தை மையப்படுத்திய இந்த பயணத்தின் போது தமிழ் மக்களைப் புறக்கணிக்க முடியாது.

தமிழ் மக்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பு ஆட்சியின் கீழேயே வாழ்கின்றனர். அவர்கள் இன்னமும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், ஒடுக்கு முறை போன்ற மனித உரிமை மீறல்களுக்கு உட்படுகின்றனர். பரிசுத்த பாப்பரசரின் இந்தப் பயணம் தேவாலயத்துக்கு திருப்புமுனையாக அமையும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

### இந்திய

கட்ட பேச்சு தோல்விய டைந்த நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (ற-14)

### அரசியல்

உள்நாட்டில் தீர்வைக் காண்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்காததனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவை நாடியுள்ளது எனச் சுட்டிக்காட்டும் பிரதான எதிர்க் கட்சியும், சிவில் அமைப்புகளும் கூட்டமைப்பின் டில்லி பயணத்தையும் வரவேற்றுள்ளன. இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் குறித்து கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறே காங்கிரஸ் அரசும் கோரியது. தற்போது மோடி அரசும் இதையே வலியுறுத்துகின்றது. எனவே, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கையின் அரசியல் தீர்வு விடயத்தைக் கையாள்வதற்குப் பிரதிநிதியொருவரை நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கையை பிரதமர் மோடி நிராகரித்துள்ளார் என அறிய முடிகின்றது.

குறிப்பாக, இந்தியாவில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தாலும் ஆட்சிக்கு வரும் அரசுகள் இலங்கையில் உள்நாட்டுத் தீர்வுப் பொறிமுறையையே வலியுறுத்தும். ஆகவே, தீர்வு விடயத்தில் வெளிநாட்டு மோகத்தைக் கைவிடுத்து உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை வைத்து கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்படவேண்டும். தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-சி)

### காணி

திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வந்திருந்தபோதும், அங்கு திரண்ட மக்களின் கடும் எதிர்ப்பால் அந்த முயற்சி கைகூடாது போயுள்ளது. அப்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையால் அபூபக்கர் (வயது-54) என்பவர் காயமடைந்து புல்மோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றுக் காலை 8.30 மணியளவில் அங்குவந்த நில அளவையாளர்கள் மக்களின் காணிகளுக்குள் நின்று பொலிஸ் பாதுகாப்புடன் அள வீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆயினும் மூன்று கிராமங்களையும் சேர்ந்த சுமார் 600 இற்கும் மேற்பட்ட மக்கள், நில அளவீட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் போதே பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. அதன் போது பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

அரிசிமலை பகுதியை அண்மித்துள்ள பொன்மலைக்குடா, வீரந்தீவு மற்றும் தேத்தாவடி தீவு ஆகிய கிராமங்களை ஊடறுக்கும் வகையிலேயே இந்த நில அளவை மேற்கொள்ளப் படவிருந்தது என்று பொது மக்கள் கூறுகின்றனர்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள விகாரையை அண்மித்ததாகவே இந்த மூன்று கிராமங்களும் இருக்கின்றன என்று தெரிவித்த மக்கள், இந்த கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 135 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டையில் தங்களுடைய உறவினர்கள் வீடுகளில் இன்னும் வாழ்ந்து வருவதாகச் சுட்டிக்காட்டினர்.

இந்தநிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஜே.மார்க்ஸ் அங்கிருந்த திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபிக் உள்ளிட்ட அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடம் நடத்திய பேச்சை அடுத்து நில அளவீடும் தற்காலிகமாக கைவிடப்பட்டது. (ற)

### நிமிர்ந்தது

றும் நட்டம் காரணமாக வர்த்தகர்கள் சிலர் தற்கொலை செய்து கொண்டனர்.

"கடந்த 2 வருடங்களில் 16 வர்த்தகர்கள் வரையில் தற்கொலை செய்து கொண்டனர்" என்று யாழ். வணிகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவிக்கிறார்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக, மீளவும் வடக்கின் பொருளாதாரம் மீளவளர்ச்சி நோக்கி மீண்டெழத் தொடங்கியுள்ளதாக மத்திய வங்கியின் யாழ். பிராந்திய அலுவலகம் மற்றும் வர்த்தக மன்றங்கள் தெரிவிக்கின்றன. புலம்பெயர் தமிழர்களின் தாயக வருகையே இதற்கான முதற் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

"புலம்பெயர் தேசங்களிலிருந்து வரும் மக்கள், முன்னைய காலங்களைப் போன்று இந்தியாவிலோ, சிங்கப்பூரிலோ, டுபாயிலோ பொருள்களைக் கொள்வனவு செய்வதில்லை. பதிலாக இங்கே வந்து பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் இங்கு வர்த்தக நடவடிக்கைகள் ஓரளவு சிறப்பாக இடம்பெறுகின்றன" என்றார் யாழ். வணிகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம்.

"வடக்கின் பொருளாதாரம் தற்போது மீண்டெழுந்து வருகின்றது. புலம்பெயர் தமிழர்கள் வருகை மட்டும் அதற்குக் காரணமில்லை. அதைத் தாண்டிய காரணங்களும் உள்ளன. தற்போதைய வங்கிகளின் கூற்றுக்களைப் பார்க்கும் போது, கடன்கள் ஒழுங்காகச் செலுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் புதிய தொழில் முயற்சிகளுக்கு தேவையான அளவிலேயே கடன்களும் பெறப்படுகின்றன. இது வடக்கின் பொருளாதாரம் மீண்டெழுவதற்கான அறிகுறிகள்" என்று தெரிவித்தார் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண். குறிஞ்சிதரன்.

"இந்த வளர்ச்சி நீடித்து நிலைக்கும்" என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கிறார் யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே.பூரணசந்திரன். "வடக்கின் பொருளாதாரம் மேம்பட்டதாகச் சொல்ல முடியாது. இங்கு எந்தவொரு பெரும் தொழிற்சாலைகளும் அமைக்கப்படவில்லை. இங்குள்ள பணம் முழுவதும் கொழும்புக்கே செல்கின்றது" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"எமது பொருளாதாரம் நுகர்வு வியாபாரத்தில் மட்டுமே தங்கியுள்ளது" என்பதை ஏற்றுக் கொள்ளும் யாழ். வணிகர் மன்றத் தலைவர், உற்பத்திச் சாலைகள் பெருக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறார். (உ-5)

### தமிழரசுக்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு அடுத்த மாதம் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது. அதன் போது தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் இரா.சம்பந்தன் தனது தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். அதையடுத்து தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவை, அடுத்த தலைவராக நியமிப்பதற்குரிய முன்நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இது தொடர்பில் மாவை. சேனாதிராசாவிடம் நேரடியாகக் கேட்ட பொழுது, "எமது கட்சிக் கிளைகள் வடக்கு - கிழக்கு முழுவதும் மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் 34 கிளைகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. சகல இடங்களிலும் புதிதாக இளைஞர்கள் பலர் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

கட்சியின் மாநாட்டின் முக்கிய பிரகடனமாக, இலங்கை அரசுக்கு குறித்த கால அவகாசத்தை வழங்கி அந்தக் காலப் பகுதியினுள் எமது பிரச்சினைகளைத் தீர்க்கா விட்டால், வடக்கு - கிழக்குத் தாயகம் முழுவதும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது என்ற விடயம் அமையும். வடக்கின் நில அபகரிப்பு, வடக்கில் பெண்கள் மீதான் துஷ்பிரயோகம், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் இன அழிப்பு தொடர்பான விடயங்கள் மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்படும்" எனவும் மாவை.சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (ற-5)

### மனித உரிமைப்

வதற்குரிய உரிமை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசுக்கு உள்ள கடப்பாட்டை நினைவுறுத்த வேண்டும் - இவ்வாறு ஆறு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஐ.நா. விடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய போரம், சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு, ஐ.எம்.ஏ.டி.ஆர், ஐ.எஸ்.எச்.ஆர்., சிவிகஸ் ஆகிய அமைப்புகளே இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர்கள் மற்றும் ஐ.நா. உறுப்பு நாடுகளின் தலைவர்கள் ஆகியோருக்குக் கடிதம் மூலம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

"ஐ.நா. மனித உரிமைகள் பொறிமுறையோடு இணைந்து செயற்படும் மனித உரிமைகள் பாதுகாவலர்களும், தனி நபர்களும் எதிர்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

இலங்கை அரசுக்கு இவ்வாறான அச்சுறுத்தல்களில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான கடப்பாடு உள்ளது. இவ்வாறான அச்சுறுத்தல்கள், மிரட்டல்களை எவ்வித தயக்கமும் இன்றி கண்டிக்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஐ.நாவுடன் தொடர்பாடுவதற்கு சகலருக்கும் உள்ள உரிமையை வலுப்படுத்துமாறும் கோருகிறோம்"- என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)



திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்றது. பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுப்பதையும் சிறார்களின் கலை நிகழ்வுகள் மற்றும் காவடி ஆட்டங்கள், பக்தர்களின் அங்கப்பிரதட்சணம் ஆகியவற்றையும் காணலாம். (வ-40)

# விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அடுத்த வருடத்தில் அமைக்க ஏற்பாடு

## சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஓக.27

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவும், சத்திரசிகிச்சைக் கூடமும் அடுத்த வருடம் அமைக்க சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருத்துவமனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பார்வையாளர் மண்டபத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:-

2000 ஆம் ஆண்டு போர் வேளையில் மருத்துவமனைக் கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்து கற்குவியலாகக் காணப்பட்டன. சுகாதாரத் திணைக்களத்துக்கு மக்கள் கொடுத்த அழுத்தங்களின் பயனாக தற்போது ஓரளவு வசதிகளுடன் கூடிய வகையில் பௌதிக வளங்கள் அதிகரிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் அதிகரிப்புக்கேற்ப மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மருத்துவமனை ஏ-9 வீதியருகில் அமைந்திருப்பதால் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதை அவதானிக்க முடிகிறது. வடக்கில் வீதிகள் புனரமைப்பின் காரணமாக விபத்துக்கள் அதிகரித்து வருவதால் இந்த மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கவும், சத்திரசிகிச்சைக் கூடமொன்றை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த வருடம் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவை மாடிக் கட்டடங்களாக அமைப்பதுடன் சத்திர சிகிச்சை நிபுணரையும் மகப்பேற்று நிபுணரையும் நியமிக்கவுள்ளோம். இவை அமைக்கப்பட்டதும் இந்த மருத்துவமனை சகல வசதிகளையும் கொண்ட மருத்துவமனையாகத் திகழ்வதுடன் இந்த மருத்துவமனையிலிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு நோயாளர்களைக் கொண்டு செல்லும் நிலையும் ஏற்படாது- என்றார். (வ-9)

# 'தமிழன் தமிழனாக' கவிதை நூல் வெளியீடு

மட்டக்களப்பு.ஓக.27

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனால் எழுதப்பட்ட 'தமிழன் தமிழனாக' என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டுள்ளது. மட்டக் களப்பு புதுக்குடியிருப்பு கண் ணகி மகாவித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் இந்த வெளியீட்டு விழா இடம்பெற்றது.

நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் செ.பாக்கியராஜா பெற்றுக் கொண்டதுடன் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கல்வி ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-10)



நூல் வெளியீட்டின்போது...

# அமரர் அமிர்தலிங்கத்தின் நினைவு நூல் வெளியீடு



வலி.வடக்கு, ஓக. 27

இலங்கை தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் எண்பத்தாறாவது ஆண்டு பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் காங்கேசன்துறை இலங்கை தமிழரசுக் கட்சியின் தெல்லிப்பழையில் அமைந்துள்ள அலுவலகத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இலட்சியப் பாதை என்னும் நூல் வெளியிடப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலை மாவை சேனாதிராசா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வடமராட்சியைச் சேர்ந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.குமரகுருசாமி பெற்றுக் கொண்டார்.

வடமாகாண மாகாண சபையின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுலராசா, த.சித்தார்த்தன், ஆனால்ட், கஜதீபன், நல்லூர், வலி.மேற்கு, வலி.தென்மேற்கு பிரதேச சபைகளின் தவிசாளர்களான ப.வசந்தகுமார், திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், எஸ்.சிவகுமார் உட்படப் பலர் நூல் பிரதியைப் பெற்றுக் கொண்டனர். (ற-86)

# இலங்கை அரசால் திட்டமிட்டு தமிழர் கலாசாரம் அழிக்கப்படுவதை வெளிப்படுத்திய கண்காட்சி

வேற்றினத்தவர்களின் அமைப்புக்களும் டெனிஸ் அமைப்புக்களும் இணைந்து தமது அமைப்புக்களின் வேலைத்திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில் டென்மார்க்கின் ஹேனிங் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை கண்காட்சி ஒன்றை நடத்தினர்.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பையும் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரம் மற்றும் பண்பாடுகளை இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் அழித்து வருகிறது என்பதையும் கண்காட்சி ஊடாக ஹேனிங் நகரில் வாழும் ஈழ மக்கள் வெளிப்படுத்தினர்.

தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளை நிகழ்வுக்குச் சமுகமளித்த அனைவரும் விருப்பத்தோடு சுவைத்து மகிழ்ந்தன.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் இன அழிப்பை வெளிப்படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் காணொலி ஆவணங்களையும் டெனிஸ் மற்றும் வேற்றின மக்கள் விரும்பி வாங்கிச் சென்றனர். (வ)



# குடும்பஸ்தர் கொலை; மூன்று பெண்கள் கைது

வாழைச்சேனை, ஓக.27

வாழைச்சேனை - மீராவோடை பௌசி மாவத்தையில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான நாசர் என்பவர் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டிருந்தார். மீராவோடை பௌசி மாவத்தை யிலுள்ள கடைக்கு பொருள்கள் வாங்கச் சென்றபோதே அவர் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு முன்பள்ளி கட்டட நிதி
வளர்ச்சிக்காக நடத்தப்படும்
பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான

மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி

இதில் வன்னி மற்றும் மன்னார், யாழ்ப்பாண காளைகள்
பங்குபெறும் என்பதை அறியத்தருகின்றோம்



அனைத்துப் பிரிவுகளிலும் முதலாம் இடத்தைப் பெறும் காளைகளுக்கு துவிச்சக்கரவண்டியும் மற்றும் 2ஆம் 3ஆம் 4ஆம் இடத்தைப் பெறும் காளைகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்.

தவறாது அனைத்து காளை உரிமையாளர்களும் தமது காளைகளைப் போட்டியில் கலந்து சிறப்பிப்பதோடு ரசிக உள்ளங்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: நீர்வேலி சவாரித்திடல்
காலம்: 31.08.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு

ஏற்பாட்டாளர்கள்.

அனுசரனையாளர்கள்: யாழ். முன்னணி இசைக்குழுவான ப்ரன்ஸ் இசைக்குழுவினர்
கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
றொலக்ஸ் ஹோட்டல் - யாழ்ப்பாணம்.

(51773)(10.6)

**வெளிவந்து விட்டது**

2015ஆம் ஆண்டிற்கான புதிய பதிப்பு ந.சந்திரகுமார் அவர்களின் ஆக்கத்தில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான புத்தகங்கள். எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**அன்னை புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
**021 222 9881**
(சி16183)
(12.3.6)

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.08.2014**

**External Degree**

CAQ புதிய பிரிவுகள் ஆரம்பம்,
BA1, BA (Final) வகுப்புக்கள் நடைபெறுகின்றன

Further Details:
**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382


# பஸிலின் நிகழ்வுக்கு அரச ஊழியர்கள் சாதாரண உடையில்

யாழ்ப்பாணம், ஓக. 27

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பங்கேற்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக, அரச ஊழியர்களை இன்று சாதாரண உடையில் வருமாறு மாவட்ட செயலகத்தினால் பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரச கரும நாளான இன்று புதன்கிழமை என்ற போதும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் நிகழ்வில் பங்கேற்க அரச ஊழியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டையைத் திறந்து வைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார்.

அமைச்சர் கலந்து கொள்ளும் நிகழ்வில் பங்கேற்பதற்காக, யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். அதனைவிட ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் புதிதாக நியமனம் பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் பங்கேற்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அணிவதற்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. குறித்த சீருடையை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள்ஆகியோரை இன்று அணிய வேண்டாம் என்றும் சாதாரண சிவில் உடையிலேயே, பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் நிகழ்வில் பங்கேற்குமாறும் மாவட்ட செயலகத்தினால் பணிக்கப்பட்டுள்ளது. இதேவேளை-புதன் கிழமைகளில் சகல அரச அதிகாரிகளும் தமது அலுவலகங்களில் கடமையில் இருக்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)


**தேவை**

யாழ் நகரிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு Clerk -A/L சித்தி பெண்கள், பியோன்-8ஆம் தரம் சித்தி பெண்கள்.

தொடர்பு கொள்ளவும்:
**021 499 3500**
(51155)
(10)


## கதிர் வீச்சு சிகிச்சை இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஓக.27

தெல்லிப்பழை புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தில் உள்ள கதிரியக்க மூலத்தை மாற்றுவதற்கான பணிகள் இடம்பெறவுள்ளதால், நாளை வியாழக்கிழமை முதல் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களும் புற்றுநோயாளர்களுக்கான கதிர் வீச்சு சிகிச்சை இடம் பெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

28.08.2014@9.00am | 30.08.2014@8.00am | 01.09.2014@3.00pm | 03.09.2014@9.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935
(C/15978)(7.6.3)

**FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH**

**FRENCH CLASSES**

FRANCE, CANADA, BELGIUM, SWISS செல்வோர் இலகுவாகவும் விரைவாகவும் சரியான உச்சரிப்புடன் ஐரோப்பிய முறையில் French கற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர்: MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொள்பவரும்.)

International Diplomas in French(DELF A1,A2,B1) மற்றும் Certificates ஐயும் பெற்றுக் கொள்ளலாம்.

836 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்.

ஆரம்பம்: 01.09.14 @ 9.30am
No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளம்.)

ஆரம்பம்: 03.09.14 @ 4.30pm.
No. 181, Main Street, நெல்லியடி.

Tel: 0779 789 456 / 021 320 2973





உ

**எழுதுமட்டுவாழ்-பெரியகேணி சிவஞானப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

மகா கும்பாபிஷேகம்:
31.08.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு

எண்ணெய்க்காப்புச் சாத்துதல்:
30.08.2014 சனிக்கிழமை
9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

27.08.2014 புதன்கிழமை காலை 9.00 முதல் கிரியைகள் ஆரம்பமாகும்.

(51245)(4.3.6) **ஆலயபரிபாலனசபை**

**கட்டார் மற்றும் சவுதி ராஜ்யத்தில் முதல் தடவை வெளிநாடு செல்லும் சாரதிகளுக்கான உடனடி வேலை வாய்ப்பு**
**(First Time Driver)**

International School - (10 பேர்)
1200 + accommodation
Saneli - AL - Azmil Company - (10 பேர்)
1100 + 200 + OT

Qatar - Garden Helper Age 40-55 - 900 + OT
Qatar - Meson Helper Age 30-45 - 1300 + OT

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்துக்குள் பயணம் வெளிநாட்டு அனுபவம் உள்ள Gulf Velid Licence சாரதிகளுக்கு அதிக சம்பளம், எதிர்வரும் வெள்ளிக்கிழமை Colombo இல் Interview நடைபெறும்.

உடன் தொடர்புகொள்ள: யாழ்ப்பாணம்
Lanka Voice Jaffna 077 952 7575
மன்னார், வவுனியா
Lanka Voice 26/2, Station Road, Vavuniya.
076 669 7789
(C/16184)(7.6.3)

**NEW SCIENCE WORLD**
VICTORY MUST
Navalar road-Brown road Junction, Jaffna.
Tel: 077 336 4055
web:www.physicsocean.com Email: info@physicsocean.com

For 2014 A/L...

**DAY CLASSES**

பௌதீகவியல் : R.குகன், R.குமரன்
இரசாயனவியல் : டயஸ், T.சிவகுமார்
உயிரியல் : S.பொன்திவாகரன், V.உமாசங்கர்

01.09.2014
ஆரம்பம்: திங்கள் காலை 9.30மணி

உயிரியல் காலை 07.00 - 09.00
பௌதீகவியல் காலை 09.00 - 11.00
இரசாயனவியல் மு.ப 11.00 - 1.00

**100 வீத உத்தரவாதத்துடன் பிரான்ஸ் பறக்கலாம்**

**எதுவித தயக்கமும் இன்றி ஒரு மாதத்தில் பறக்கலாம்**

**100% சட்டரீதியாகச் செல்லலாம்**
**3 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு**

(நிபந்தனைகள் எதுவுமில்லை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



தொலைபேசி:
021 221 9016, 021 568 9090
(51257)(10.6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வரும்போது அதன் முன் தலையை கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொள் ஏனெனில் அதன் பின் தலை பரிபூரண வழுக்கை.
- ஓர் அறிஞர்.

புதன் பொய்கை A

உதயன் 27 ஜூலை 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# பயன்தராத கட்டடக் காடுகள்



ராஜராஜன்

குடாநாட்டில் எங்கு நோக்கினாலும் கட்டடங்கள் நிறைந்த கட்டடக் காடுகளைக் காண முடிகின்றது. நீண்டு நீடித்த போர் ஓய்ந்த பின்னர் வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெற ஆரம்பித்தன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வர்த்தக நிறுவனங்கள் இங்கு படையெடுத்தன. தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணம் சிறந்ததொரு இடமென்பதை அவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்ததால் எப்போது போர் ஓயுமெனக் காத்திருந்து அது ஓய்ந்ததும் உடனடியாகவே இங்கு காலூன்றத் தொடங்கினார்கள். உள்ளூர் வர்த்தகர்களும் ஏதோ புத்துணர்ச்சி பெற்றவர்களைப் போன்று செயற்பட ஆரம்பித்து விட்டனர். போரின்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இடங்களில் எல்லாம் வர்த்தக நிலையங்கள் துரிதமாக அமைக்கப்பட்டன. காணிகள் மற்றும் கட்டடங்களின் விலைகள் கிடு கிடுவென உயர்ந்த போதிலும் எவருமே இதனைக் கருத்தில் கொள்ளவில்லை. எவ்வளவு செலவழிந்தாலும் வர்த்தக நடவடிக்கை மூலமாக அதை மீட்டெடுத்து விடலாம் என்ற நம்பிக்கையே இதற்கான பிரதான காரணமாகும். இதேவேளை- வங்கிகளும், நிதி நிறுவனங்களும் மழைக்காளான்களைப் போன்று சகல இடங்களிலும் தோன்ற ஆரம்பித்தன. அது மட்டுமல்லாது பல்வேறு வகையிலும் கடன் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தன. காய்ந்து போய்க் கிடந்த எம்மவர்கள் சும்மா இருப்பார்களா? தந்ததை எல்லாம் வாங்கிக் கொண்டனர். வாங்கியதை எவ்வாறு திரும்பச் செலுத்துவது என்ற எண்ணமே அவர்களிடத்தில் தோன்றவில்லை. வீட்டுக்குரிய ஆடம்பரப் பொருள்கள் முதல் வாகனங்கள் வரை கடன் அடிப்படையிலேயே பெறப்பட்டன. ஆரம்பத்தில் எல்லாமே நன்றாகத்தான் இருந்தன. ஆனால் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதில்தான் பிரச்சினைகள் தோன்றின.

இந்த நிலையில் தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்ட பொருள்களால் இங்குள்ள வர்த்தக நிலையங்கள் நிறைந்தன. வர்த்தகர்களும் கடன் அடிப்படையில் பொருள்கள் வழங்கப்பட்டதால் அவற்றை வாரி வாரிக் குவித்தனர். எல்லாமே விற்றுத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை அவர்களின் மனங்களில் குடிகொண்டிருந்தது. இதேவேளை - குடாநாட்டின் மூலை முடுக்கு எங்கும் தென்பகுதியிலிருந்து பொருள்கள் எடுத்து வரப்பட்டு விற்பனையாகின்றன. தெருவோரங்களிலும், ஆலயங்கள் மற்றும் சந்தைத் தொகுதிகளை அண்டிய இடங்களிலும் இந்தப் பொருள்கள் குவிக்கப்பட்டு அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. கடைகளை விட விலை மலிவு என்பதால் மக்கள் அங்கு குவிந்து காணப்படுகின்றனர். உள்ளூர் வர்த்தகர்களால் வாயைப் பிளந்தபடி இதனைப் பார்த்துக் கொண்டிருக்கவே முடிகின்றது. அனுமதி பெறாது. வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் தென்னிலங்கையர்களுடன் முரண்பட்டால் தமக்கு என்ன நேரும் என்பதை இவர்கள் நன்கறிவார்கள். மூலைக்கு மூலை தமக்குப் பாதுகாப்பு வழங்கக் கூடியவர்கள் உள்ளனர் என்ற நினைவு மேலோங்க தென்பகுதி வியாபாரிகள் சுதந்திரமாகத் தொழில் புரிகின்றனர்.

ஆனால் குடாநாட்டு வர்த்தகர்களின் நிலைதான் பரிதாபகரமான நிலையை எட்டியுள்ளது. கொள்வனவு செய்த பொருள்களுக்கான பணத்தைக் கொடுக்க முடியாத நிலையிலும், வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலும் இவர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். இதன் காரணமாகப் பலர் தலைமறைவாகியுள்ளனர்.

இந்த நிலையில் புதிய புதிய கட்டடங்கள் எழுந்து வருகின்றன. இவற்றில் அனேகமானவை மாடிக் கட்டடங்களாகவே காணப்படுகின்றன. ஆரம்பத்தில் இவற்றுக்கு அதிக கேள்வி காணப்பட்டது. புதிய புதிய நிறுவனங்கள் கட்டடங்களைப் போட்டி போட்டுக்கொண்டு பெற்றுக் கொண்டன. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தேடுவார் இல்லாத நிலையில் பல கட்டடங்கள் அநாதைகளாகக் காணப்படுகின்றன. வாடகைக்கு விடப்படும் என்ற வாசகங்கள் அங்கு தொங்க விடப்பட்டுள்ளன. பல கட்டடங்களில் பல மாதங்களாக அவை அகற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பல கோடி ரூபாய்கள் இவற்றுக்குள் முடங்கிக் கிடப்பதால் எதிர்காலத்தில் பெரும் நிதிப் பிரச்சினை இங்கு ஏற்படப் போகின்றது.

இன்றைய சூழ்நிலையில் முக்கியமான நிகழ்வுகளை நடத்துவதற்கு மண்டபங்கள் வசதியானவைதான். முன்பெல்லாம் வீடுகளில் பந்தல்கள் போட்டு முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை வழமையாகும். காலப் போக்கில் பணத்தைக் கொடுத்துவிட்டால் ஒப்பந்தகாரர்கள் விரும்பிய விதத்தில் பந்தல்களை அமைக்கும் நிலை காணப்பட்டது. தற்போது மண்டபங்கள் வந்து விட்டதால் மக்கள் அவற்றை நாடத் தொடங்கிவிட்டனர். உணவு பரிமாறும் வசதிகளும் மண்டபங்களில் கிடைப்பதால் மக்கள் மண்டபங்களை அதிகளவில் நாடுகின்றனர். இதன் காரணமாக புற்றீசல்கள் போன்று மண்டபங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இதில் வசதிகளுக்கும், உணவின் தன்மைகளுக்கும் ஏற்ற வகையில் கட்டணங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால் பல மண்டபங்கள் சில நாள்களைத் தவிர வேறு நாள்களில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.


இவ்வாறு குடாநாடு பல்வேறு விதமான கட்டடங்களால் நிறைந்து காணப்படுகின்றது. இவை அமைக்கப்படும்போது பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றமை ஒரு நல்ல விடயமாக இருந்தாலும், அவை அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாமல் உள்ளதுதான் வேதனையளிக்கின்றது.

ஆகவே, பெரும் பணத்தைச் செலவிட்டு மேலும் மேலும் கட்டடங்களை அமைத்து பாவனையில்லாது வெறுமனே விடுவதால் பொருளாதாரப் பிரச்சினை உருவாகுமென்பதை அதில் ஈடுபடுபவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவர் ஒரு தொழிலை மேற்கொள்ளுகின்றார் என்பதற்காக அதன் பலாபலன்களை ஆராயாது பலரும் அதில் ஈடுபடுவது தவறான முன்னுதாரணமாகும்.

இன்று எமது பகுதியில் வேலையில்லாத பல இளைஞர், யுவதிகள் காணப்படுகின்றனர். தென்பகுதியைப் போன்று தொழிற்சாலைகளோ அல்லது தொழில் நிறுவனங்களோ இங்கு அமைக்கப்படவில்லை. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களும் செயற்படாது காணப்படுகின்றன. ஆகவே வெறுமனே கட்டடங்களை அமைப்பதை விட்டு வர்த்தக ரீதியில் பயன்தரக் கூடிய தொழிலகங்களை அமைப்பதன் மூலமாக வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும் என்பதோடு இலாபத்தையும் ஈட்ட முடியும். அத்துடன் எதற்கெடுத்தாலும் வெளியாரின் கைகளை எதிர்பார்த்திருக்கும் நிலையும் மாறிவிடும்.

தற்போதைய நிலையில் சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் குடிசைக் கைத்தொழில்கள் சிறந்த முறையில் இயங்கி வருவதைப் போன்றதொரு நிலை இங்கு உருவாக வேண்டும்.

இதை விடுத்து வெறும் கட்டடக் காடுகளைப் பெருக்கிக் கொள்வதால் பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை.



# அண்டார்டிகா ஏரியை துளைத்து ஆய்வு செய்ததில் புதிய உயிர்கள் கண்டுபிடிப்பு!



பனியால் மூடப்பட்ட அண்டார்டிகா கண்டத்தில் உள்ள ஓர் ஏரியில் நுண்ணுயிரிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு வெளி கிரகங்களில் ஏலியன் உயிர் உள்ளதா என்பதை ஆராயும் அஸ்ட்ரோபயோலஜி துறைக்கு மிகப் பெரும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. அண்டார்டிகாவில் நுண்ணுயிர்கள் இருப்பதற்கும் ஏலியன் உயிர்களுக்கும் என்ன தொடர்பு? இதை அறிய அந்த வில்லன்ஸ் ஏரியை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

அண்டார்டிகா கண்டம் முழுக்கப் பனியால் மூடப்பட்டுள்ளது. மூடப்பட்ட பனிக்கு அரை மைல் கீழே ஏரிகள் உள்ளன. இவற்றில் சில, பல மில்லியன் ஆண்டுகளாகப் பனியால் மூடப்பட்டவை. சூரிய வெளிச்சம் உள்ளே புகும் வாய்ப்பே கிடையாது. சூரிய வெளிச்சம் உள்ளே புகாததால் பாசி, செடி, கொடி, தாவரம் முதலிய எந்த உயிரினங்களும் அந்த ஏரிகளில் வாழும் வாய்ப்பு இல்லை என்று கருதப்பட்டது.

பெரிய உயிர்கள் இல்லையெனினும் ஏரியில் ஒரு செல் நுண்ணுயிரிகள் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதினார்கள். வில்லன்ஸ் ஏரியில் நுண்ணுயிரிகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டாலும் அவை எதை உணவாக உட்கொள்ள முடியும் என்பதில் சர்ச்சை இருந்து வந்தது. அதனால் அண்டார்டிகாவில் உள்ள வில்லன்ஸ் ஏரியில் ஆய்வு செய்ய முடிவு செய்தார்கள். ஆனால் அந்த ஏரியைத் துளைத்து ஆய்வு செய்கையில் துளையிடும் உபகரணங்களில் உள்ள நுண் ணுயிரிகள் ஏரியில் புகுந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தில் உயர்வெப்ப நீரைக் குழாய் மூலம் பாய்ச்சி ஏரி மேல் உள்ள பனியில் துளையிடும் முயற்சியை மேற்கொண்டார்கள். வெப்ப நீரில் நுண்ணுயிரிகள் தங்காது என்பதால் வெளியே உள்ள நுண்ணுயிரிகள் ஏரியில் நுழையும் வாய்ப்பு இல்லை.

இவ்வாறு கஷ்டப்பட்டு ஓட்டை போட்டு, சுமார் 120 லீற்றர் ஏரி நீரை வெளியே எடுத்தார்கள். இந்த நீர், பல மில்லியன் ஆண்டுகளாகப் பூமியின் மேற்பரப்பையே பார்த்திராத நீர். அதை ஆய்வு செய்ததில் 4000 வகை நுண்ணுயிரிகள் ஏரி நீரில் வாழ்ந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நுண்ணுயிரிகள் அனைத்தும் கீமோ ஒட்டோட்ராப் எனும் வகை நுண்ணுயிரிகள். இவை தம் உணவைச் சூரிய வெளிச்சம் மூலம் அன்றி, ஏரியில் படிந்துள்ள மினரல்கள், இரசாயன மூலம் அடையக் கூடியவை.

நுண்ணுயிரிகள் பாறையை உண்டு உயிர் வாழ முடியுமா? எனும் சந்தேகம் விஞ்ஞா னிகளுக்கு இருந்ததாகவும், பாறையில் உள்ள மினரல்களை உணவாக உட்கொண்டு நுண்ணுயிரிகள் உயிர் வாழ முடியும் என்று இந்தக்கண்டு பிடிப்பு நிரூபித்திருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வியாழன் கிரகத்தின் துணை நிலவான யுரோபாவில், மிகப் பெரும் சமுத்திரம் ஒன்று இப்போதும் திரவ வடிவில் காணப்படுகிறது. ஆனால் வில்லன்ஸ் ஏரியைப் போல, அந்தச் சமுத்திரமும் மிகப் பெரும் பனிப் பாளத்தால் மூடப்பட்டுள்ளது. வில்லன்ஸ் ஏரியைப் போல, யுரோபா சமுத்திரத்தின் உள்ளும் சூரிய வெளிச்சம் படுவதில்லை. ஆக வில்லன்ஸ் ஏரி நீரில் நுண்ணுயிரிகள் உருவாகி, பிழைத்திருக்க முடியுமெனில் யுரோபா சமுத்திரத்தின் உள்ளும் நுண்ணுயிரிகள் இருக்கும் வாய்ப்பு உண்டு அல்லவா?

இந்தக் கண்டுபிடிப்பு, போலார் சயன்ஸ் விஞ்ஞானிகளை விட, அஸ்ட்ரோபயோலஜி துறை விஞ்ஞானிகளுக்கு மிகுந்த உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளது. இதுவே யுரோபாவின் நுண்ணுயிரிகளை ஆராய, நாசாவுக்கும் தூண்டுதலாக அமையலாம் என அவர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள்.

# மன வேறுபாடுகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம்



சேர்ந்து வாழ வேண்டிய குடும்ப உறுப்பினர்களும் சரி, சேர்ந்து பணி புரிய வேண்டிய அலுவலக ஊழியர்களும் சரி, ஒரு சிறு பிரச்சினை என்றால் கூட மன வேறுபாடுகளை வேகமாக வளர்த்துக் கொண்டு எதிரெதிர் திசைகளில் நடக்க ஆரம்பித்து விலகி விலகிப் போய் விடுகிறார்கள்.

எல்லோருக்கும் கருத்து சுதந்திரம் உண்டு. வேறு கோணம், வேறு பார்வைகள் உண்டு. அவர்களை என்ன சொன்னாலும் மாற்ற முடியாது. நான்கு விடயங்களில் முட்டி மோதித் தோல்வி காணும்போது மற்றவர்களின் கருத்துக்கு மதிப்புத் தரத் தொடங்குவார்கள்.

தன முனைப்பு, அகங்காரம், வறட்டுப் பிடிவாதம், சுய பரிசோதனையின்மை ஆகிய தூண்களைக் கொண்டு எம்மால் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கட்டடத்தில் எல்லோரும் வந்து குடியிருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது தவறு. ஒரு சில விடயங்களில் கருத்து வேறுபாடு இருந்தால், இருந்து விட்டுப்போகட்டும். அது ஒரு முட்டுச்சந்து. வேறு வழியில்லை என்பதனை உணர்ந்து அவர்கள் திரும்பட்டும். அதுவரை எமக்குப் பொறுமை அவசியம்.

சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக மன வேறுபாடுகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம். இது நியாயமற்றது.




கண்ணில் பட்ட சிறுமணல் எப்படி இந்த அழகிய உலகத்தைப் பார்க்க முடியாமல் செய்து விடுகிறதோ, அதைப்போல, சிறிய தயக்கம் அல்லது சந்தேகம், இந்த வாழ்வின் பெருமை, அழகு, உங்கள் பலம் அனைத்தையும் மறைத்து விடும்.

ஒருவர் உடல் துன்பத்தில் இருக்கும்போது, நீங்கள் எதைப் போதித்தாலும் அது அவர்களுக்கு முட்டாள்த் தனமாகவே படும்.

கோடிக்கணக்கில் மக்கள் ஒருவருக்கொருவர் தீர்ப்புச் சொல்லிக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

சட்டம் என்பது தவறான மனிதனுக்கு உரியது. சரியான மனிதனுக்கு அல்ல. ஏனென்றால், இந்த முழு உலகமும் தவறான மனநிலையில் செயற்படுகிறது. எப்போதாவது ஒரு சரியான மனிதன் வந்தால், அவனை ஒரு அயலான் போலத்தான் பார்க்கிறது.

முழுமை என்று எதுவும் இல்லை. வாழ்வின் முழுமை என்று தோன்றுவது ஒரு பொய்மை தான்.

ஒரு புத்திசாலி, வாழ்வு என்பது குற்றம் எதுவுமேயற்ற நிறைவானது அல்ல என்று புரிந்து கொள்வான். அது எப்போதும் குறைகள் நிறைந்ததுதான். நாம் எல்லோரும் குறை நிறைந்தவர்கள் தான்.

ஒருவனிடத்தில், இங்கே அங்கே உங்களுக்குப் பிடிக்காத சில குறைகள் இருக்கலாம். அதே சமயம் அவனிடம் நீங்கள் விரும்பும் சில நிறைவுகளும் இருக்கும். நீங்கள் ஒருவரை விரும்பினால் அவரை மாற்றவேண்டும் என்று அதற்கு அர்த்தம் இல்லை.



# தலைமுறை இடைவெளி என்றால் என்ன?

பிள்ளைகள் குழந்தைகளாய் இருக்கும் போது, அவர்களைப் பார்த்துக் கொள்வது சுலபமல்ல என்றாலும், அவர்களின் பசி, தூக்கம் என்பவற்றைக் கவனித்து விட்டால் தொந்தரவின்றி விளையாடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் குழந்தைகள் வளர. வளரத்தான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. பிள்ளைகள் தங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்று பெற்றோரும், பெற்றோர் தங்களைப் புரிந்து கொள்வதில்லை என்று பிள்ளைகளும் புலம்புகிறார்கள்.

கரு முதல் இறுதி வரை கூடவே இருக்கும் ஒரே உறவு, இந்தப் பெற்றோர் பிள்ளை உறவுதானே? அதை பலப்படுத்தும் முயற்சி மிகவும் அவசியம் அல்லவா!

**தலைமுறை இடைவெளி என்பது என்ன?**

புரிந்துகொள்ளுதலில் இடைவெளி என்பது பெற்றோர் பிள்ளைகள் இடையே மட்டும்தான் வருகிறதா? இடைவெளியைக் குறைத்து இந்த உறவுக்குப் பாலம் அமைப்பது எப்படி? தலைமுறை இடைவெளி என்பது, கருத்துப் பரிமாற்றத்திலும் புரிந்துகொள்ளுதலிலும் இருக்கக் கூடிய இடைவெளி. அது பொதுவாக, இளையவர்களுக் கும் பெரியவர்களுக்கும் இடையே இருப்பதாகக் கருதப்படுகிறது. எண்ணப்போக்கிலும் இலட்சியங்களை நோக்கிச் செல்வதிலும் இந்த இடைவெளி தோன்றுகிறது.

இந்த இடைவெளியை அதிகப்படுத்துவதில் பெரியவர், சிறியவர் என்ற இரு பக்கத்தினருக்குமே பங்கிருக்கிறது. ஆர்வம், சாதிக்கும் வெறி, துணிச்சல் எல்லாம் இளம் தலை முறையினருக்கு அதிகம் என்பதில் சந்தேகம் இல்லை.

அதே நேரத்தில், அனுபவமும் ஞானமும் பெரியவர்களுக்கு அதிகம் என்பதையும் மறுக்க முடியாது. ஆக, வெவ்வேறு பலங்கள் கொண்ட இரு சாராருமே இணைந்து செயற்பட்டால் அதிக நன்மை உண்டு.

இருவருமே ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு, நல்லவற்றை மற்றவர்களிடமிருந்து கிரகித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். விரிசலுக்குக் காரணம் சொல்லாமல், பாலம் அமைக்க வழிகள் கண்டுபிடிப்பது தான் சரியான வழி.

> அனுபவமும் ஞானமும் பெரியவர்களுக்கு அதிகம் என்பதையும் மறுக்க முடியாது.

## 'உலக காவியம்' என்ற அறிவியல் ஆன்மிக இலக்கிய நூல் வெளியீடு















கவிவேழம் பாரதி பாலன் எழுதிய 'உலக காவியம்' என்ற அறிவியல் ஆன்மிக இலக்கிய நூல் வெளியீட்டு விழா அண்மையில் திருகோணமலை நகர சபையின் பொது நூலக மண்டபத்தில் சிரேஷ்ட சட்டதரணி ஆ. ஜெகசோதி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபையின் பேரவைச் செயலர் க. கிருஸ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். நூலின் முதல் பிரதி கௌரவ விருந்தினரான திருகோணமலை நகரசபை முதல்வர் க. செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டது. சிறப்புப் பிரதியை சிறப்பு விருந்தினரான சிரேஷ்ட சட்டத்தரணி தி. திருச்செந்தில்நாதன் வழங்கினார். நிகழ்வில் கலந்துகொண்டோரையும் இங்கு காணலாம்.

# நிலாவின் மறுபக்கம் எப்படி இருக்கும்?



நிலா என நாம சொல்லும் சந்திரனும் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளத் தான் செய்கிறது. ஆனால் அது பூமியை ஒரு முறை சுற்றி முடிப்பதற்கு எடுக்கும் காலமும். தன்னைத்தானே ஒரு முறை சுற்றி முடிப்பதற்கு எடுக்கும் காலமும் சரி சமமாக உள்ளது. அதனால் தான், அது தனது முதுகுப் புறத்தை மறு பக்கத்தைக் பூமிக்குக் காட்டுவதே கிடையாது.

சந்திரன் இப்படி தனது மறு பக்கத்தைக் காட்டாமல். சுழல்வதற்கு பூமியின் ஈர்ப்புச் சக்தி தடுப்பது தான் காரணம். எனினும் 1959 ஆம் ஆண்டில் ரஷ்யா (அப்போதைய சோவியத் யூனியன்) அனுப்பிய லூனா 3 விண்கலம், சந்திரனை அடைந்து சந்திரனின் மறுபக்கத்தைப்படம் எடுத்து அனுப்பியது. அப்போது தான் மனிதன் சந்திரனின் மறுபுறம் இருட்டல்ல என்பதைத் முதல் முறையாக தெரிந்து கொண்டான்.1968 இல் அப்போலோ 8 மூலம் மனிதக் கண்களால் பார்க்க முடிந்தது.

அதற்கு முன்னர் நிலாவின் மறு பக்கம் நிலவின் இருண்ட பக்கம் என்றும். பின்னர் தொலைவுப் பக்கம் என்றும் சொல்லப்பட்டது.

அமெரிக்காவின் ரேஸ் டிரெக் பிளாஸா என்னும் பிரதேசம் உலகப் பிரசித்தமானது, இதற்கு மரண வெளி என்று பெயர்.

ஏன் தெரியுமா? இங்கு கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனிதர்களோ உயிரினங்களோ, மரம் செடிகளோ கிடையா.

பாலைவனம் போன்ற பரந்து விரிந்து கிடக்கும் இந்தப் பிரதேசத்தில் வறட்சிக் காலத்தில் நிலம் வெடிப்பு விழுந்து துவாரங்களில் ஐஸ் படர்ந்திருக்கும்.

இந்த மர்மப் பூமியில் கற்கள் தானாக நகர்ந்து செல்கின்றன. நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் இந்த மர்மத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. அவை நகர்ந்து சென்ற அடையாளங் கள் தெளிவாகக் காணப்படுகின்றனவாம். அங்குள்ள கற்கள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழு பிரதேசத்தையும் சுற்றி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சில சமயங்களில் இரு கற்கள் ஒரே நேரத்தில் பயணத்தை ஆரம்பிக்கும். ரயில் பாதை போன்று அவை சுற்றி வருகின்றன.

சில சமயங்களில் அவற்றில் ஒரு கல் வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பி தனது பயணத்தை தனியாக தொடர்வதுமுண்டு. இவை பின்நோக்கி நகர்ந்த சந்தர்ப் பங்களும் இருக்கவே செய்கின்றன.

இந்தப் பரந்த நிலப்பரப்புக்கு அருகில் இருக்கும் மலையில் இருந்து கற் துண்டுகள் உடைந்து விழுகின்றன. இவையே நகர்ந்து செல்வதாகக் கூறப்படுவது உண்டு, இந்த மர்மப் பிரதேசம் குறித்து முதன் முதலில் 1948 இலே தகவல் வெளியானது. 1972-80 காலப் பகுதியில் பெரியளவிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கற்கள் மர்மமாக நகர்வதற்கு இந்தப் பாலைவனமா அல்லது அங்குள்ள களிமண் தட்டா காரணம்? அவை வேகமான காற்றினால்தான் நகர்கின்றன என்று சிலர் கூறலாம். ஆனால் இந்தப்பகுதியில் கடும் காற்று வீசுவதில்லையாம். எனவே அந்த வாதமும் எடுபடாது.

நிலத்துக்குள் இருக்கும் ஒருவித சக்தியே கற்கள் நகர்வதற்குக் காரணம் என மெசசுசெட்ஸ் பகுதி ஹெம்சயர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வெற்றுக் கண்களுக்கு புலப்படும் வகையில் இவை நகர்வது கிடையாது. சிறிய கல்லொன்று வருடம் முழுவ தும் இரண்டரை அங்குலம் மட்டுமே நகர்ந்த போதும் 36 கிலோ எடையுள்ள கல்லொன்று 659 அடிகள் நகர்ந்திருக்கிறது. கல்லின் அளவுக்கும் அவை நகர்வதற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்பதை இது காட்டுகிறது. இந்தப் பாழடைந்த மர்மமான பிரதேசத்தில் மனித நடமாட்டம் இல்லாவிட்டாலும் கற்களின் நடமாட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது, அவை பற்றிய ஆய்வுகளும்தான்.



# கற்கள் தானாக நகரும்

# மரண வெளி


# வசதி மிக்க லீஸிங்

## செங்கடகல பினான்ஸிடமிருந்து

நாடெங்கிலும் 60 ற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டமைந்தது
இன்றே நாடுங்கள்!



- குறைந்த ஆவணத் தேவை
- வேகமான மற்றும் துரித சேவை
- போட்டித்தன்மைமிக்க வட்டி வீதங்கள்
- உள்வாரியான வாகன மதிப்பீடு
- உங்கள் நிதி நிலைமைக்குட்பட்டது

*நிபந்தனைகள் உண்டு

Est. 1968

செங்கடகல பினான்ஸ் பிஎல்சி

நேர்த்தி தவறாதது

SL [illegible]+ (lka) Fitch Ratings Lanka Limited

மேலதிக விபரங்களுக்கு:
காளிதாசன் : 0770-129599
ரவி : 0773-744930

பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 301 937
மின்னஞ்சல்: senk@senfin.com இணையதளம்: www.senfin.com

# நாற்பத்து ஒன்றாவது திருடன்!



அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதை உங்களுக்குத் தெரியும். அலிபாபாவின் வேலைக்காரியால், திருடர்களின் தலைவன் ஹசன் கொல்லப்பட்டதுவரை தெரிந்திருக்கும். அதற்குப் பிறகு நடந்ததைத்தான் இப்போது படிக்கப் போகிறீர்கள்.

ஹசனுக்கு பாத்திமா என்ற மனைவியும் அப்துல் காதர் என்ற மகனும் இருந்தனர். நகரத்தில் அவர்களைக் குடியமர்த்தி இருந்தான். பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் அவனை வணிகன் என்றே நம்பி வந்தார்கள். அவன் மனைவிக்கு மட்டும்தான் அவன் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத் தலைவன் என்பது தெரியும். அந்தத் தொழிலை விட்டுவிடும்படி அவள் அவனிடம் எவ்வளவோ கெஞ்சிவந்தாள். அவன் கேட்கவில்லை.

தனது கூட்டத்திலுள்ள திருடர்களை அலிபாபாவின் வீட்டில் இருந்த கொதிக்கும் எண்ணெய்க்கு பலி கொடுத்துவிட்டு, தான் மட்டும் தப்பிய ஹசன், வீட்டுக்கு வந்தான்.

ஒரு சுவடியில் இதுவரை நடந்ததை எல்லாம் அவன் எழுதினான். தனது மந்திரக் குகை இருக்கும் இடத்தின் வரைபடத்தையும் குகையின் கதவைத் திறந்து மூடும் மந்திரங்களையும் குறித்தான். அலிபாபாவின் அங்க அடையாளங்களையும் அவன் வீடு இருக்கும் இடத்தையும் சுவடியில் எழுதிய ஹசன், மனைவியிடம் வந்தான்.

இந்தச் சுவடியில் எல்லாவற்றையும் எழுதியிருக்கிறேன். இன்று முதல் அலிபாபாவைக் கொல்லும் முயற்சியில் ஈடுபடப் போகிறேன். ஒரு வேளை அலிபாபா என்னைக் கொன்று விட்டால் நீ அந்தக் குகைக்குச் சென்று வேண்டிய செல்வங்களை எடுத்து வாழ்க்கை நடத்து. எமது மகனை எந்தக் குறையும் இல்லாமல் காப்பாற்று. அவன் மனதில் அலிபாபாவை பழிவாங்கும் எண்ணத்தை வளர்த்துவா. அவன் பெரியவனானதும் அலிபாபாவைக் கொல்லவேண்டும்... என்று கூறிவிட்டு வெளியேறினான்.

நாள்கள் ஓடின. ஹசன் திரும்பி வரவேயில்லை. அலிபாபாவைக் கொல்லச் சென்ற ஹசனைத்தான் அலிபாபாவின் வேலைக்காரி குத்திக் கொன்றுவிட்டாளே...

கணவன் இறந்திருப்பான் என்பதை யூகித்த பாத்திமா, மகனுடன் வேறு நகரத்துக்குக் குடிபெயர்ந்தாள்.

கணவனின் திருட்டுச் சொத்தைப் பயன்படுத்தவோ அலிபாபாவை பழிவாங்கவோ அவள் விரும்பவில்லை. தனது நகைகளை விற்று ஒரு கடையை நடத்தத் தொடங்கினாள். மகனைப் பண்புள்ளவனாக வளர்த்தாள். அப்துல்காதரும் தந்தையின் இரகசியங்கள் தெரியாமல் வளர்ந்தான்.

திடீரென பாத்திமா இறந்து போகவே அன்னையின் நகைகள், ஆடைகள் எல்லாவற்றையும் ஏழைகளுக்குக் கொடுக்க விரும்பினான் அப்துல் காதர். அதற்காக பாத்திமாவின் அறையை ஆராய்ந்தபோது அந்தச் சுவடி கண்ணில் பட்டது. எடுத்துப் புரட்டினான். அதிர்ந்தான்! அங்கே அவனது அம்மாவின் கையெழுத்தில் சில சொற்கள் காணப்பட்டன. என் கணவர் திரும்பி வரவேயில்லை. அலிபாபாதான் கொன்றிருக்க வேண்டும்! அலிபாபா... அலறினான் அப்துல் காதர்.

இதேவேளை குகையில் இருந்து தங்க நாணய மூட்டையை எடுத்து வந்த அலிபாபா, அதைத் தனது குதிரையின் மேல் ஏற்றினார். காலம் அலிபாபாவை முதியவராக மாற்றிவிட்டிருந்தது. இத்தனைக்கும் 50 வயதைத்தான் நெருங்கியிருந்தார் அலிபாபா. தானும் குதிரை மீது ஏறிய அலிபாபா, ஊரை நோக்கிச் செல்லத் தொடங்கினார். இவற்றையெல்லாம் குகையின் மேல்பகுதியில் ஒளிந்து பார்த்துக்கொண்டு இருந்தான் அப்துல் காதர். சுவடியில் இருந்து குறிப்புக்களை வைத்து அலிபாபாவை அவன் கண்டுபிடித்துவிட்டான்.

வாளை உருவிய அப்துல் காதர் குகைப் பக்கம் திரும்பினான். திறந்திடு சீசேம்! என்று அவன் சொன்னவுடன் கதவு திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தான்.

அலிபாபாவுக்கு புதிதாக ஒரு கவலை. அவருடைய மகள் சுல்தானா, நகரச் சந்தையில் நகைக்கடை வைத்திருக்கும் அப்துல் காதர் என்ற இளைஞனோடு பழகுவதாகத் தெரிய வந்தது. சுல்தானா திருமணம் செய்துகொள்ளவே மாட்டேன் என்று அடம் பிடித்தாள். அப்துல் காதரை மனதில் வைத்துத்தான் இப்படிச் சொல்கிறாள் என்பதை அலிபாபா உணர்ந்து கொண்டார்.

அப்துல் காதருக்கு முடிவுகட்ட விரும்பிய அலிபாபா, மாறுவேடம் போட்டுக்கொண்டு சென்று அவனைப் பார்த்தார். திடுக்கிட்டுப் போனார். திருடர் கூட்டத் தலைவன் ஹசனின் முகச்சாயல் அப்படியே இருந்தது அப்துல்காதரிடம்!

அதிர்ந்து போய் வீடு வந்து சேர்ந்தார். ஹசனின் மகனாகிய அப்துல் காதர், தன்னைப் பழிவாங்கத்தான் வந்திருக்கிறான் என்று அலிபாபா யூகித்தார். இப்போது என்ன செய்வது? மகளை எப்படிக் காப்பாற்றுவது?

அதிகாலையில் எழுந்த அவர், நடுங்கும் கைகளால் பரணிலிருந்து தனது வாளை எடுத்து பயிற்சியில் ஈடுபட்டார். எதிரே அமர்ந்திருந்த அலிபாபாவை ஏளனமாகப் பார்த்தான் அப்துல் காதர். இருவரும் அவனுடைய கடையில் தனி அறையில் இருந்தார்கள். 'நீ என் சொத்துக்களுக்காகத்தான் என் மகளை கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாய்' என்றார் அலிபாபா. 'உங்கள் சொத்துக்கள் எல்லாம் நீங்கள் உழைத்து சம்பாதித்தவையா?' 'அப்துல்காதர்! நீ யார் என்பது எனக்குத் தெரியும்!' 'அலிபாபா அவர்களே!' 'தங்கள் சொத்துக்களின் ரகசியம் எனக்கும் தெரியும்!' 'என்னோடு மோதாதே!' 'உன் தந்தையின் கதிதான் உனக்கு ஏற்படும்!' 'அதையும் பார்க்கலாம்!' 'மோதிப் பார்த்து விடலாம் வா!' 'தங்கள் சவாலை ஏற்றுக் கொள்கிறேன்!'

இரண்டு குதிரைகள் காட்டுப் பாதையில் புழுதியைக் கிளப்பியபடி விரைந்தன... குகை வாசலில் நின்றன அந்தக் குதிரைகள். அப்துல்காதரும் அலிபாபாவும் கீழே குதித்தார்கள்.

திறந்திடு சீசேம் அலிபாபா நடுங்கும் குரலில் கூற கதவு திறந்தது. இருவரும் உள்ளே நுழைய சாத்திக்கொண்டது...

நன்றாகப் பார்! உன் தந்தையும் 40 திருடர்களும் கொள்ளையடித்த செல்வம் இதோ கிடக்கிறது! இந்தச் செல்வத்துக்காகத்தானே என் மகளை மணம் செய்ய விரும்பினாய்? இதையெல்லாம் எடுத்துக்கொள்! என் மகளை விட்டு விடு... இல்லாவிட்டால் நீ உயிரோடு வெளியேறமுடியாது!...

அலிபாபாவின் அறைகூவலைக் கேட்ட அப்துல்காதர் சிரித்தான். அலிபாபா வாளை உருவினார். கிழவனால் என்ன செய்துவிட முடியும் என்ற எண்ணமா?

அப்துல்காதர் மறுபடியும் சிரித்தான். சினம் கொண்ட அலிபாபா சீறிப் பாய்ந்தார். அப்துல்காதரும் வாளை உருவ, இருவரும் கடுமையாக மோதிக்கொண்டார்கள். சில நிமிடங்களிலேயே



அலிப்பாபா களைத்துப் போனார். தாறுமாறாக வாளை வீசினார். அப்துல் காதர் சிரித்தபடியே நிதானமாகப் போரிட்டான். இறுதியில் வாளை ஓங்கி வீசினான் அப்துல் காதர். அலிபாபாவின் வாள் எங்கோ பறந்தது. அப்துல்காதரின் வாள் அலிபாபாவின் கழுத்தில் பதிந்து நின்றது. அலிபாபா செய்வதறியாது திகைத்து நின்றார்.

'அலிபாபா அவர்களே! 40 திருடர்களைப் பற்றிக் கூறிய நீங்கள் 41 ஆவது திருடனை மறந்து விட்டீர்களே...'

'என்ன? 41 ஆவது திருடனா... யாரது?' குழப்பமாகக் கேட்டார் 'அலிபாபா. யாரென்று தெரியவில்லையா?' அந்த 41ஆவது திருடன் நீங்கள்தான்! 'என்ன... நான் திருடனா?'

'ஆம், நீங்கள் திருடர்தான்! என் தந்தையோடு 40 திருடர்கள் கொள்ளையடித்த இந்தச் செல்வத்தை இத்தனை ஆண்டுகளாக நீங்கள் பயன்படுத்தி வருகிறீர்களே... நீங்கள் திருடர் இல்லையா?' என்றான் 'அப்துல்காதர். அலிபாபாவுக்கு நெஞ்சு படபடத்தது. கால்கள் தடுமாறின. அப்துல்காதர்... அது.. வந்து... நான்...' ஏதோ குழறினார். தமக்கு ஆபத்து வரும் என்று அஞ்சி உங்களைக் கொல்ல முயன்றார் என் தந்தை. நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள 38 பேரைக் கொன்றீர்கள்! நீங்கள் கொலைகாரர் இல்லையா? நீங்களும் திருடர்தான், கொள்ளைக்காரர்தான், கொலைகாரர்தான்.. இரைந்தான் அப்துல் காதர். இல்லை! இல்லை! நான் கொலை செய்ய... ஆ! அலிபாபா.முழுதாகச்சொல்லிமுடிக்க இயலாமல் அலறினார். இரு கைகளாலும் நெஞ்சைப் பற்றிக்கொண்டு கீழே சாய்ந்தார். அலிபாபா கண்விழித்துப் பார்த்தபோது, அவர் குகைக்கு வெளியே அப்துல்காதரின் மடியில் சாய்ந்திருந்தார்.

அலிபாபாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது. நான் உன் தந்தையாரைக் கொல்லவில்லை.. என்று தொடங்கிய அலிபாபா தன் அடிமை வேலைக்காரி மோர்க்கியானா 38 திருடர்களையும் கொன்ற கதையைக் கூறினார்.

அதற்கு அப்துல்காதர், என் தந்தையும் திருடர்களும் இறந்ததற்காக நான் வருந்தவில்லை... மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட இந்தச் செல்வத்தை மக்களுக்கே திருப்பித்தர வேண்டும் என்பதுதான் என் ஆசை! இந்த குகையின் ரகசியம் எனக்குத் தெரியும். நினைத்திருந்தால் இதையெல்லாம் எப்போதோ வாரிச் சென்றிருக்க முடியும். உங்கள் மகள் மீது நான் கொண்டிருப்பது உண்மையான அன்பு! அவளை மணந்து, முறைப்படி உங்கள் மருமகனாகி இந்தச் செல்வத்தை எளியவர்களுக்கு வழங்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன்! என்றான் அப்துல் காதர். அலிபாபாவின் முகத்தில் ஒரு மகிழ்ச்சி மின்னல் வீசி அடங்கியது. 'அப்படியே நடக்கும் அப்துல்காதர்! அப்படியே நடக்கும்' என்றார் அவர்.

■ ரூபி



இலங்கையில் கிடைக்கும் உப்பு வெள்ளை நிறம்.
பிரிட்டனில் கிடைக்கும் உப்பு பொன் நிறம் கலந்த சற்று சிவப்பு நிறமாகக் காணப்படும்.
ஹங்கேரியில் கிடைக்கும் உப்பு நீல ரத்தினம் போன்று காணப்படும்.

சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி, சுதுமலை

## ஒருவரிச் செய்திகள்

- செம்பை விட வெள்ளி எளிதில் மின்சாரத்தைக் கடத்தும். நமது உடலில் மிகத் தூய்மையான இரத்தம் நமது சிறுநீரக அறையில் காணப்படுகிறது.
- வரிக்குதிரைகளில் உடலில் இருப்பது வெள்ளைக் கோடுகளாகும்.
- உள்ளங்கையில் ஒரு சதுர அங்குலத்துக்கு சுமார் மூன்று ஆயிரம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.
- சுறா மீன் ஒரு இடத்தில் நிலைத்து மிதக்காது.
- முதன் முதலில் துப்புத் துலக்க துப்பறியும் நாயைப் பயன்படுத்திய நாடு பிரான்ஸ்.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

## விரல்கள் பத்து

கைகள் இரண்டு - அதில்
விரல்கள் பத்து - இதில்
பெரு விரல் அழுத்தும்!
சுட்டு விரல் சுட்டும்!..

நடுவிரல் மிகப் பெரிதாம்.
மோதிர விரலில் மோதிரமாம்.
சின்ன விரல் கடைக்குட்டியாம்.
விரல்களையறிந்தால் வெற்றியாம்

## முதன் முதலில்....

- உலகில் முதன் முதலில் தேசியக் கொடியைப் பயன்படுத்திய நாடு எது?
  டென்மார்க்
- காகிதத்தை முதன் முதலில் தயாரித்த நாடு எது?
  சீனா
- முதன் முதலில் பெண்களுக்காக ஸ்கூட்டர் தயாரித்தவர்கள் யார்?
  இத்தாலியர்
- மனிதன் முதன் முதலாகப் பயன்படுத்திய தினை வகை எது?
  கோதுமை
- முதன் முதலில் நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகப்படுத்தியவர்கள் யார்?
  ஜேர்மனியர்
- நாணயங்களை முதன் முதலாக தயாரித்தவர்கள் யார்?
  கிரேக்க நாட்டார்
- உயில் எழுதும் வழக்கத்தை முதலில் தோற்றுவித்தவர்கள் யார்?
  ரோமானியர்கள்
- விமானம் தாங்கிக் கப்பலை முதலில் உருவாக்கியவர் யார்?
  பிரிட்டிஷ்காரர்
- நினைவுத் தபால்களை முதன்முதலில் வெளியிட்ட நாடு எது?
  அமெரிக்கா
- முதன் முதலில் இரட்டைத் தட்டு ரயிலை அறிமுகப்படுத்தியவர் யார்?
  அமெரிக்கர்

சி.தர்சனா,
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.







# வவுனியாவில் பிருந்தாவனம் மாதச் சஞ்சிகை வெளியீடு!

வளரிளம் படைப்பாளிகள், கலைஞர்களை அடையாளப்படுத்தல், ஊக்குவித்தல். இளையோர்கள், மாணவர்கள், சிறுவர்களின் வாசிப்புத்திறனை அதிகரித்தல் என்ற நோக்கோடு ஜனரஞ்சக சஞ்சிகையாக வவுனியாவிலிருந்து பிருந்தாவனம் மாதச்சஞ்சிகை வெளி வந்துள்ளது. இந்தச் சஞ்சிகைக்கான அறிமுக வெளியீட்டு விழா, வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சஞ்சிகையின் முதல் பிரதியை, பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பெற்றுக்கொண்டார். தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவில், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா.சேனாதிராசா, வவுனியா வடக்கு முன்னாள் உதவி அரச அதிபர் க.ஐயம்பிள்ளை, சுரேந்திரன் நற்பணி மன்ற அமைப்பாளர் வே.சுரேந்திரன், வைத்தியர் இரத்தினம் தருமு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் பரமேஸ்வரன், அண்ணாநகர் அ.த.க.பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி நடேசமூர்த்தி, அறிவிப்பாளர் என்.பி.பிரதாப், கலைஞர் மாணிக்கம் ஜெகன் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வவுனியாவைக் குளிர்வித்த முத்தமிழ் சங்கமம்

மேழிக்குமரன்

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்பது மூதுரையில் ஔவையின் வாக்கு. வவுனியா கடந்த சிலமாதங்களாக வறண்ட பூமியாகக் காய்ந்து கிடந்தது. கலாநிதி ஆறு.திருமுருகன், பேராசிரியர் மகேஸ்வரன், பேராசிரியர் விசாகரூபன் போன்ற தமிழ் அறிஞர் பெருமக்கள் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் முத்தமிழ் சங்கமம் என்ற நிகழ்வில் கலந்துகொள்ள வவுனியாவுக்கு வருகை தந்திருந்தனர். விழா தொடங்கி சிறிது நேரத்தில் மழை மாறி மாறிப் பெய்ததில் வவுனியா குளிர்ந்தது. மக்களும் முத்தமிழ் சங்கம விழாவின் தமிழ் மழையினாலும், மாரி மழையினாலும் மனம் குளிர்ந்தனர்.



வவுனியாவில் நடைபெற்ற இனிமையான, பெறுமதிமிக்க நிகழ்வான முத்தமிழ் சங்கமம் 2014, சித்தத்துள் தித்தித்தது என்றால் அது மிகையாகாது. சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் வவுனியாக் கிளையினர் நடத்திய முத்தமிழ் சங்கமம் என்ற சிறப்பு நிகழ்ச்சி, வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில், 16.08.2014 அன்று, பேரவையின் தலைவர் சைவசித்தாந்த முதுமாணி சிவ.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.



பிற்பகல் 2.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது. விருந்தினர்களாக வருகை தந்திருந்த அறிஞர் பெருமக்கள் மாலை அணிவித்து மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். விழாவின் முதன்மை விருந்தினராக வருகை தந்திருந்த. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் மங்கலவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஏனைய விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றினர். அதனைத் தொடர்ந்து பஞ்சபுராணத்தை திருமதி சௌந்தரராஜகுருக்களும் தமிழ்த் தாய் வாழ்த்தை ஜெ.சதுசனும் வழங்கினர்.

தொடர்ந்து வீராச்சாமி கரன் குழுவினரின் மங்கலவாத்திய நிகழ்வு நடைபெற்றது. எல்லோர் வாயும் முணுமுணுக்கக் கூடிய இனிமையான மூன்று பாடல்களை நாதஸ்வரத்தில் வாசிக்க அதற்கேற்றால்போல் தவில் வாசித்து அனைவரினதும் கரகோசத்தைப் பெற்றனர். அடுத்து நடைபெற்ற வவுனியா பூந்தோட்டம் நர்த்தனாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் அனைவரினதும் வரவேற்பைப் பெற்றது.

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் நிறுவுநர் ஞானச்சொல் வித்தகர் சிவகணேஸ்குமார் தனது நிறுவுநர் உரையில் பேரவை ஆரம்பிக்கப்பட்ட காரணத்தைக் கூறினார். அது லண்டனில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் வவுனியாவில் கிளை பரப்பியது. வவுனியாக் கிளையினர் இன்று தமிழுக்கு விழா எடுப்பது அதுவும், முத்தமிழ் விழாவாக எடுப்பது மகிழ்ச்சியாக உள்ளது. லண்டனில் நாம் விழா எடுத்தபோது, வர்த்தகப் பெருமகன் அகிலன், தம்பதியினர் எமக்கு அனைத்து உதவிகளும் புரிந்தனர். நாம் வவுனியாவில் தமிழுக்கு விழா எடுக்கிறோம் என்றவுடன் அவர்கள் குடும்பத்துடன் புறப்பட்டு வந்து முத்தமிழ் சங்கமம் சிறப்புற அனைத்து உதவிகளும் புரிந்துள்ளனர் என்று பாராட்டினார். அகிலன் தம்பதியினர் மேடையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச இந்து இளைஞர் பேரவையினர் தமிழில் பல்வேறு துறைசார்ந்த ஆறு அறிஞர் பெருமக்களுக்கு விருது வழங்கி கௌரவம் செய்தமை விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. ஒவ்வொரு அறிஞர்களையும் பற்றிய சிறப்புக் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. வருகை தந்திருந்த விருந்தினர்களான அறிஞர் பெருமக்களால் ஒவ்வொருவரும் பொன்னாடை போர்த்தி, சந்தணமாலை அணிவித்து, சுடரொளி என்ற பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கவிஞர். குரும்பையூர். த.ஐங்கரன் தலைமையில் 'உறவுகள் மேம்பட' என்ற தலைப்பில் கவியரங்கு நடைபெற்றது. கவியரங்கில் இன்றைய யதார்த்தபூர்வமான செய்திகளை அனைவரும் கவிதை வடிவில் தந்தமையால் அனைவரும் ரசித்து மகிழ்ந்தனர்.



தமிழின் பெருமை என்ற தலைப்பில், செல்வன். செ.நினோஜ் சிற்றுரையாற்றினார். தமிழ் பற்றிய பல செய்திகளை அவர் தொகுத்தளித்தமை அவரது பேச்சின் சிறப்பம்சமாக அமைந்தது. வவுனியா வாத்திய கலாலய மாணவர்களின் வயலின் இசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. கலாவித்தகர் நா.செந்தூர்ச்செல்வனின் நடனம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. செல்வி கம்ஸாவின் நடனமும் அனைவரையும் ஈர்த்தது.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெற்றது. 'முத்தமிழில் பெரிதும் தலைமைதாங்க வல்ல தமிழ் இயல்தமிழா? இசைத் தமிழா? நாடகத் தமிழா?' என்ற தலைப்பில், வவுனியா தமிழ்ச் சங்க செயலாளர் தமிழருவி. த.சிவகுமாரன் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. இயல் தமிழே என்ற தலைப்பில் வி.பிரதீபன், எஸ்.தவபாலசிங்கம் ஆகியோரும், இசைத் தமிழே என்ற தலைப்பில் ல.சதீஸ், கு.சுதாகரன் ஆகியோரும், நாடகத் தமிழே என்ற தலைப்பில் சிவஸ்ரீ.நா.பிரபாகரக்குருக்கள், ஜெ.திருவரங்கம் ஆகியோரும் மிகவும் திறமையாக பல செய்திகளை உள்ளடக்கி தமது வாதங்களை முன்வைத்தனர். தமிழருவி சிவகுமாரன் தனது தலைமையுரையை மிகச்சிறப்பாக அரங் கேற்றினார்.


சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் ல.சதீஸ்குமாரின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது. நேரம் சற்று அதிகமாகியிருந்தாலும் சிறப்பான நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்த நிறைவோடு மக்கள் சென்றனர்.

# நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு யாழ். படைத் தலைமையகம் நடத்திய நிகழ்வு










யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்துடன் இணைந்து லண்டன் வியாபார தொழில்நுட்பக் கல்லூரி நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி நடத்திய மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, பாடல், சமயப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேராவும் மற்றும் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் எஸ்.மூர்த்தி, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உட்பட மற்றும் படை அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். விருந்தினர்கள் கச்சேரி நல்லூர் வீதியில் இருந்து மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். நிகழ்வில் அருந்ததி ஸ்ரீரங்கநாதன், வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாணவிகளின் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-86)







கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற பௌர்ணமி தின நிகழ்வுகளில் பாரம்பரிய கலை, கலாசாரத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். நிகழ்வில் குறித்த பாடசாலை மாணவரின் வரவேற்பு நடனம் மற்றும் காத்தவராயன் கூத்து, யோகபுரம் மகா வித்தியாலய மாணவிகளின் வில்லுப்பாட்டு ஆகியவை இடம்பெற்றன.(வ-500)

# சமகாலக் கலைகளின் தோற்றம் - ஒரு பார்வை

திருமதி துஜிபா விஜயாலயன்

இலங்கையின் கலை வளர்ச்சியென்பது பல நூற்றாண்டுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அது சில கால இடைவெளிகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட காலங்களிலேயே தன்னை ஒரு சிறப்பான வெளிப்பாடாக நிலை நிறுத்தியிருந்துள்ளது. காலனித்துவச் செல்வாக்கின் காரணமாக பல்வேறு கலைப் பாரம்பரியங்கள் தோற்றம் பெற்றாலும் இலங்கையின் தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்காகவும்,தமது தேசப்பற்றை உயர்த்திக் காட்டுவதற்கும் உத்வேகம் கொண்டு எழுந்த இலங்கையின் சிறப்பான கலைப் பாரம்பரியங்களை உள்ளடக்கியதாக 43 ஓவியக் குழுமம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கையின் 20ஆம் நூற்றாண்டின் இறுதிச் சகாப்தத்தில் சமூகச்சூழல், பொருளாதாரச் சூழல், அரசியல் சூழல் போன்றவற்றில் ஏற்பட்ட தொடர்ச்சியான மாற்றம் சமகாலக் கலைகள் என்ற மிகப்பெரிய கலைப் பாரம்பரியம் உருவாக வழிவகுத்தது.

இலங்கையின் கலையைப் பொறுத்தவரையில் இது பெரிய வெடிப்பாக உருமாறி இதன் கலைச் சிதறல்கள் இலங்கையின் கலை வெளிப்பாட்டாளர்களை சர்வதேச மட்டத்தின் பல்வேறு நிலைகளுக்கு எடுத்துச் சென்றது. இதன் வெளிப்பாடுகள் 1990 ஆம் ஆண்டளவிலேயே மக்களைத் தனது பக்கம் அதிகம் ஈர்த்துக்கொண்டது. இதனால் இது தொண்ணூறுகளின் கலைப் போக்கு என அழைக்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணங்களாக சில விடயங்களைக் குறிப்பிடலாம். இதனை வெளிப்படுத்துவதற்கான சமூகச்சூழல் சாதகமாகக் காணப்பட்டமையும், இலங்கையின் உள்நாட்டுப் போர் இந்தக் காலகட்டத்தில் உக்கிர நிலையை அடைந்தமையுமாகும். பல்வேறு கலை வரலாற்று ஆசிரியர்களாலும் இது தொண்ணூறுகளின் போக்கு என்றே குறிப்பிடப்படுகின்றது.


ஆனாலும் இது யாழ்ப்பாணத்தில் 1980 களில் இனங்காணப்பட்டதாக அறியக் கூடியதாக இருக்கின்றது (சனாதனன் 2010: 39). இதற்குக் காரணம் யாழ்ப்பாணம் நேரடியாகப் போர்ச்சூழலால் தாக்கமுற்றிருந்தமையாகும். சமகாலக் கலைகள் உருப்பெறுவதற்கு போர்க்காலச் சூழல் என்பது மிகப் பெரிய தூண்டுகோலாகும். ஐரோப்பாவில் இந்தச் சமகாலக் கலைகளின் தோற்றம் 1960 இல் இனங்காணப்பட்டது. இதற்கு 2ஆம் உலகப்போரே காரணமாகும்.

போர்க்காலச்சூழல் ஒரு வழிப்பார்வை கொண்ட மனித சிந்தனையை பல்வேறு வழிகளில் சிந்திக்கவைக்கின்றது. இதன் மூலம் புதிய சிந்தனைகள் உருவாகின்றன. இதற்கான சிறந்த வெளிப்பாட்டுச்சாதனமாக சமகாலக்கலைகள் விளங்குகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு பல்வேறு மட்டங்களில் நிகழுகின்ற தாக்கங்களும், செயற்பாடுகளும் இலங்கையின் சமகாலக்கலை என்ற கலை வட்டத்தைச் சிறப்பாக இயக்குகின்றன. இலங்கையின் பாரம்பரியக்கலைகள் புறக்கணிக்கப்படுதல், பொருளாதார நெருக்கடிகள், பெரும்பான்மை சிறுபான்மை என்ற இன வேறுபாடுகள், வறுமை காரணமாக எதிர்நோக்குகின்ற பாலியல் ரீதியான நெருக்கீடுகள், அரசியல் ரீதியான அழுத்தங்கள் போன்றவை சமகாலக் கலைக் கலைஞர்களின் கலை வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன.



சமகாலக்கலை வெளிப்பாடுகளின் கருப்பொருள் ஒன்றாக இருந்த போதும், அதற்கு முழுவடிவம் கொடுக்கப்படும் போது ஒன்றுக்கு மேற்பட்ட நுட்பங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட ஊகங்கள் கொண்டே கட்டமைக்கப்படுகின்றன. இந்தக் கலைப்படைப்புக்களைப் பொறுத்தவரைக்கும் அது காட்சிப்படுத்தப்படும் முறை, அதற்காகப் பயன்படுத்தப்படும் இடம் என்பவற்றைப் பொறுத்தே அதன் கலை மொழியானது பார்வையாளர்களிடம் தனது கருத்துக்களை உறுதியாகவும், சுதந்திரமாகவும் எடுத்துக் கூறுகின்றது.

இலங்கையின் சமகாலக்கலையானது போர் என்பதையே தனது கருப்பொருளாகக் கொண்டு அதிகளவு உணர்வுகளைப் பேசுகின்றபடியால் அதனைப் போர்க்கால வெளிப்பாட்டுக்கலை என அழைக்கலாம் என்று சசாங்க பெரேரா தனது "Artists Remember; Artists Narrator: Memory and Representation in Contemporary Sri Lankan Visual Arts" என்ற நூலில் குறிப்பிடுகின்றார் (சசாங்க 2011: 07). 1992ல் ஜெகத் வீரசிங்கவால் நடத்தப்பட்ட "கங்சாவ என்ற ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைக்காட்சி என்பன சமகாலக்கலை என்றால் என்ன என்பதைப் பற்றி எல்லோரும் அறிவதற்கு வழிவகுத் தன. 1994 இல் சாமினிப் பெரேராவால் ஒழுங் கமைக்கப்பட்ட "New approach in contemporary SriLankan art" என்ற சம காலக்கலைகளின் காண்பியக்கலைக் காட்சி இலங்கையின் சமகாலக்கலைக் கலைஞர் களின் வெளிப்பாடுகளை சர்வதேச அளவில் கொண்டு சென்றது. இது இலங்கைச் சம காலக்கலை வளர்ச்சியில் மிகவும் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது.



இதுவே பல்வேறு கலைக்குழுமங்களும், சர்வதேசத் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களும் உருவாகக் காரணமாக அமைந்தது. அவையாவன தீர்த்த சர்வதேசக் கலைஞர்களின் ஒன்றியம், ஹெம்பல் கலைக்கூடம், ஷாசிக்கா பெர்னாண்டோ கலைக்கூடம், ஹெறாடேஜ் கலைக்கூடம், பெயபூட் கலைக்கூடம் (Bare foot gallery), COCA கலைக் குழுமம் போன்றனவாகும். மேலும் களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியல் பிரிவும், காண்பிய மற்றும் ஆற்றுகைக் கலைகளுக்கான நிறுவனமும் (Institute of Visual and performing arts), களனிப் பல்கலைக் கழகத்தின் அழகியல்பிரிவு, விபவி நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பிரிவு போன்றவை தமது பங்களிப்பைச் சிறந்த முறையில் வழங்கி வருகின்றன.

இந்தக் காலத்தின் சிறந்த கலைஞர்களாக ஜெகத் வீரசிங்க, சந்திரகுப்த தேனுவர, கிங்ஸ்லி குணத்திலக்க, பண்டு மன்னம்பே, தாமோதரம்பிள்ளை சனாதனன், புஸ்பகுமார கோரளகெதர, பால பொதுபிட்டிய, ஜகத் ரவீந்திரா, முகமட் காடா, பிரதிப் சந்திரஸ்ரீ, ஜீ.ஆர்.கொன்சன்ரைன், றுவிங்கா மடவெல, அனோலி பெரேரா, வாசுகி ஜெயசங்கர், வைதேகி ராஜா, அனரமா விஜயவர்த்தன, அனோமா ராஜகருணா போன்ற பல்வேறு கலைஞர்கள் தமது பங்களிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றனர். இந்தச் சமகாலக் கலையானது அதிகளவில் பெண்களின் பங்களிப்பைத் தன்னகத்தே கொண்டிருப்பதைக் காணலாம்.

சமகாலக்கலை என்பது இலங்கையில் பல்வேறு சமூக, பொருளாதார மட்டங்களின் வேறுபாடுகளையும், இனக்குழுமங்களின் பாகுபாட்டையும், மொழி வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், உடைத்தெறிந்து இந்தக் காலத்துக் கலைஞர்கள் சகலரையும் 'படைப்பாளிகள்' என்ற ஒரு புள்ளியின் சுழற்சியில் இணைய வைக்கின்றது.






வரதராஜன் ஆதித்யனின் மிருதங்கம் வாய்ப்பாட்டு அரங்கேற்றம், வரதராஜன் ஆரபியின் வீணை, நாட்டிய அரங்கேற்றம் ஆகியன ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது...